விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்
Thamil Naatham

இராகம் 01 | தாளம் 78 | வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 19 வெள்ளிக்கிழமை (05.10.2012) | பக்கங்கள்: பதினாறு

விஷ்ரா வீடியோ விஷன்
Wedding Decorations
K.K.S.Road, Kondavil west
Kondavil. - T.P : 0777474498

## மாகாண சபையின் கருத்தை ஆளுநர் தெரிவிக்க முடியுமா?

# உயர்நீதிமன்றம் மட்டுமே முடிவெடுக்க முடியும்

### மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவிப்பு

(கொழும்பு)

"கலைக்கப்பட்ட மாகாண சபை ஒன்றின் சார்பில் அதன் கருத்து நிலைப்பாடு இதுதான் என வெளிப்படுத்தும் அதிகாரம் அந்த மாகாணத்தின் ஆளுநருக்கு உண்டா? இல்லையா? இது குறித்து அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப வியாக்கியானம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இவ்வாறு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று தெரிவித்தது.

அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு வியாக்கியானம் செய்யும் சட்ட அதிகாரம் நாட்டின் சிரேஷ்ட நீதிமன்றமான உயர்நீதிமன்றத்துக்கு மட்டுமே உண்டு. ஆதலால் இந்த விவகாரம் உயர்நீதிமன்றத்தின் கவனத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முடிவு செய்தது.

வடமாகாண சபை தொடர்பில், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியை எதிர் மனுதாரராகக் குறிப்பிட்டு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தாக்கல் செய்திருந்த 'ரிட்' (ஆணைகோர்) மனுவை நேற்றுப் பரிசீலனைக்கு எடுத்த கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் மேற்படி தீர்மானத்துக்கு வந்தது.

கடந்த ஒகஸ்ட் மாதம் 10ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலில் அறிவிக்கப்பட்டு, நாடாளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் சேர்க்கப்பட்டிருந்த 'திவிநெகும' எனப்படும் வாழ்வெழுச்சிச் சட்ட மூலத்தை ஒட்டியே இந்த மனுவை மாவை சேனாதிராஜா எம்.பி. தாக்கல் செய்திருந்தார்.

02

## இராணுவ சீருடைக்கு ரூ.200 கோடி

(கொழும்பு)

இராணுவத்தினருக்கு தேவையான சீருடைத் துணிகளை கொள்வனவு செய்வதற்காக 200 கோடி ரூபாவுக்கு அமைச்சரவை ஒப்புதலளித்துள்ளது.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரான ஜனாதிபதி, அமைச்சரவையில் சமர்ப்பித்த தீர்மானத்தையடுத்து இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

முப்படையினர், பொலிஸார், விசேட அதிரடிப்படையினர், சிவில் பாதுகாப்புத் திணைக்களம், தேசிய மாணவர் படையணி ஆகியோருக்கு சீருடைகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

02

## கிளிநொச்சி மாணவர்கள் சென்ற பஸ் பளையில் விபத்து: 7பேர் காயம்

(கிளிநொச்சி)



கிளிநொச்சியில், மாணவர்களை ஏற்றிச்சென்ற பஸ்ஸொன்று விபத்துக்குள்ளானதில் ஆசிரியர் ஒருவர் உட்பட ஏழு மாணவர்கள் காயமடைந்த நிலையில் பளை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் நேற்றுக் காலை நடைபெற்றது.

கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவர்களை

02

## கூட்டமைப்பின் உள் முரண்பாடுகளை முடிவுக்குக் கொண்டு வாருங்கள்

### பங்காளிக் கட்சிகளிடம் மனோ கணேசன் கோரிக்கை

(கொழும்பு)

தமிழ் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஐந்து கட்சிகளும் தமது முரண்பாடுகளுக்குத் தீர்வுகாண வேண்டுமென்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் கோரியுள்ளார். இலங்கை தமிழரசு கட்சி, தமிழர் விடுதலை கூட்டணி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம் மற்றும் புளொட் ஆகிய ஐந்து கட்சிகளும் தமக்கு இடையிலான உள்முரண்பாடுகளை தொடர்ந்து நீடித்துக்கொண்டு போகாமல் முடிவு காண வேண்டும். அத்துடன் தமிழ் தேசிய கூட்டமைப்பை பலமிக்க தமிழ் தேசிய ஜன நாயக அரசியல் இயக்கமாக கட்டியெழுப்பும் நோக்கில் செயலாற்ற வேண்டும். இதுவே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் விடுத்திருக்கும் அறிக்கை வருமாறு,

அசாத்திய பொறுமையுடனும் ஒருவித சலிப்புடனும் கூட்டமைப்பு கட்சிகளின் மத்தியிலான முரண்பாட்டு செய்திகளை நாட்டிலும் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் இனமும் சமூக பொறுப்புள்ள தமிழ் ஊடகங்களும் அவதானித்துக்கொண்டு இருக்கின்றன.

கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்குள் பல வருட காலமாக நீடித்து வந்த உள் முரண்பாடுகள் பற்றி கருத்து தெரிவிப்பது அரசியல் நாகரீகம் அல்ல என்பதை நிச்சயமாக

02

## மன்னார் நீதிமன்றம்: தாக்குதல் சந்தேக நபர்களுக்கு 18 வரை விளக்கமறியல்

(மன்னார்)

மன்னார் நீதிமன்றம் மீதான தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்ட 43 பேரையும் எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மேலதிக நீதவான் ஆர்.எல்.எம். திஸாநாயக்க நேற்று உத்தரவிட்டார்.

மன்னார் நீதிமன்றம் மீதான தாக்குதல் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று மன்னார் நீத வான் நீதிமன்றத்தில்

02

## உள்ளூராட்சி சட்ட மூலத்திற்கு 'பவ்ரல்' அமைப்பு எதிர்ப்பு

(கொழும்பு)

உத்தேச தேர்தல் திருத்தத்திற்குப் 'பவ்ரல்' என்று அழைக்கப்படும் சுதந்திரமானதும் நீதியானதுமான மக்கள் இயக்கம் என்ற அமைப்பு எதிர்ப்பு தெரிவித்துள்ளது. உள்ளூராட்சிச் சபை வார்ட்டுக்களின் எல்லைகளை நிர்ணயிப்பதற்கான கமிட்டியை நிர்ணயிக்கும் அதிகாரம் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு வழங்கப்படுவது தவறானது என்று பவ்ரல் அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

உள்ளூராட்சிச் சபைகளுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது தொடர்பாக இரண்டு சட்ட மூலங்களை அடுத்த வாரம் அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க உள்ளது. விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையும் தொகுதி ரீதியிலான தேர்தல் முறைமையையும் இணைக்கின்ற வகையில் இந்தத் திருத்தம் முன்வைக்கப்படவுள்ளது.

உத்தேச சட்டமூலத்தின்படி தொகுதி நிர்ணயக் கமிட்டிகளை நியமிப்பதற்கும், அதிலிருந்து ஆட்களை நீக்குவதற்கும், ஆட்களை நியமிப்பதற்கும்

02

## காலிமுகத்திடலிலுள்ள இராணுவ நிலம் இந்திய நிறுவனத்திற்கு

### அமைச்சர் கெஹலிய

(கொழும்பு)

கொழும்பு காலிமுகத்திடலில் இராணுவத்தினருக்கு சொந்தமான பகுதியை 140 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டுக்கென ஐ.டி.சி. என்ற ஹோட்டல் இந்திய நிறுவனத்திற்கு வழங்க அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

இது குறித்து நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல கருத்து வெளியிட்டார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினருக்கு சொந்தமான பகுதியில் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதி பெற்றுள்ள ஐ.டி.சி. இந்திய நிறுவனம் இந்தியாவின் இரண்டாவது மிகப்பெரிய ஹோட்டல் துறை நிறுவனமாகும்.

02

# இலஞ்சம் மற்றும் ஊழல்: 19 பொலிஸார் கைது

## ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினர் நடவடிக்கை

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் 19 பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இவ்வருடம் குற்றச் செயல்களில் ஈடுபட்ட பொலிஸாரின் எண்ணிக்கை அதிகம் என பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வருடத்தில் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் பேரில் 14 பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளனர்.

2009ஆம் ஆண்டில் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் 26 பொலிஸார் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதில் பாலியல் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யபட்டுள்ளனர்.

வழக்கொன்றில் இருந்து தங்களுடைய கணவன்மார்களை மீட்டுத் தருமாறு இரு பெண்கள் விடுத்த கோரிக்கைக்கு இலஞ்சமாக அவர்களுடன் பாலியல் தொடர்பு கொள்ள அழைத்ததன் போரில் இரு பொலிஸ் உத்தியோகத்தர்களும் அநுராதபுரம் பகுதியில் கைது செய்யப்பட்டனர்.

குறித்த இரு பொலிஸாரும் ஹோட்டல் அறைகளில் பெண்களுடன் இருந்த போது இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை இந்த வருடத்தின் பாலியல் இலஞ்சம் பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 500இற்கும் அதிகம் என அரச பத்திரிக்கை ஒன்று வெளியிட்டுள்ள தகவலை பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் மறுத்துள்ளது.

பொலிஸ் நிலையங்களிலும், பொலிஸ் ஆணைக்குழுவிலும் பதிவு செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளின் அடிப்படையில் குறித்த பத்திரிக்கை செய்தி அடிப்படை ஆதாரம் அற்றது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

# மஹியங்கனையில் யானை அட்டகாசம்

மஹியங்கனை மகாவலி கங்கைக்கு அருகில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு கேன் கசிப்பை அருந்தியதாகக் கூறப்படும் காட்டு யானையொன்று பிரதேசத்தில் அட்டகாசம் நேற்று முன்தினம் சம்பவமொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

சுமார் 15ஆயிரம் ரூபா பெறுமதியான மேற்படி கசிப்பு முழுவதையும் அது அருந்தியுள்ளதால் போதை அதிகமான நிலையில் அப்பகுதியிலுள்ள மரங்கள் அனைத்தையும் முறித்துத்தள்ளியுள்ளதுடன் கலவரத்தை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன், சட்டவிரோத கசிப்பு உற்பத்திக்காக வைக்கப்பட்டிருந்த பரல்கள் அனைத்தையும் மேற்படி யானை சேதமாக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# பூட்டப்பட்ட கோட்டடி கொல்களம் மீண்டும் திறப்பு

கொட்டடியில் அமைந்துள்ள கொல்களத்தை நேற்று நேரடியாக சென்று பார்வையிட்ட யாழ்.மாநகரசபை மேஜர் திருமதி. யோகேஸ்வரி பங்குணராசாவும் மாநகர சபை அதிகாரிகளும் அதனை உடனடியாகத் திறப்பதற்கான அனுமதியை வழங்கினார். பொய்யான தகவல்களின் அனுமதியை வழங்கினர். பொய்யான தகவல்களின் அடிப்படையில் இந்தக் கொல்களம் நேற்று முன்தினம் மூடப்பட்டது. அதிகாரிகள் நேரில் கண்டிறிந்ததையடுத்தே மீண்டும் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

## நிதி திரட்டுகின்றது தமிழ்க் கூட்டமைப்பு

மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்க தமிழத் தேசியக் கூட்டமைப்பு வேலைத் திட்டங்களை ஆரம்பித்துள்ளது.

இதற்கென வவுனியா மாவட்ட வியாபாரிகள் மற்றும் தமிழ் மக்களிடம் உதவிகளைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# கூட்டமைப்பின் உள்முரண்பாடுகளை...(தொடர்)

நானறிவேன். ஆனால், இன்று பகிரங்கமாகியுள்ள முரண்பாட்டு செய்திகள், கட்சி அரசியலுக்கு அப்பால் சென்று துன்பங்களை சுமந்து நிற்கும் தமிழர்களின் தேசிய இருப்பை சவாலுக்கு உள்ளாக்கும் விடயமாக மாற்றி வருகின்றன. இதனாலேயே இதைக் கவலையுடன் சொல்ல வேண்டியுள்ளது.

உள் முரண்பாடுகள் பகிரங்கமாகும் போது முதலில் பலியாவது மக்கள் நம்மீது வைத்துள்ள நம்பிக்கை தான். சொல்லொணா அகோர நினைவுகளையும், அவல நிஜங்களையும் சுமந்து வாழும் தமிழ் மக்களுக்கு இன்று எஞ்சி இருப்பது நம்பிக்கை என்ற ஒன்றே ஒன்றுதான். இந்த நம்பிக்கையும் கலைந்து போகுமானால் அது துர்பாக்கியமாகும். அது கோர வன்னி யுத்தம் தந்த வலிக்கு சமாந்திரமானதாகும்.

உலக வல்லரசுகளின் முன்னுரிமைப் பட்டியலில் நமது விவகாரம் முதல் வரிசையில் இருந்தால் கட்சிகள் செயற்படாவிட்டாலும் கூட தனது தேவைக்காகவேனும் சர்வதேச உலகம் நம்மை தள்ளி அழைத்து சென்று தீர்வுக்கு வழி காட்டிவிடும்.

ஆனால், துரதிஷ்டவசமாக உலக நாடுகளின் முன்னுரிமைப் பட்டியலில் நமது விவகாரம் முன் வரிசையில் இல்லை. இந்த கசப்பான உண்மையை பகிரங்கமாகச் சொல்வதற்கு நாம் தயங்க வேண்டியதில்லை. இது பற்றி தமிழ் மக்களுக்கு பொய்யான மாய நம்பிக்கைகளை தர முடியாது.

எனவே சர்வதேசம் என்ற ஒரே வார்த்தைப் பிரயோகம் மூலமாக மாத்திரம் நமது எதிர்பார்ப்புகள் தீர்ந்து விட போவதில்லை என்பதை நாம் புரிந்து கொண்டால் தான் நம்மை ஜனநாயக ரீதியாக தயார்படுத்திகொள்ளலாம். சர்வதேசம் ஒத்துழைப்பு வழங்கும். ஆனால் அந்த ஒத்துழைப்பை உள்வாங்க காத்திரமான கட்டமைப்பு இருக்க வேண்டும்.

இந்த காரணத்தினாலேயே இலங்கை தமிழர்களின் அரசியல் தலைமைகள் உலகின் ஏனைய இன விடுதலை இயக்க தலைமைகளை விட அதிகமாக காத்திரமாக முழு நேரம் உழைக்க வேண்டும் என்பது காலத்தின் கட்டாயம். காத்திரமான முழு நேர உழைப்புக்கும் ஆளுமைக்கும் கூட்டமைப்பில் பஞ்சமில்லை என நான் நம்புகிறேன். எனவே உழைப்பையும் ஆளுமையையும் முன்னெடுக்கும் எழுச்சியுடன் கூடிய கட்டமைப்பை கொண்ட கட்சி இயந்திரம் தான் தேவைபடுகின்றது.

ஆனால் இன்று வானத்தில் பறக்கும் பறவையை பிடிப்பது என்பதை விடுத்து கையில் இருக்கும் பறவையும் நம் கையில் இருந்து பறந்துவிடுமோ என்ற பயம் மக்களுக்கு வந்து விட்டது. புதிய எழுச்சியுடன் கூடிய கட்டமைப்பை ஏற்படுத்துவது என்ற இலக்கை நோக்கி நகர்வது என்பதை விடுத்து இப்போது கையில் இருக்கும் கட்டமைப்பும் சிதையுமானால் அது வரலாற்று தவறாகிவிடும்.

கூட்டமைப்பில் இடம்பெறும் எந்த ஒரு கட்சிக்கும் சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ எமது கருத்துகள் அமையவில்லை. தமிழ் மக்களை சார்ந்தே நமது கருத்துகள் அமைகின்றன. உள் முரண்பாடுகளை தொடர்ந்து நீடித்துக்கொண்டு போகாமல் முடிவுக்கு கொண்டு வாருங்கள். ஜனநாயக கட்டமைப்பை ஏற்படுத்தி கூட்டமைப்பை வலுப்படுத்துங்கள். இதுவே இன்று நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழும் தமிழ் மக்களின் ஏகோபித்த எதிர்பார்ப்பு. இந்த மக்கள் குரலையே நாம் இங்கு எதிரொலிக்கின்றோம் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விசாரணைக்கு வேண்டுகோள்

மாலபேயில் தனியார் மருத்துவ பல்கலைக்கழகம் அமைப்பதில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிகாட்டுதல்கள் மற்றும் விதிமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளனவா என விசாரணை மேற்கொள்ள வேண்டுமெனக் கோரி அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் பொலிஸில் நேற்று எழுத்துமூல முறைப்பாடொன்றைக் கையளித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இம்முறைப்பாட்டை ஆராய்ந்த பின்னர் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாகவும் பொலிஸார் கூறினார்.

# பங்களாதேஷ் தூதரகம் முன்னால் பதற்ற நிலை

கொழும்பு - 7வாட் பிளேஸிலுள்ள பங்களாதேஷ் உயர்ஸ்தானிகராலயத்திற்கு முன்னால் பதற்றமான சூழ் நிலை ஏற்பட்டுள்ளது. பங்களா தேஷில் விகாரைகள் தாக்கப் பட்டமைக்கு ஏதிராக விகாரமகா தேவி பூங்காவிற்கு முன்னால் நேற்று வியாழக் கிழமை நண்பகல் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் ஊர்வலமாகச் சென்று பங்களாதேஷ் உயர்ஸ்தானிகராலயத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், பங்களாதேஷ் உயர்ஸ்தானிகராலயத்தின் மீது தண்ணீர் போத்தல்களையும் வீசியுள்ளனர். இதன் காரணமாக உயர்ஸ்தானிகராலயத்தின் ஜன்னல்கள் சேதமடைந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# காலி...(தொடர்)

இந்நிறுவனம் இலங்கையில் அதிசொகுசு ஹோட்டல், உயர்வசதி வீட்டுத்தொகுதி மற்றும் பெறுமதி மிக்க வர்த்தகத் தொகுதி என்பவற்றை அமைக்கவுள்ளது.ய

# கிளிநொச்சி...(தொடர்)

வாத்திய அணிவகுப்பு பயிற்சிக்காக யாழ்ப்பாணம் ஏற்றிச் சென்ற பஸ் வண்டியே பளைப் பகுதியில் டிப்பர் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த ஆசிரியர் அவசர சிகிச்சைக்காக படையினரின் விசேட விமானம் மூலம் அநுராதபுரம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். இவ்விபத்துடன் தொடர்புடையவரென சந்தேகிக்கப்படும் வாகன சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

# உள்ளூராட்சி...(தொடர்)

சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு அதிகாரம் உண்டு என்று பவ்ரல் அமைப்பின் நிர்வாகப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராட்சி கூறினார். இது ஜனநாயக ரீதியான முறையல்ல, இவ்வாறு சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு அதிகாரங்கள் வழங்கப்படும் பொழுது, அமைச்சர் தனது சொந்த அரசியல் கட்சியின் நலன்களுக்கு ஏற்ப எல்லைகளை நிர்ணயம் செய்து கொள்ள முடியும். அதுமட்டுமல்ல தனது சொந்த அல்லது அரசியல் இலாபங்களுக்காக குறிப்பிட்ட தொகுதிகளிலுள்ள இனப்பரம்பல்களையும் மாற்றியமைக்க முடியும். எனவே சட்ட மூலத்தின் இந்தச் சரத்தை மாற்றியமைக்குமாறு ரோஹண ஹெட்டியாராட்சி தெரிவித்தார்.

# மன்னார் நீதிமன்றம்...(தொடர்)

இடம்பெற்றது. இந்த வழக்கு விசாரணைக்காக அமைச்சர் றிசாட் பதியுதீன் உட்பட பலர் நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர்.

# இராணுவ சீருடைக்கு...(தொடர்)

இராணுவத்தினருக்கான அதிநவீன வசதிகளைக் கொண்ட 10 மாடி வைத்தியசாலையொன்றை அமைப்பதற்காக 400 கோடி ரூபாவுக்கு அமைச்சரவை ஒப்புதலளித்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

# உயர்நீதிமன்றம் மட்டுமே...(தொடர்)

'திவிநெகும' (வாழ்வெழுச்சி) சட்ட மூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவகாரங்கள் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின்படி மாகாண சபைக்குரிய பட்டியலில் அடங்குபவை. ஆதலால் அரசியலமைப்பின் 154(எ)3 ஆம் பிரிவின் கீழ் அந்தச் சட்ட மூலத்தை மாகாண சபைகளின் கருத்துக்கு ஜனாதிபதி சமர்ப்பிக்காத நிலையில் அதனைச் சட்டமாக்க முடியாது என்று உயர்நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பளித்திருந்தது.

இதனையடுத்து, மாகாணசபைகளின் அதிகாரங்களை மத்திய அரசுக்கு மையப்படுத்தும் திவிநெகும சட்டமூலத்தை பல்வேறு மாகாண சபைகளுக்கும் ஜனாதிபதி அனுப்பி வைத்திருந்தார். கிழக்கு மாகாண சபை உட்பட நாட்டின் எல்லா மாகாண சபைகளும் இந்தச் சட்ட மூலத்துக்கு இணக்கம் தெரிவித்து அதனைச் சட்டமாக்குவதற்கு ஒப்புதலளிக்கும் சூழ்நிலை எழுந்துள்ளது.

இச்சமயத்தில், வடக்கு மாகாண சபை தேர்ந்தெடுக்கப்படாத நிலையில், இவ்விடயத்தில் அந்தச் சபையின் கருத்து நிலைப்பாடு இதுதான் என்பதை ஜனாதிபதியால் வடக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள ஜி.ஏ.சந்திரசிறி வெளிப்படுத்தும் சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக மாவை சேனாதிராஜா எம்.பி. தமது மனுவில் சுட்டிக்காட்டியிருந்தார்.

அதனை ஆட்சேபித்து கடந்த செவ்வாயன்று மாவை சேனாதிராஜா சார்பில் தாக்கல் செய்யப்பட்ட 'ரிட்' (ஆணைகோர்) மனு நேற்றுக் காலை மீண்டும் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீதியரசர் எஸ்.ஸ்ரீஸ்கந்தராஜா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுதாரர் சார்பில் சட்டத்தரணிகள் விரான் கொரியா, நிரான் அங்கிட்டல் ஆகியோரின் அனுசரணையுடன் சிரேஷ்ட வழக்குரைஞர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. ஆஜராகி வாதிட்டார். அரசு

தரப்பில் சிரேஷ்ட அரச சட்டத்தரணி நெரின் புள்ளேயின் அனுசரணையுடன் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் ஜனக டி சில்வா பிரசன்னமாகி வாதம் புரிந்தார்.

அரசமைப்பின் ஒரு குறிப்பிட்ட ஏற்பாட்டுக்கு அமைய இத்தகைய ஆணைகோர் மனுவை விசாரணை செய்யும் நியாயாதிக்கம் மேன்முறையிட்டு நீதிமன்றுக்குக் கிடையாது என அரசுத் தரப்பில் வாதிடப்பட்டது.

மாகாண சபை ஒன்றின் கருத்து நிலைப்பாட்டை அரசமைப்பின் 154(எ)3 பிரிவின் கீழ் வெளிப்படுத்தும்படி கோரப்படும் பட்சத்தில், அதனை அந்த மாகாண மக்களால் சட்டபூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட மாகாண சபையே செய்ய முடியும். மாகாண சபையைக் கலைத்த நிலையில் அந்த அதிகாரம் ஆளுநருக்கு வழங்கப்பட்டதாகிவிடாது என மனுதாரார்கள் சார்பில் வாதிக்கப்பட்டது.

இந்த இரண்டு வாதங்கள் தொடர்பிலும் உரிய அரசமைப்பு சட்ட ஏற்பாடுகளுக்கு வியாக்கியானம் செய்ய வேண்டிய தேவை எழுந்திருப்பதை இரு தரப்பு சட்டத்தரணிகளுமே ஒப்புக்கொண்டதை அடுத்து இந்த இரு விடயங்களிலும் உரிய முடிவைப் பெறுதவதற்காக இவ்விடயங்களை உயர்நீதிமன்றத்துக்கு அனுப்புவது என மேன்முறையீட்டு நீதிமன்றம் முடிவு செய்தது.

இவ்வாறு அரசமைப்புக்கு வியாக்கியானம் கோரி ஏதேனும் விடயம் உயர்நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டால் அரசியலமைப்பின்படி அத்தகைய விடயங்களை விசாரித்து இரண்டு மாதங்களுக்குள் முடிவை உயர் நீதிமன்றம் வெளிப்படுத்த வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈரான் மீதான பொருளாதாரத் தடை:

# இலங்கை நடந்து கொண்ட முறையில் அமெரிக்கா திருப்தி

## எண்ணெய் இறக்குமதி தடையையும் தளர்த்தியது

ஈரானுக்கு எதிரான பொருளாதாரத் தடை தொடர்பாக இலங்கை நடந்துகொண்ட முறையையிட்டு திருப்தி தெரிவித்துள்ள அமெரிக்கா, இலங்கை ஈரானிடமிருந்து மசகு எண்ணெய் இறக்குமதி செய்வதற்கு தற்காலிமாக சம்மதித்துள்ளதென இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மீது விதிக்கப்பட்ட தடையை தளர்த்தும் நோக்கில் தானும் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளும் அமெரிக்க இராஜங்கத் திணைக்கள பிரதிநிதியான அலிஸனுடன் வொஷிங்டனில் பேசியதாக இவ் அதிகாரியான சில்வா கூறினார்.


அமெரிக்கா தடைக்கமைய இலங்கை, ஈரானிய எண்ணெய் இறக்குமதியை குறைத்ததையிட்டு அமெரிக்கா திருப்தியடைந்துள்ளது. சப்புகஸ்கந்தை பெற்றோல் சுத்திகரிப்பு நிலையத்தில் குறித்ததொரு வகையான ஈரானிய மசகு எண்ணெயை மட்டுமே சுத்திகரிக்கமுடியும்.

இதற்காக ஈரானிலிருந்து 10 கப்பல் மசகு எண்ணெயை இலங்கை இறக்குமதி செய்வதை அனுமதிக்க அமெரிக்கா தயராகவுள்ளதெனவும் அவர் கூறினார்.

ஆயினும் இலங்கை ஈரானிடமிருந்து மசகு எண்ணெயை இறக்குமதி செய்வதில் வேறு தடைகளுள்ளன. கப்பல்களுக்கு காப்புறுதி, வங்கிச் செயன்முறை கள் போன்றவை தொடர்பான தடைகளும் தாண்டப்பட வேண்டுமெனவும் அவர் கூறினார்.

நாட்டில் பெற்றோலுக்கு தட்டுப்பாடு கிடையாது. போதிய கையிருப்பு உள்ளதென இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரி சில்வா கூறினார்.

லங்கா இந்திய எண்ணெய்க் கம்பனி பெற்றோல் விலையை அதிகரித்தாலும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் பெற் ணறோல் விலையை அதி-கரிக்காதெனவும் அவர் கூறினார்.



லங்கா இந்திய எண்ணெய்க் கம்பனி சந்தையில் 5 சதவீத பங்கை மட்டுமே கொண்டுள்ளது. இதனால் பெரிய தாக்கம் ஏற்படப்போவதில்லையெனவும் சில்வா தெரிவித்துள்ளார்.

## ஏற்றுமதி ஒழுங்கமைப்பு வலயம்

ஹம்பாந்தோட்டை, மிரிஜ்ஜவில பிரதேசத்தில் ஏற்றுமதி ஒழுங்கமைப்பு வலயமொன்றை நிர்மாணிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இதற்காக 228 ஹெக்டெயார் நிலப்பரப்பு ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வாகனங்களை ஒன்றுதிரட்டுதல், நிர்மாணத்துறைக்கான உற்பத்திகளை வழங்குதல், செயற்திறன் கொண்ட வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல் உள்ளிட்ட உற்பத்திக் கைத்தொழில் நடவடிக்கைகள் இந்த வலயத்தில் முன்னெடுக்கப்படவுள்ளன.

ஹம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் விமான நிலையம் உள்ளிட்ட இந்த மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளை மையமாகக் கொண்டே இந்த வலயம் நிர்மாணிக்கப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

# கொழும்பில் சிவப்பு விளக்கு வலயம் அமைக்க திட்டமில்லை

### மேயர் தெரிவிப்பு



கொழும்பு நகர எல்லைக்குள் சிவப்பு விளக்கு வலயத்தை அமைக்கும் திட்டம் கொழும்பு மாநகர-சபைக்கு இல்லையென கொழும்பு மாநகரசபை மேயர் ஏ.ஜே.எம். முஸம்மில் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மாநகரசபை உறுப்பினர் டபிள்யூ. பி.மலகமுவ கொழும்பு நகரினுள் சிவப்பு விளக்கு வலயத்தை அமைப்பதற்கான முன்மொழிவை வைத்தார். ஆனால் இதுவொரு தனிப்பட்டவரின் கருத்து மட்டுமென்பதால் இது பற்றி மேல் நடவடிக்கை எடுக்கப்படமாட்டாதெனவும் அவர் கூறினார்.

இந்நாட்டில் பாலியல் துன்புறுத்தல்களும் சிறுவர் துஷ்பிரயோகங்களும் பெருமளவில் இடம்பெறுகின்றன. சிவப்பு விளக்கு வலயம் அமைக்கப்பட்டால், அப்பாவிப் பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் தீங்கில்லாமல் மக்கள் தங்களது பாலியல் தேவைகளைப் பூர்த்தி செய்வார்கள். இவ்வாறான சிவப்பு விளக்கு வலயம் தாய்லாந்து மற்றும் வியட்நாம் உள்ளிட்ட பல ஆசிய நாடுகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும். ஏன் இலங்கை இதனைப் பின்பற்ற முடியாது? இவ் அறிவுபூர்வமான யோசனையின் பலாபலனை இப்போது உணரமுடியாது. ஆனால் எதிர்வரும் வருடங்களில் இதனை அறிந்துகொள்ள முடியுமெனவும் மாநகரசபை உறுப்பினர் டபிள்யூ.பி.மலகமுவ கூறினார்.

விபசார நடவடிக்கையை சட்டபூர்வமாக்குவதற்கு மறுப்பதற்கான காரணத்தை மலகமுவ கேட்டார். இந்நாட்டில் சூதாட்ட நிலையம் மற்றும் மதுபான நிலையங்கள் சட்டபூர்மாக்கப்பட்டமைபோன்று, ஏன் விபச்சார நடவடிக்கையை சட்டபூர்வமாக்க முடியாது எனவும் அவர் கேள்வியெழுப்பினார்.

இருப்பினும் சிவப்பு விளக்கு வலயத்தை அமைப்பதற்கான முன்மொழிவு ஆலோசனையை அர்த்த மற்றதெனவும் மேயர் கூறினார்.

## மாலக்கவுக்கு விஸா வழங்கப்பட்டதா?

# தகவல் வெளியிடுவதற்கு அமெரிக்கத் தூதரகம் மறுப்பு

அமைச்சர் மேர்வின் சில்வாவின் புதல்வர் மாலக்க சில்வாவுக்கு அமெரிக்கா செல்வதற்காக விஸா அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் அமெரிக்கத் தூதரகம் கருத்துத் தெரிவிக்க மறுத்துள்ளது.

தனிப்பட்டவரின் விஸா விடயங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்க முடியாது எனவும் அனைவரின் விஸா பற்றிய தகவல்களும் குடிவரவு மற்றும் தேசிய சட்டத்தின் கீழ் இரகசியமானவை எனவும் அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர் கூறியுள்ளார்.

நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாகக் காணப்பட்வர்களுக்கு அல்லது விசாரணை முடியாதிருப்பவர்களுக்கு தூதரகம் விஸா வழங்குமா என ஆங்கில் ஊடகம் ஒன்று வினவியபோது, இச்செயன்முறை சிக்கலானது எனவும் கூறினார்.

அமைச்சர் மேர்வின் சில்வாவின் புதல்வர் மாலக்க சில்வா உயர் கல்விக்காக ஐக்கிய அமெரிக்காவுக்குச் செல்லவில்லையெனக் கூறி மாலக சில்வாவின் வழக்குரைஞர் ஜயந்த வீரசேகர கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் புதன்கிழமை மனுவொன்றைத் தாக்கல் செய்தமை குறிப்பிடத்தக்கது.

உயர் கல்விக்காக ஐக்கிய அமெரிக்காவுக்குச் செல்லவில்லையெனக் கூறி மாலக சில்வாவின் வழக்குரைஞர் ஜயந்த வீரசேகர கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் முன்னர் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

கடந்த வழக்கு விசாரணையின் போது மாலக சில்வா உயர் கல்விக்காக வெளிநாடு செல்வதாக தவறுதலாக நீதிமன்றத்தில் வழக்குரைஞர்களால் தெரிவிக்கப்பட்டது. இவர் உண்மையில் சுற்றுலாவுக்காகவே வெளிநாடு செல்கின்றாரென வழக்குரைஞர் கூறினார்.

ஒக்டோபர் மாதம் 7ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 10ஆம் திகதி வரை மாலக்க சில்வா நாட்டைவிட்டுச் செல்வதற்கு வழக்குரைஞர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். ஆனால் வழக்குரைஞர் கடந்த 3ஆம் திகதி கேட்டுக் கொண்டபடி ஒக்டோபர் 10ஆம் திகதி முதல் நவம்பர் 20ஆம் திகதிவரை நாட்டைவிட்டுச் செல்வதற்கு மாலக்க சில்வாவுக்கு நீதிமன்றம் அனுமதியளித்தது.

இது இவ்வாறிருக்க, மாலக்க சில்வா, எதிர்காலத்தில் இந்நாட்டின் கல்வி அமைச்சராக வேண்டுமென்ற இலட்சியத்தை கொண்டுள்ளதாகவும் எனவே அமெரிக்காவில் கல்வி கற்பதற்காக அவரை நாட்டைவிட்டுச் செல்ல அனுமதிக்குமாறும் கொழும்பு கோட்டை நீதிமன்றில் மாலக்க சில்வாவின் வழக்குரைஞர் ஹேமந்த வர்ண குலசூரிய தெரிவித்தார்.

தனது கட்சிக்காரர் அமெரிக்க பல்கலைக்கழகமொன்றில் கல்வி கற்க விரும்புவதாக ஜனாதிபதி வழக்குரைஞர் ஹேமந்த வர்ண குலசூரிய கூறினார்.

# இந்திய அரசின் வீடமைப்புத் திட்ட உதவிகள் எமக்கும் வேண்டும்

## எள்ளுப்பிட்டி கிராம மக்கள் கோரிக்கை

மன்னார், எள்ளுப்பிட்டி கிராமத்தைச் சேர்ந்த மீள்குடியேற்றப்பட்டுள்ள அனைத்து குடும்பங்களுக்கும் இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ், வீடுகளை வழங்குமாறு மாந்தை கிராமத்தின் அபிவிருத்திச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. இதுகுறித்து அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள திருக்கேதீஸ்வரம் கிராம அலுவலகர் பிரிவுக்குட்பட்ட எள்ளுப்பிட்டி கிராம மக்கள் நாட்டில் ஏற்பட்டிருந்த போர்ச்சூழல் காரணமாக 1990 ஆம் ஆண்டு ஜுன் மாதம் கிராமத்தை விட்டு முற்றாக இடம்பெயர்ந்து மடுக்கோவில் மற்றும் ஏனைய பிரதேசங்களில் வாழ்ந்து வந்தனர். இந்த நிலையில் 2010 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 20ஆம் திகதி மீளக்குடியமர்த்தப்பட்டனர். அன்றிலிருந்து குறித்த கிராம மக்கள் வாழ்வாதார முன்னேற்பாடுகளில் பெரிய பின்னடைவுகளை எதிர்நோக்கியவர்களாக உள்ளனர்.

நெற்செய்கை, தோட்டச்செய்கைகள் போன்ற நடவடிக்கைக-ளில் அடியெடுத்து வைக்க முடியாத நிலையிலேய இவர்கள் இன்னமும் உள்ளனர்.

இந்த வேளையில் இந்திய வீட்டுத்திட்டத்தின் மூலம் இந்தக் கிராமத்திற்கு முன்னுரிமை கொடுப்பதாக மன்னார் பிரதேச செயலகம் உறுதியளித்திருந்தபோதும், மீளக்குடியமர்ந்த 102 குடும்பங்களில் 47 குடும்பங்களுக்கு மாத்திரமே இந்திய வீட்டுத்திட்டத்திற்கு என ஜனாதிபதி படையணியின் அனுமதி பெறுவதற்கான சிபாரிசுக்கடிதம் அனுப்பிவைக்கப்பட்டு அதற்கான அனுமதியும் பெறப்பட்டுள்ளதாக தெரிகின்றது.

இவ்வாறான நிலையில் ஏன் ஏனைய குடும்பங்கள் விலக்கப்பட்டன என்பது கூட தெரியாத நிலையிலே காணப்படுகின்றது. அதுமட்டுமன்றி அனுமதி பெறப்பட்ட பட்டியலில் 5 குடும்பங்கள் எமது கிராமத்தைச் சேராதவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. என அவ்வறிக்கை மூலம் கோரிக்கை விடுப்பட்டுள்ளது.

## இன்றைய இராசி பலன் (05.10.2012)

**நந்தன வருடம் புரட்டாதித் திங்கள் 19ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**நட்சத்திரம்** : ரோகினி பின்னிரவு 3.45 வரை அதன் பின் மிருகசீரிடம்
**திதி** : பஞ்சமி பிற்பகல் 5.30 வரை. அதன் பின் சஷ்டி
**சுபநேரம்** : 6.02 - 7.32
**இராகுகாலம்** : 10.32 - 12.02
(இந்த நேரங்கள் இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்)

**மேடம்** : தொழில் உற்சாகம், சிறுவருமானம், மன அமைதி
**இடபம்** : கொடுக்கல் வாங்கல் பிரச்சினை, மனக்குழப்பம், அந்நியர் தொல்லை
**மிதுனம்** : பொருட்செலவு, பிரயாணக் கஷ்டம், காரியத் தடை
**கடகம்** : நற்காரிய செய்கை, தொழில் திருப்தி, மனக்குறை தீரும்
**சிங்கம்** : சொத்துப் பிரச்சினை, திருப்தியின்மை, எதிர்பாராத முடிவு
**கன்னி** : தொழில் விருத்தி, நற்செய்தி, வரவேற்பு
**துலாம்** : ஏமாற்றம், கடன்படல், உடல்நிலை பாதிப்பு
**விருச்சிகம்** : புதிய நட்பு, விருந்துபசாரம், பெண்களால் நன்மை
**தனுசு** : மனத்தாக்கம், கடன்தொல்லை, விரும்பியவை கிடைக்காமை
**மகரம்** : பொருள் வரவு, பிறர்க்கு உதவுதல், தெய்வ அனுகூலம்
**கும்பம்** : வாகன சேர்க்கை, இல்ல மாற்றம், தாய்வழி நன்மை
**மீனம்** : பொருள் இழப்பு, முற்கோபம், வழக்கு விவகாரம்

- ஜோதிடர் பால.இரத்தினசேகர்

# சட்டவிரோதமாக சிறைவைக்கப்பட்டிருந்த இளைஞனை உடனடியாக விடுவிக்க உயர்நீதிமன்றம் உத்தரவு

சட்டவிரோதமான முறையில் சிறைவைக்கப்பட்டிருந்த இளைஞனை விடுவிக்குமாறு உயர் நீதிமன்றம் நேற்று கட்டளை பிறப்பித்தது. இவர் மத்திய மாகாண புலனாய்வுப் பிரிவினரால் கடந்த 2008ஆம் ஆண்டு ஏப்ரல் 19ஆம் திகதி அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தார். இவர் மீது கண்டி மேல் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

திகன பிரதேசத்தைச் சேர்ந்த தங்கராசா ரமேஷ்குமார் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு தொடர்பாகவே இந்த கட்டளையை மூவர் கொண்ட நீதியரசர் குழுமம் பிறப்பித்தது.

இந்நிலையில், கடந்த 2011ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 18ஆம் திகதி சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து அவருக்கு ஏழு வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் 15000 ரூபா தண்டமும் செலுத்த நீதிமன்றம் உத்தரவிட்டது. சந்தேகநபர், தண்டப்பணத்தை அன்றே செலுத்திவிட்டார்.

ஆவசரகால சட்டத்தில் விதிக்கப்பட்ட 30 நாள் எல்லையை தவிர்ப்பதற்காக இவர் மீது வேறு வழக்குகள் சோடிக்கப்பட்டன. இதனால், இவர் தொடர்ந்து சிறையில் இருக்க நிர்ப்பந்திக்கப்பட்டார்.

மனுதாரர் சார்பில் உச்ச நீதிமன்றில் மனு தாக்கல் செய்யப்பட்டதையடுத்து, சந்தேகநபர் சட்டவிரோதமான முறையில் தடுத்து வைக்கப்பட்டதனால் மன வேதனையும் அவமானமும் அடைந்தார் எனவும் சமபாதுகாப்புக்கான அவரது உரிமை மறுக்கப்பட்டுள்ளது எனவும் கூறப்பட்டிருந்தது.

# அதிகளவு கிளிகளைப் பிடித்து வைத்திருந்த நபர் ஒருவர் கைது

புத்தளம், கருவலகஸ்வெள, முரியாகுளம் பகுதியில் 43 கிளிகளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து கிளிகளைப் பிடிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் வலையொன்றும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். கொழும்பில் விற்பனை செய்வதற்காகவே மேற்படி கிளிகள் பிடிக்கப்படுவதாக சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கருவலகஸ் வெள பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஐ.தே.மு.இன் அடிப்படை உரிமை மனு அடுத்த ஆண்டுக்கு ஒத்திவைப்பு

காலியில் தமது எதிர்ப்பு இயக்கத்தை உரிய காரணமின்றிக் குழப்பியதாக முறையிட்டு ஜன நாயக தேசிய முன்னணி தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமைகள் மனு வழக்கை உயர்நீதிமன்றம் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 19ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

தமது கட்சித் தலைவரான முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா, சிறையில் தொடர்ந்து அடைத்து வைக்கப்பட்டிருப்பதை எதிர்த்து கடந்த 2010ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதி எதிர்ப்பு நடவடிக்கையை ஒழுங்கு செய்ததாக மனுவில் கூறப்பட்டிருந்தது.

17ஆவது அரசியல் சட்ட திருத்தம் செயற்படுத்தப்படாமையைக் கண்டித்தும் இந்த எதிர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது எனவும் மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஐ.நா அகதிகளுக்கான முகவர் நிறுவனப் பணிகள் மட்டுப்படுத்தப்படுகிறது

இலங்கையில் ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான முகவர் நிறுவனத்தின் பணிகள் கிரமமான முறையில் குறைக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்நிலையில் இலங்கையில் மேற்கொண்டு வந்த செயற்பாட்டு ரீதியான பங்களிப்பினை குறைத்துக் கொள்ளத் தீர்மானித்துள்ளதாக ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான முகவர் நிறுவனத்தின் உயர் ஸ்தானிகர் என்டனியோ குட்டரஸ் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் மீள்குடியேற்றம் தொடர்பில் தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதே வேளை, யுத்தத்தின் பின்னர் நாடு அடைந்துள்ள அபிவிருத்தியை சிலர் குறைத்து மதிப்பீடு செய்துள்ளதாக ஐ.நாவின் ஜெனீவாவிற்கான இலங்கைப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான முகவர் நிறுவனத்தின் 63ஆம் நிறைவேற்றுக் குழு அமர்வுகளில் கலந்து கொண்ட உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளனர்.

சில தரப்பினர் இலக்குகளை மாற்றி மாற்றி அறிவிப்பதாகவும் இதனால் இலங்கைக்கு மட்டுமன்றி உறுப்பு நாடுகளுக்கும் அசௌகரிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். 30 ஆண்டுகளாக நீடித்த யுத்தத்தின் பின்னர் நாடு அடைந்து வரும் அபிவிருத்திகளை அங்கீகரிக்காது, குற்றச்சாட்டுக்களை அடுக்கி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

உலகின் பல நாடுகளில் மனிதாபிமான நெருக்கடிகள் இடமபெற்று வருவதாகவும், இவ்வாறான நாடுகளுக்கு இலங்கை நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இடம் பெயர் மக்கள் மீள்குடியேற்றம், முன்னாள் போராளிகளுக்கு மறுவாழ்வு, உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்றுதல், பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தல், உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தல் போன்ற பல்வேறு காரணிகளில் பாரியளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்தின் பின்னரான மீள் குடியேற்றம், புனர்வாழ்வு போன்ற துறைகளில் இலங்கை பெற்றுக் கொண்ட அனுபவங்களை பகிர்ந்து கொள்ளத் தயார் என ரவி நாத் ஆரியசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

# இந்திய மீனவரின் சடலம் தமிழகம் சென்றது

வெலிக்கடை சிறையில் உயிரிழந்த இந்திய மீனவரது சடலம் சொந்த நாட்டுக்கு கொண்டு சொல்லப்படுகிறது. கொழும்பிலிருந்து இவரது உடல் விமானம் மூலம் திருச்சி கொண்டு செல்லப்பட்டு, நேற்று அவரது சொந்த இடமான சீனியப்பா தர்ஹாவுக்கு கொண்டு செல்லப்பட்டது.

இராமநாதபரம் மாவட்டம் மண்டபம் சீனியப்பா தர்ஹா என்ற பகுதியிலிருந்து 2004ல் தங்கராஜ், (52) மற்றொரு மீனவருடன் நாட்டுப்படகில் மீன்பிடிக்கச் சென்றார். போதைப்பொருள் வைத்திருந்ததாக தங்கராஜை நடுக்கடலில், இலங்கை கடற்படையினர் கைது செய்து மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

நீதிபதி உத்தரவையடுத்து, தங்கராஜ் கொழும்பு வெளிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

எட்டு ஆண்டு களுக்குப் பின் கடந்த மாதம் 23ம் திகதி தங்கராஜ் சிறையில் மாரடைப்பால் இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# திவிநெகும சட்டம் எட்டு மாகாண சபைகளிலும் நிறைவேற்றம்

சர்ச்சைக்குரிய திவிநெகுமு சட்டமூலம் எட்டு மாகாணசபைகளிலும் நிறைவேற்றப்பட்டுள்ளது. வடமத்திய, சபரகமுவ மற்றும் தென் மாகாணசபைகளில் நேற்று திவிநெகும சட்டம் சமர்ப்பிக்கப்பட்டது.

நாட்டின் ஏனைய மாகாண சபைகளிலும் திவிநெகும சட்டம் மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டுள்ளது. சபரகமுவ மாகாண சபையில் சட்டத்திற்கு ஆதரவாக 27 வாக்குகளும், எதிராக 12 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

தென் மாகாண சபையில் சட்டத்திற்கு ஆதரவாக 26 வாக்குகளும், எதிராக 15 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன. வடமத்திய மாகாணசபையில் திவிநெகும சட்டம் தொடர்பில் ஏழு மணித்தியால விவாதம் நடத்தப்பட்டது. வடமத்திய மாகாணத்தில் ஏழு மேலதிக வாக்குகளினால் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

# இந்திய வீட்டுத்திட்டத்திற்கு பயனாளிகள் தெரிவில் பாரபட்சமெனப் புகார்

இந்திய உதவியின் கீழ் இரண்டாம் கட்டமாக வீடமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்ற அதேவேளை, வவுனியா மாவட்டத்தின் நெடுங்கேணி பிரதேசத்தில் இந்திய வீடுகளுக்கான பயனாளிகளைத் தெரிவு செய்வதில் பாரபட்சம் காட்டப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இது தொடர்பில் நெடுங்கேணி ஒலுமடுவை சேர்ந்தவர்கள் வவுனியா அரசாங்க அதிபர் பந்துல ஹரிச்சந்திர அவர்களிடம் நேரடியாக முறையிட்டிருக்கின்றார்கள்.

நெடுங்கேணி பிரதேசத்தில் அரச திட்டங்களின் கீழ் காணிகளைப் பெற்றிருக்கின்ற யாழ் மாவட்டத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவர்களுக்கே இந்திய வீட்டுத்திட்டத்தில் முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. வவுனியா அரசாங்க அதிபரைச் சந்தித்து இது குறித்து எடுத்துக் கூறிய அவர்கள் எழுத்து மூலமாகத் தமது குறைகளை வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.

இதுபற்றி கருத்து வெளியிட்ட வவுனியா அரசாங்க அதிபர், இந்திய வீடமைப்புத் திட்டத்தின் பயனாளிகளைத் தெரிவு செய்வதில் ஏதேனும் முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றதா, அவற்றில் அதிகாரிகள் யாரேனும் சம்பந்தப்பட்டிருக்கின்றார்களா என்பதைக் கண்டறிவதற்கான விசாரணைகளை மேற்கொள்ளவிருப்பதாக தெரிவித்தார். அத்துடன் முறையிட்டவர்கள் உண்மையிலேயே பாதிக்கப்பட்டிருந்தால் அவர்களுக்கு அடுத்த கட்ட பயனாளிகள் தெரிவில் இடமளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வவுனியா அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இந்திய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்திற்கு ஐயாயிரம் வீடுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஹம்பாந்தோட்டையில் ஏற்றுமதி ஒழுங்கமைப்பு வலயம்

ஹம்பாந்தோட்டை, மிரிஜ்ஜவில பிரதேசத்தில் ஏற்றுமதி ஒழுங்கமைப்பு வலயமொன்றை நிர்மாணிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இதனடிப்படையில் துறைமுகம் மற்றும் விமான நிலையம் அமைத்தல் என்பனவற்றுக்காக 228 ஹெக்டெயார் காணி ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வாகனங்களை ஒன்றுதிரட்டுதல், நிர்மாணத் துறைக்கான உற்பத்திகளை வழங்குதல், செயற்திறன் கொண்ட வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல் உள்ளிட்ட உற்பத்திக் கைத்தொழில் நடவடிக்கைகள் இந்த வலயத்தில் முன்னெடுக்கப்படவுள்ளன.

# இலங்கை, சிங்கபூர் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் சந்திப்பு

இலங்கை வெளியுறவு துறை அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், சிங்கபூரின் வெளியுறவு துறை அமைச்சர் கே.சண்முகத்தை நேற்று முன்தினம் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொது சபை கூட்டத்தில் பங்கேற்க சென்றுள்ள நிலையில் அவர்களுக்கு இடையிலான இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இதன் போது யுத்த பாதிப்புக்கு உள்ளான மக்களின் மீளமைப்பு மற்றும் மீள்குடியேற்றம் தொடர்பிலும் பேசப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கை மற்றும் சிங்கப்பூருக்கு இடையில் தொழில் நுட்ப வளங்களை பகிர்வது தொடர்பிலும் பேசப்பட்டிருப்பதாக வெளியுறவுகள் துறை அமைச்சு தெரிவித்துள்ளது. இதேவேளை அண்மையில் இலங்கையில் நடத்தப்பட்ட பொதுநலவாய நாடுகளின் வெளியுறவுகள் துறை அமைச்சர்களுக்கான மாநாடு குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# இலங்கைத் தமிழர்களுக்கான இந்திய மத்திய அரசியல் உதவியில் திருப்தியில்லை

## கலைஞர் கருணாநிதி கவலை

இலங்கைத் தமிழர்களுக்காக இலங்கையில் இந்திய அரசு மூலம் நிறைவேற்றப்படும் பணிகள் திருப்தியாக இல்லை. இலங்கையில் தமிழர்கள் சுதந்திரமாகவும், சுயமரியாதையுடனும் வாழ வேண்டும்.

இதற்கான தீர்மானங்கள் டெசோ மாநாட்டில் நிறைவேற்றப்பட்டு உள்ளன. இந்த தீர்மானங்கள் ஐ.நா.சபையில் இந்திய அரசின் ஆதரவுடன் ஏற்கப்பட வேண்டும்" என்று தி.மு.க.தலைவர் மு.கருணாநிதி குறிப்பிட்டுள்ளார்.

டெசோ அமைப்பின் கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை, சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது. இதன் போது ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த போதே கருணாநிதி அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றியுள்ள கருணாநிதி,

"டெசோ மாநாட்டு தீர்மானங்களை ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரிடமும் ஜெனீவாவில் உள்ள மனித உரிமைப் பேரவையிடமும் கையளிக்கவுள்ளோம். ஏற்கனவே அறிவித்தவாறு தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலின், தி.மு.க. நாடாளுமன்ற தலைவர் டி.ஆர்.பாலு ஆகியோர் இந்த தீர்மான அறிக்கையை எடுத்தச் செல் வது குறித்த விளக்கங்களை இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் விவாதித்தனர்.

கூட்டத்தில் இது தொடர்பாக ஒப்புதல் வழங்கப்பட்டது. ஜெனீவாவில் மனித உரிமைகள் பேரவை ஆணையாளரைப் பார்ப்பதற்கும், நியூயோர்க்கில் ஐ.நா. பொதுச் செயலாளரை பார்ப்பதற்கும் திகதி கிடைத்தவுடன் இருவரும் டெசோ தீர்மான நகல்களுடன் செல்ல இருக்கிறார்கள்.

அங்கிருந்து உறுதியான திகதி இது வரை வரவில்லை. இது தொடர்பாக அவர்களிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேசி வருகிறோம். உறுதியான திகதி தொடர்பில் அறிவிக்கப்பட்டவுடன் தெரியப்படுத்தப்படும்.



இலங்கைத் தமிழர்கள் தொடர்பில் இலங்கையில் இந்திய அரசு மூலம் நிறைவேற்றப்படும் பணிகள் திருப்தியாக இல்லை. அந்த தகவல்களும் இந்த நகல்களுடன் இணைத்து அதுபற்றி தெளிவாக எடுத்துச் சொல்ல இருவரும் இந்த பயணத்தை மேற்கொள்கிறார்கள்.

இலங்கையில் தமிழர்கள் சுதந்திரமாகவும், சுயமரியாதையுடனும் வாழ வேண்டும்.

இதற்கான தீர்மானங்கள் டெசோ மாநாட்டில் நிறைவேற்றப்பட்டு உள்ளன. இந்த தீர்மானங்கள் ஐ.நா.சபையிலும் இந்திய அரசின் ஆதரவுடன் ஏற்கப்பட வேண்டும்" என்றார்.

## பொலிஸ் மா அதிபர் உதவி மையம்

பொலிஸ் மா அதிபரின் ஆலோசனையின் பிரகாரம் பொது மக்களுக்கு பிரயோசனமான சேவையை வழங்கும் பொருட்டு பொலிஸ் மா அதிபர் உதவி மையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

எதிர்வரும் வாரங்களில் இந்த உதவி மையம் அமைக்கப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பொலிஸ் மா அதிபர் உதவி மையத்தின் ஊடாக பொலிஸ் விசாரணை மற்றும் பொலிஸ் மா அதிபர் சேவை குறித்து மூன்று தொலைபேசி இலக்கங்களின் ஊடாக தகவல் பெற முடியும்.

பொலிஸ் நிலையத்தில் கிடைக்கும் சேவையில் திருப்தி அடைய முடியாவிட்டால் அது குறித்து பொலிஸ் மா அதிபர் உதவி மையத்தை நாட முடியும்.

## கடல் வழியாக அவுஸ்திரேலியா செல்ல முயற்சி: 10 பேர் கைது

நீர்கொழும்பு - ஏத்துக்கால பகுதி கடல் வழியாக அவுஸ்திரேலியா தப்பிச் செல்ல முயற்சித்த 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த ஆறு பேரை அனுப்பி வைக்க உதவிய நான்கு சந்தேகநபர்களையும் நீர்கொழும்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஏத்துகால சுற்றுலா பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் யாழ்ப்பாணம், மானிப்பாய், சாவகச்சேரி மற்றும் நீர்கொழும்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்,

சந்தேகநபர்கள் நேற்று (04) நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

## கட்டுத்துவக்கு வெடித்து இளைஞர் பலி

மெதிரிகிரிய - எட்டம்பய - ரணவருபிட்டிய பகுதியில் கட்டுத்துவக்கு வெடித்து இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் (03) மாலை இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் உள்ள காட்டில் விலங்கு வேட்டைக்கென இருவர் சென்றுள்ளனர்.

இதன்போது ஒருவர் வசம் இருந்த கட்டுத்துவக்கு வெடித்து அவர் அவ்விடத்திலேயே உயிரிழந்துள்ளார். மெதிரிகிரிய பொலிஸார் மேல திக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

## யாழ்.மாவட்டத்தில் டெங்கு ஒழிப்பு வாரம் பிரகடனம்

யாழ். மாவட்டத்தில் மழை காலம் தொடங்கியுள்ளதைத் தொடர்ந்து அடுத்து வரும் ஒரு வார காலத்தை டெங்கொழிப்பு வாரமாக யாழ். மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அறிவித்துள்ளது.

மாவட்டத்தில் கடந்த இரு நாட்களாக மழை பெய்ததைத் தொடர்ந்து டெங்கு பரவும் அபாயம் இங்கு காணப்படுகின்றது.

இந்நிலையில், எதிர்வரும் 8ஆம் திகதி முதல் 14ஆம் திகதிவரை ஒரு வார காலம் டெங்கொழிப்பு வாரமாக பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

இது சம்பந்தமான சுற்றுநிருபங்கள் யாழ். மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனால் யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்கள் மற்றும் சுகாதார வைத்தியதிகாரி பணிமனைகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

ஒவ்வொரு சுகாதார வைத்தியதிகாரிகளின் எல்லைகளும் 07 வலயங்களாக பிரிக்கப்பட்டு குறிப்பிட்ட நாட்களில் அப்பகுதிகளிலுள்ள வீடுகளுக்குச்சென்று டெங்கு கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளப் படும்.

## இந்திய மீனவரின் சடலம் அனுப்பப்பட்டது

கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையில் உயிரிழந்த இந்திய மீனவரது உடல் விமானம் மூலம் திருச்சி கொண்டு செல்லப்பட்டு, நேற்று (04) அவரது சொந்த இடமான சீனியப்பா தர்ஹாவுக்கு கொண்டு செல்லப்படவுள்ளது.

இராமநாதபரம் மாவட்டம் மண்டபம் சீனியப்பா தர்ஹா என்ற பகுதியிலிருந்து 2004ல் தங்கராஜ், (52) மற்றொரு மீனவருடன் நாட்டுப்படகில் மீன்பிடிக்கச் சென்றார்.

போதைப்பொருள் வைத்திருந்ததாக தங்கராஜை நடுக்கடலில், இலங்கை கடற்படையினர் கைது செய்து மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

நீதிபதி உத்தரவையடுத்து, தங்கராஜ் கொழும்பு வெளிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

எட்டு ஆண்டுகளுக்குப் பின் கடந்த மாதம் 23ம் திகதி தங்கராஜ் சிறையில் மாரடைப்பால் இறந்தார்.

## சந்திரிக்கா வாவியில் இரத்தினக்கல் வளம்

எம்பிலிபிட்டி - சந்திரிக்கா வாவி பகுதியில் இரத்தினக்கல் வளம் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை தெரிவித்துள்ளது.

சந்திரிக்கா வாவி மீள்புனரமைப்பு நடவடிக்கையின் போது அங்கு இரத்தினக்கல் வளம் இருப்பதாக தகவல் வெளியானதென அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

இதன்படி, விசேட குழுவொன்றை அனுப்பி ஆய்வு செய்தபோது அங்கு இரத்தினக்கல் வளம் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதென இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

## செங்கலடி பிரதேசத்தில் காணிக் கச்சேரி

ஏறாவூர் பற்று (செங்கலடி) பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஈரளக்குளம் கிராம சேவையாளர் பிரிவில் காணி அனுமதி பத்திரங்கள் இல்லாதவர்களுக்கு காணிகளை வழங்குதல் தொடர்பான விசாரணைகள் மற்றும் பதிவுகள் நேற்று செவ்வாய்க்கிழமை ஈரளக்குளத்தில் நடைபெற்றன.

ஈரளக்குளம் பிரதேசத்தில் 1995 கால பகுதிக்கு முன்னர் காணிகள் அற்றவர்கள் தமக்கென காணிகளை எடுத்துக்கொண்ட போதும் ஆவணங்கள் அற்ற நிலை காணப்படுகிறனர். அத்துடன், காணித் தேவைகள் தொடர்பில் 2008 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அவ்வாறனவர்களின் காணி தேவைகள் அவர்களின் பயன்படுத்தும் நிலைகள் குறித்து ஆராயும் முகமாக இந்த காணிகள் தொடர்பான விசாரணைகள் நடைபெற்றன. இந்தக் காணி விசாரணைகளின் போது. பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், காணி உத்தியோகத்தர், காணி நிருவாக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் ஈடுபட்டனர்.

## மதுபான சாலைக்கு அனுமதி மறுப்பு

பலாங்கொடை பிரதேச மதுபான விற்பனை நிலையமொன்றுக்கு வழங்கப்பட்டிருந்த அனுமதிப் பத்திரத்தை இரத்து செய்ய கலால் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பிரதேசவாசிகளிடம் இருந்து எழுந்த எதிர்ப்பை அடுத்து இந்நடவடிக்கை எடுக்கப்பட்டதாக திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர், கலால் அதிகாரி பிரபாத் ஜயவிக்ரம தெரிவித்தார்.

மக்களின் எதிர்ப்பை அடுத்து குறித்த பிரதேசத்திற்குச் சென்று நேற்று முன்தினம் (03) ஆய்வு செய்ததாகவும் மது விற்பனை நிலையத்தை அமைக்க அது ஏற்புடைய இடமல்ல எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதன்படி, கலால் திணைக்கள ஆணையாளர் நாயகத்தின் பணிப்பின்பேரில் குறித்த மது விற்பனை நிலையத்துக்கான அனுமதிப் பத்திரத்தை இரத்து செய்ததாக பிரபாத் ஜயவிக்ரம குறிப்பிட்டார்.

## பொலிஸார் எச்சரிக்கை

வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி பண மோசடியில் ஈடுபட்ட ஒருவரை கொழும்பு கொள்ளுப்பிட்டி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி தொடர்ச்சியாக பலரிடம் பண மோசடியில் ஈடுபட்டு வந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இத்தகைய பண மோசடிக்காரர்களிடம் பொது மக்கள் ஏமாற்றமடைய வேண்டாம் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

## புனரமைக்கப்பட்ட கறுத்தப்பாலம் மக்களிடம் கையளிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தையும் பதுளை மாவட்டத்தினையும் இணைக்கும் பிரதான பாதையான செங்கலடி - பதுளை வீதி கறுத்தப்பாலம் புனரமைக்கப்பட்டு நேற்று முன்தினம் புதன்கிழமை காலை மக்களின் பாவனைக்காக திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கிழக்கு மாகாண பணிப்பாளர் வை.தர்மரெட்னம், அதிகார சபையின் பிரமத பொறியியலளார் ஏ.சி.நிசாருதீன், மற்றும் திட்ட பொறியியலாளர் ஏ.எம்..சாதிக் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பில் கடந்த 2011ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தை தொர்ந்து இப்பாலம் சேதமடைந்திருந்தது.

இதனால் போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்ட நிலையில், தற்காலிக போக்குவரத்துப்பாதை ஏற்படுத்தப்பட்டு போக்குவரத்துக்கள் நடைபெற்று வந்தன.

பாலத்தின் புனரமைப்பு பணிகளுக்காக 35 மில்லியன் ரூபாய்கள் செலவு செய்யப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் தெரிவித்தனர்.

தமிழ்நாதம்
Thamil Naatham
ஒக்டோபர் மாதம் 05ஆம் திகதி வெள்ளிக்கிழமை

## பல்கலைக்கழக போதானாசிரியர்களின் போராட்டம் எப்போது முடிவுக்கு வரும்?

பல்கலைக்கழகப் போதனாசிரியர்களின் வேலை நிறுத்தம் முற்றுப் பெறாமல் இன்னமும் தொடர்ந்து நடைபெறுவதால், மாணவர்களின் கல்வியே பெரிதும் பாதிக்கப்படுகிறது. இவர்கள் முன்வைத்த ஆறு கோரிக்கைகளில் சம்பள உயர்வுக் கோரிக்கை தவிர்ந்த ஏனைய ஐந்து கோரிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதாக உயர் கல்வி அமைச்சு அண்மையில் தெரிவித்திருந்தது. அத்துடன் பல்கலைக்கழக பேராசிரியர்களின் சம்மேளனத்தின் ஆலோசனைகளைப் பெற்று உயர் கல்வி அமைச்சும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சும் கூட்டாக ஆவணம் ஒன்றையும் வெளியிட்டிருந்தன. பல்கலைக்கழக போதனாசிரியர்களின் பிரச்சினை தொடர்பாக மல்வத்தை, அஸ்கிரிய பீடாதிபதிகளும் போதானாசிரியர்களும் பேச்சுவார்த்தை நடாத்தியிருக்கிறார்கள்.

வேலைக்குத் திரும்பும் விரிவுரையாளர்களுக்கு மூன்று மாத சம்பளம் வழங்கப்படும் என்றும் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்கா அறிவித்திருந்தார். இருந்தும் விரிவுரையாளர்கள் வேலைக்குத் திரும்பவில்லை. சம்பள உயர்வு; மொத்தத் தேசிய உற்பத்தியில் ஆறு சதவீதத்தை கல்விக்கு ஒதுக்குதல்; பல்கலைக்கழகங்களில் அரசியல் தலையீட்டை இல்லாமல் செய்தல்; உயர்கல்வி தொடர்பாக முக்கிய முடிவுகள் எடுக்கப்படும்போது பேராசிரியர்களுடன் கலந்துரையாடப்பட வேண்டும் போன்றவை உட்பட ஆறு கோரிக்கைகளை விரிவுரையாளர்கள் சமர்ப்பித்தனர்.

மொத்தத் தேசிய உற்பத்தியில் ஆறு சதவீதத்தை ஒரே இரவில் ஒதுக்குமாறு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கோரவில்லை என்பதை அவர்கள் தமது போராட்டத்தின் ஆரம்பத்திலேயே தெரிவித்துவிட்டார்கள். இருந்தும் இதனை ஓர் பிரச்சினையாக ஆக்குவதற்கு மாற்றுத்தரப்பு பெரும் முயற்சி எடுத்து வருகிறது.

உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்கா ஒரு காலத்தில் பல்கலைக்கழக மாணவர் அமைப்பின் தலைவராக விளங்கியவர். பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டங்களுக்குத் தலைமை வகித்தவரும் கூட. பல்கலைக்கழக மாணவர்கள் அறிவு சார்ந்தவர்கள், சமூக, பொருளாதார, அரசியல் விவகாரங்களில் ஞானம் உடையவர்கள். இருந்தும் உலகெங்கிலும் உள்ள பல்கலைக்கழகங்கள் போராட்டங்களின் மையமாக திகழ்ந்திருக்கின்றன. தேசம் தழுவிய போராட்டங்களுக்கு பல நாடுகளில் ஆரம்ப வேட்டுகள் பல்கலைக்கழகங்களில் இருந்துதான் ஆரம்பித்தும் இருக்கின்றன. அரசியல் சார்பு நிலைப் போராட்டங்களின் ஆரம்ப ஸ்தானங்களாக பல்கலைக்கழகங்கள் திகழ்ந்திருக்கின்றன.

இலங்கையில் சுதந்திரத்திற்குப் பின்னர் இடம்பெற்ற மூன்று கிளர்ச்சிகளினதும் ஆரம்ப மையங்களாக பல்கலைக்கழகங்கள் திகழ்ந்திருக்கின்றன. மருத்துவம் படிப்பதற்கு சோவியத் ரஷ்யாவின் பட்ரிஸ் லுமும்பா பல்கலைக்கழகத்திற்குச் சென்ற ரோகண விஜேவீரா புரட்சிகர கருத்துகளால் ஈர்க்கப்பட்டதால் அங்கிருந்து வெளியேற்றப்பட்டார். சீன சார்பு ஆயுதப் போராட்ட நிலைப்பாட்டை அவர் எடுத்ததால் அவர் மீண்டும் ரஷ்யா செல்ல அனுமதிக்கப்படவில்லை. இவரே இலங்கையில் இடம்பெற்ற இரண்டு ஜே.வி.பி. கிளர்ச்சிகளின் பிரதான சூத்திரதாரியாவார்.

மறுபுறத்தே வடக்கிலும், கிழக்கிலும் தோற்றம் பெற்ற தமிழ் ஆயுதக் கிளர்ச்சிகளின் பிரதான சூத்திரதாரியாகத் திகழ்ந்தவர்களும் சத்தியசீலன் போன்ற பல்கலைக்கழக மாணவர்கள்தான். இவர்கள் உருவாக்கிய தமிழ் மாணவர் பேரவையே ஆயுதப் போராட்டத்தின் தோற்றுவாயாக அமைந்தது. ஆனால் இங்கே பல்கலைக்கழகப் போதனாசிரியர்களும், பேராசிரியர்களும் போராட்டக் களத்தில் நிற்கிறார்கள். சம்பள உயர்வுக் கோரிக்கை நியாயமானதென்று அடித்துச் சொல்ல முடியாது. சிரேஷ்ட பேராசிரியர்கள் ஒன்றே முக்கால் இலட்சம் ரூபாவரை மாதாந்தச் சம்பளம் பெறுகிறார்கள் என்று உயர்கல்வி அமைச்சர் குற்றம் சாட்டுகிறார். சரியோ, பிழையோ இருதரப்புகளும் நெகிழ்ச்சித் தன்மையோடு, பேச்சுவார்த்தையூடாகத் தீர்வினை எட்டுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பேராசிரியர்களின் பிரச்சினையைத் தமது அரசியல் இலாபத்திற்கு பயன்படுத்துவதற்காக குள்ளநரிகள் நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு காத்துக் கிடக்கின்றன. பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும் நடாத்திய பாதயாத்திரைகளில் ஐக்கிய தேசியக் கட்சியினரும், ஜே.வி.பி. யினரும் மற்றும் அரசாங்கத்திற்கு எதிரான கட்சிகளும் பங்குபற்றியிருந்தமை இதற்கு அசல் உதாரணமாகும்.

அரசாங்கம் மட்டுமல்ல, வேலை நிறுத்தத்தில் சம்பந்தப்பட்டவர்களும், எதிர்க்கட்சிகளும் அப்பாவி பல்கலைக்கழக மாணவர்களின் எதிர்காலத்தை மனத்திற்கொண்டு இயன்றவரை விரைவாக, பிரச்சினைக்குத் தீர்வு காண முன்வர வேண்டும்.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி- 021-2219567 / பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

# இனவாத யுத்தத்தின் பரிணாமமும் உலகமயமாக்கலின் தாக்கமும்



பெரும்பான்மை இனங்கள் மற்றும் சிறுபான்மை தேசிய இனங்களின் அடிப்படையான தேசிய நலன்களை, சகல இனவாத தேசியவாதிகளும் எப்படி குறுகிய நலனில் வைக்கின்றனர் என்பதைப் பார்க்க வேண்டும். இலங்கையின் தேசியப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தை ஏற்க வேண்டும். பரஸ்பரம் இனங்களின் ஜனநாயகக் கோரிக்கைகளை அங்கீகரிப்பதும், மக்களின் நலனை முதன்மைப்படுத்திய தேசியத்தை முதன்மைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும், அரசியல் ரீதியாக தெளிவாக வைப்பது நோக்கமாக இருக்க வேண்டும்.

சுயநிர்ணயம் தமிழ் மக்களின் தேசிய விடுதலைக்கு எவ்வளவு அவசியமானதோ, அதே அளவுக்கு இலங்கையின் சுயநிர்ணயமே அவசியமானது. ஏகாதிபத்தியத்தை எதிர்த்தும், அவர்கள் நடைமுறைப்படுத்தும் மறுகாலனியாக்க உலகமயமாதலுக்கு எதிராகவும் தேசியத்தை முன்னிலைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை நாம் உணர வேண்டும். மக்களின் இன ஐக்கியம் எவ்வளவு அவசியமானது என்பதையும் உணரப்பட வேண்டும். இனவாதிகள் பிரித்தாளும் இனவாதக் கோசங்களின் ஊடாக தேச விரோதிகளாக இருப்பதுடன், ஏகாதிபத்தியத்தின் எடுபிடிகளாகவும் இருக்கின்றனர். இவர்கள் ஏகாதிபத்திய உலகமயமாதலின் உற்பத்திக் கூறுகளையும், அதன் பண்பாட்டு கலாச்சாரக் கூறுகளையும் எதிர்ப்பவர்கள் அல்லர். இது அவர்களின் தேசியம் பற்றி அளப்பதற்கு ஒரு அடிப்படையான அளவுகோல் மட்டுமின்றி, உலகமயமாதலை வரவேற்பவர்களாகவும் ஒரு தரகர்களாகவும் அவர்கள் இருக்கின்றனர்.

இடைக்கால தீர்வு என்ற போர்வையில் முன்வைக்கின்ற அனைத்தும் வரலாற்று ரீதியாக இனவாதத்தையும், தொடர்ந்த நிரந்தரமான ஒரு அரசியல் பிழைப்புவாத வழியாகவே முன்வைக்கின்றனர். உலகமயமாதல், தேசியத்தை அழிப்பதற்குரிய தூண்களாக இனத் தேசியத்தை பயன்படுத்துகின்றனர். இனபிரச்சனைக்கு ஒரு ஜனநாயக பூர்வமான தீர்வை முன்வைப்பதற்குப் பதில், அதீதமான சலுகைகளை முன்வைப்பது அல்லது மற்றொன்றை மறுப்பது இலங்கையின் எல்லாத் தரப்பு அரசியல்வாதிகளினதும் இன்றைய நிலையாகும்.

இது சமாதானத்துக்கும், மக்களின் அடிப்படையான வாழ்வியலுக்கும் எதிரானது. இனவாத யுத்தத்தின் மீதான அனைத்து ஜனநாயக விரோதமான கோரிக்கைகளையும் செயல்களையும் இவற்றுக்கிடையில் பக்கம் சாராது விமர்சிப்பதும் செயற்படுவதும் தேவையானது. ஆனால் துரதிஷ்டவசமாக இலங்கை இனவாத அரசியல் களத்தில் உள்ளவர்கள், இதில் ஏதோ ஒன்றைச் சார்ந்து நின்று, மற்றையவற்றை அதீதமாக விமர்சிப்பதன் மூலமும், செயற்படுவதன் மூலமும் இனவாதம் ஆழமாக மேலும் புரையோடுகின்றது. சமாதானமும், மக்களின் வாழ்வியலும் மேலும் இனவாத யுத்த கொடூரங்களால் பலியிடப்படுகின்றன.

விமர்சனமும், மாற்று செயல்முறையும் மட்டுமே சமாதானத்துக்கும், அடிப்படையான மக்களின் விடுதலைக்கும், மக்களின் மகிழ்ச்சியான வாழ்வுக்கும் அடிப்படையான செயல் முறையாகும்.இனவாதம் மற்றும் குறுந் தேசிய இனவாதம் என்று அனைத்தையும் எதிர்த்து ஜனநாயகக் கோரிக்கையை முன்னிலைப்படுத்தி போராடி இனத்தேசியத்துக்கு பதில் தேசியத்தை உருவாக்க வேண்டும்.

"ஒருவனுடைய அறிவு அல்லது கோட்பாடு எத்துணை உண்மை என்பதைத் தீர்மானிப்பதற்கு அவன் அது பற்றி எவ்வாறு அகவயமாக உணர்கிறான் என்பதில் தங்கியிருக்க முடியாது. ஆனால் சமூக நடைமுறையில் புறவயமான அதன் விளைவு என்ன என்பதிலேயே தங்கியிருக்க வேண்டும். நடைமுறை ரீதியான கண்ணோட்டம், தர்க்கவியல் பொருள்முதல் வாதத்தின் முதன்மையானதும் அடிப்படையானதுமான கண்ணோட்டமாகும்"

லெனின் எடுத்துக் காட்டும் இந்த உண்மை, எல்லா சமூக நடைமுறைக்கும் விதிவிலக்கற்று இணைந்து போகின்றது. நமது சமூகக் கண்ணோட்டம் சார்ந்த எண்ணப்பாடுகளை எப்போதும் தர்க்கரீதியான நடைமுறை வாழ்வியலுடன் பொருத்திப் பார்க்கத் தவறுகின்ற போது, உண்மையில் நாம் மிக மோசமாக ஏமாற்றப்படுகின்றோம். இங்கு சமூக அறியாமையே அடித்தளமாகின்றது. இது எல்லாத் துறையிலும் விதிவிலக்கின்றி புரையோடிப் போயுள்ளது. விமர்சனமற்ற மந்தைக் குணமும், சுயவிமர்சன மற்ற வரட்டுத்தனமும் சமுதாயங்களையே அடியோடு புதைக்கின்றன. நிகழ்வுகள் ஏன், எப்படி, எதன் ஊடாக எம் முன் தோன்றுகின்றது என்ற கேள்விகளையும் தர்க்கவியல் வாதங்களையும் விமர்சன, சுயவிமர்சன போக்கில் முன்வைக்க சமுதாயம் தவறுகின்ற போது, அந்த சமுதாயம் தனது சுய அடையாளத்தை இழந்துவிடுவதுடன், அழிந்து போகின்றது. இது தமிழ் சமூகத்துக்கும் சிறப்பாக பொருந்துகின்றது. தமிழ் சமூகம் சிங்கள இனவாதத்தை எதிர்த்து நடத்தும் போராட்டம், இந்த எல்லைக்குள் தன்னை தற்காத்துக் கொள்ளமுடியாது.

தமிழ் மக்களின் சொந்த தேசியத்தை சிங்கள இனவாத அடிப்படை மட்டும் இன்று அழித்துக் கொண்டிருக்கவில்லை என்ற சமூக உண்மையை கிரகிக்க முடியாதவர்களும், அதேநேரம் அதை எதிர்த்துப் போராட முடியாத வரலாற்றுத் தலைமைகள், வரலாற்று ரீதியாக தூக்கி எறியப்படுவார்கள். இதற்கு வெளியில் இந்தக் குறுந்தேசிய அலையில் சிக்கி அதன் பின்னால் வாலை முறுக்கிக் கொண்டு ஓடுபவர்களின் வரலாற்றுப் பிழைப்பு வாதம், இந்த எல்லையைத் தாண்டி குதித்து விடாதபடி சகதியில் சிக்கிவிடுகின்றது. இன்று எம் மண்ணில் குறுந்தேசிய தமிழ் எழுச்சிகள் எல்லாம், மக்களின் அடிப்படையான தேசிய கோரிக்கைக்கு எதிராகவே இருப்பது, தமிழ் மக்களுக்கு வெட்டப்படும் மரணக்குழிதான். இன்று நடத்தப்படும் தமிழ் குறுந்தேசிய எழுச்சி இறுதியானதும் கடைசியானதுமாகும். இன்றைய காலகட்டத்துக்கு பின், இது போன்ற குறுந் தமிழ்தேசிய எழுச்சி என்பது இன்றைய உலகமயமாதல் நிபந்தனையின் கீழ், ஒருக்காலும் சாத்தியமில்லை. இலங்கையில் தேசிய எழுச்சி மட்டுமே இனி வரலாற்றில் சாத்தியமானது.

தமிழ் மக்களின் பிரச்சனை என்ன என்பதை தெரிந்து கொள்வது, இன்றைய சமகால நிகழ்ச்சிப் போக்கில் முக்கியமான அடிப்படையான விடயமாகும். தமிழ் மக்களின் பிரச்சனை என்ன என்ற கேள்விக்கு, போராடுபவர்கள் உட்பட யாரும் பதிலளிக்க முடியாத வகையில் அரசியலில் சூனியம் நிலவுகின்றது. தமிழ் மக்களுக்கு பிரச்சனை உண்டு என்று உணர்பவர்கள், அவை என்ன என்று விளக்க முடியாத அவலம் நிலவுகின்றது. தமிழ் மக்களின் பிரச்சனையை, யுத்தத்தின் பின்னான நடைமுறை விளைவுகளில் இருந்து புரிந்து கொள்வதும் விளக்குவதும் நிகழ்கின்றது. வன்முறை மூலம் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி, ஒரு தலைப்பட்சமாக தம்மைத் தாம் தமிழ் மக்களின் தலைமையாக நிலைநிறுத்திய தனிமனித வழிபாட்டுடன் கூடிய கோரிக்கையில் இருந்தும், தமிழ் மக்களின் பிரச்சனையை விளக்கும் அளவுக்கு தமிழ் மக்களின் தேசிய போராட்டம் பலவீனமடைந்து காணப்படுகின்றது.

# பெண்களின் துர்ப்பிரயோகத்திற்கு இணையம், கைத் தொலைபேசியும் ஒரு காரணம்

## - சுகாதார அமைச்சு

பெண் துர்ப்பிரயோகத்தை ஊக்குவிக்கும் ஒரு காரணியாக கையடக்கத் தொலைபேசி மற்றும் இணைய பாவனையும் உள்ளதாக என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் குடும்ப நல அலுவலகம் - ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிதியத்துடன் இணைந்து மேற்கொண்ட ஆய்வில் இவ்விடயம் தெரியவந்துள்ளது. குறித்த ஆய்வு கொழும்பு, அநுராதபுரம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

துர்ப்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படும் பெண்களில் 70 சதவீதமானோர் கையடக்கத் தொலைபேசி மற்றும் இணைய பாவனையால் என அந்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. குறிப்பாக கையடக்கத் தொலைபேசி மூலம் கிடைக்கும் தவறான அழைப்பு ´மிஸ்ட் கோல்´ மூலம் ஏற்படும் உறவினால் பெண்கள் அதிகம் துர்ப்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுகின்றனர்.

பிள்ளைகளுக்கு கையடக்கத் தொலைபேசி பெற்றுக் கொடுக்கும் போது அவர்கள் அதனூடாக என்ன செய்கிறார்கள் என அவதானிக்க வேண்டும் எனவும் இணைய பாவனை குறித்து பெற்றோர் பிள்ளைகளை ஆராய்ந்து பார்க்க வேண்டுமெனவும் சுகாதார அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

# சிலாபம் முன்னேஸ்வரத்தில் தேவாலயமே அமைந்திருந்தது

## - மேதானந்த தேரர்

சிலாபம் முன்னேஸ்வரம் கோயிலில் காணப்பட்ட பண்டைய ஓலைச்சுவடி ஒன்றைக் காணவில்லை என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் முன்னாள் தலைவர் எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

கோட்டே ஆறாம் சிறிபெரகும்பா மன்னர் காலத்து ஓலைச்சுவடி ஒன்றே இவ்வாறு காணாமல் போயுள்ளது. முன்னேஸ்வரம் கோயில் என தற்போது அழைக்கப்பட்டாலும் பண்டைய காலத்தில் இந்த இடத்தில் தேவாலயமொன்றே அமைந் திருந்தது என அவர் தெரிவித்துள்ளார். வரலாற்றுத் தகவல்கள், பூஜை வழிபாட்டு முறைமைகள் போன்றன அந்த ஓலைச்சுவடியில் குறிப்பிடப்பட்டிருந்தது. பழைய கிணறு ஒன்றில் இந்த ஓலைச் சுவடி போடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தங்களது நடவடிக்கைகளுக்கு இந்த ஓலைச்சுவடி தடையாக அமையும் என்ற காரணத்தினால், மறைக்கப்பட்டிருக்கலாம் என எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

# தமிழகத்துக்கான இலங்கையர்களின் பயணத் தடை விரைவில் நீக்கப்படும்

தமிழ்நாட்டுக்கு விஜயம் மேற்கொண்ட இலங்கையர்கள் மீது தொடர்ச்சியான பல தாக்குதல்கள் இடம்பெற்றதையடுத்து அரசாங்கம் இலங்கையர்களுக்கு விதித்த பயணத் தடையை நீக்குவது குறித்து தற்போது ஆராயப்பட்டு வருகின்றது. செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில் இந்தப் பயணத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

ஐக்கிய நாடுகள் சபையின் 67ஆவது வருடாந்த கூட்டத்தில் கலந்துகொள்ள அமெரிக்கா சென்றிருக்கும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இன்று நாடு திரும்புகிறார். அவர் நாடு திரும்பியதும் இது குறித்து முடிவு எடுக்கப்படும் என்று வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.


தமிழகம் செல்லும் இலங்கையர்களுக்கான பயணத் தடை செப்டம்பரில் விதிக்கப்பட்ட பின்னர் எவ்வித அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை அரசாங்கம் பயணத் தடையை விதிப்பதற்கு முன்னராகவே இலங்கையர்கள் மீதான பல்வேறு தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# முஸ்லிம்களின் மேம்பாட்டுக்காக உழைப்பவர் அமைச்சர் டக்ளஸ் மட்டுமே என சுபியான் பாராட்டு

யாழ் மாவட்ட முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம் வாழ்வாதாரம் உள்ளிட்ட அடிப்படை உரிமைகளுக்காக தொடர்ந்தும் உரிமைக் குரல் கொடுத்து வருபவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மட்டுமே என யாழ் மாநகர சபை உறுப்பினர் சுபியான் தெரிவித்தார்.

யாழ் ஒஸ்மானியக் கல்லூரியில் நேற்று இடம்பெற்ற மாவட்ட முஸ்லிம் மக்களின் மீள் குடியேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், 1990ஆம் ஆண்டு யாழ் மாவட்டத்திலிருந்து முஸ்லிம் மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டபோது அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த ஒரேயொரு தமிழ் அரசியல்வாதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களே என்றும், 1994ம் ஆண்டு காலப்பகுதியில் தீவகத்திற்கு அமைச்ச்ர் அவர்கள் வருகை தந்ததன் பின்னர் முஸ்லிம் மக்களை மீளக் குடியமர்வதற்கு அழைப்பு விடுத்ததாக சுட்டிக் காட்டிய அவர் 2009ம் ஆண்டுக்கும் பின்னரான இக்காலப்பகுதியிலும் எமது மீள்குடியேற்றத்திலும் அதிக அக்கறைகாட்டி அரும்பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்.

புத்தளத்தில் சோல்ரன் 2 முகாமில் முஸ்லிம் மக்கள் வாழ்ந்து வந்த வேளையில் அந்த முகாம் எரிந்தபோது மக்கள் நிர்க்கதியான நிலைக்கு உள்ளாகிய நிலையில் தில்லையடிப் பகுதியில் தனது சொந்த நிதியில் காணிகளை வாங்கிய அமைச்சர் அவர்கள் அந்த மக்களை அங்கு குடியமர்த்தினார்.

இதனால் அந்தப் பகுதிக்கு மக்கள் தேவாபாத் என பெயரிட்டனர்.

இதனிடையே யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த முஸ்லிம் மக்கள் புத்தளம் மாவடடத்தில் அமைச்சர் அவர்களின் பெயரைச் சொல்லத்தக்கதாக தற்போதும் முன்பள்ளிகளை நடாத்தி வருகின்றமையும், பள்ளிவாசல்களை அமைத்துத்தந்த பெருமையும் அவரையே சாரும் என்றும் புகழாரம் சூட்டினார்.

பலவந்தமாக வெளியேற்றப்பட்டதன் பின்னர் கடந்த காலத்தில் நாம் தங்கியிருந்தவேளை எமது வாழ்வாதார மேம்பாட்டுக்காக பல்வேறு உதவிகளையும் வழங்கி வந்த அமைச்சர் இன்றும் பல்வேறு உதவித் திட்டங்களையும் வழங்கி வாழ்வாதார மேம்பாட்டுக்காக தொடர்ந்தும் உழைத்து வருகின்றார் என்றும் சுட்டிக்காட்டினார்.

# ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் மேம்பாடு தொடர்பில் கலந்துரையாடல்

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் கல்வி நிலையை மேம்படுத்துவது தொடர்பில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுடன் கல்விச் சமூகத்தினர் கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது கல்லூரியின் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் துறைசார்ந்தவர்களுடன் கலந்துரையாடி உரிய தீர்வினைப் பெற்றுத் தருவதாகவும் அதுவரையில் மாணவர்களினது கற்றல் செயல்பாடுகளுக்கு, ஆசிரியர்களது கற்பித்தல் செயற்பாடுகளுக்கும் பாதகம் ஏற்படாத வகையில் பாடசாலைச் சமூகத்தினர் ஒன்றிணைந்து செயற்படவேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இதன்போது வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் பிரதிச் செயலாளர் விக்னேஸ்வரன், மாகாண கல்வி அபிவிருத்திக் குழுத் தலைவர் இராசெல்வவடிவேல், ஸகந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் மற்றும் இந்நாள் அதிபரும் கலந்துகொண்டிருந்தனர்.

# தாக்குதல் நடத்த, காலி மாணவர்களை பத்தேகம தேரர் தூண்டினாராம்

காலி வித்யாலோக வித்தியாலயத்தின் புதிய அதிபர் மாணவர்களின் தாக்குதலுக்கு இலக்கான சம்பவம் தொடர்பாகச் சந்தேக நபர்கள் இருவரின் பெயரைத் தான் பொலிசாருக்குத் தெரிவித்தபோதிலும் இதுவரை அவாகள் கைது செய்யப்படவில்லை என்று புதிய அதிபர் தெரிவித்தார்.

ஒருவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான ஓர் பௌத்த பிக்கு, மற்றையவர் மேற்படி பாடசாலையின் முன்னாள் அதிபர் எனத் தான் குறிப்பிட்டதாக அவர் சொன்னர். இவர்களே மாணவர்களைத் தூண்டிவிட்டு கலகத்தை உண்டு பண்ணியவர்கள் என்றும் வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார்.

வன்செயல் தாக்குதல்கள் நடைபெற்றபோது தன்னைப் பாதுகாக்க முனைந்து, கல்லெறித் தாக்குதலுக்கு இலக்கான பொலிசாருக்கு நன்றி தெரிவிப்பதாகவும் புதிய அதிபர் தெரிவித்தார்.

மாணவர்களை தூண்டிவிட்டார்கள் என்று புதிய அதிபரால் குற்றம்சாட்டப்பட்டவரும், சமசமாஜக் கட்சியின் முன்னாள் எம்.பி.யுமான பத்தேகம தேரரிடம் தொடர்பு கொண்டு இது தொடர்பாக வினவினோம். “தான் மாணவர்களை தூண்டிவிடவில்லை என்றும், ஒரு மதச் சடங்கிற்கு சென்றுவிட்டு திரும்பி வருகையில் நகரில் தன்னைச் சந்தித்த பெற்றோர்கள் சிலர் பாடசாலைக்கு வருமாறு தன்னைக் கேட்டுக்கொண்டதாலேயே தான் அங்கு சென்றதாகவும் பத்தேகம தேரர் தெரிவித்தார்.

பாடசாலையில் குழப்பம் ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட பொலிசாரும், கலகம் அடக்கும் பிரிவினரும் சம்பவ இடத்தில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் என்றும் பத்தேகம தேரர் தெரிவித்தார்.

# அவுஸ்திரேலியா செல்லும் அகதிகள் நேர்மையற்றவர்கள்

அவுஸ்திரேலியா செல்லும் இலங்கை அதிகள் அங்கிருந்து நவ்ரு தீவுக்கு செல்ல விரும்பாமல் நாடு திரும்பும் செயற்பாடானது, அவர்கள் நேர்மையான அகதிகள் இல்லை என்பதை உறுதி செய்வதாக அவுஸ்திரேலிய ஊடக செய்தியில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் பசுபிக் திட்டத்தின் கீழ், கிறிஸ்மஸ் மற்றும் டார்வின் முகாம்களில் உள்ள இலங்கை அகதிகள் நவ்ரு மற்றும் பப்புவா நியுகினியா போன்ற தீவுகளுக்கு மாற்றப்படுகின்றனர்.

எனினும் அங்கு செல்ல விரும்பாத 40க்கும் அதிகமான இலங்கை அகதிகள் மீண்டும் நாடு திரும்பியுள்ளனர்.

இலங்கையில் அச்சுறுத்தல் இருப்பதாக கூறிக் கொண்டு அவுஸ்திரேலியா வந்த அவர்களால், எவ்வாறு அச்சம் இன்றி மீண்டும் இலங்கைக்கு செல்ல முடிகிறது என்று அந்த ஊடகங்கள் கேள்வி எழுப்பியுள்ளன.

இதில் இருந்து அவர்கள் நேர்மையான அகதிகள் இல்லை என்றும், பொருளாதார தேவைக்காகவே அவுஸ்திரேலியா வருகின்றமை உறுதியாவதா கவும், இதன் மூலம் மனித உரிமைகள் நிறுவனங்கள், அரச சார்பற்ற அமைப்புகள் மற்றும் தமிழ் ஒன்றியங்கள் போன்றவை முன்வைத்த குற்றச்சாட்டுகள் பொய்யானது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# மட்டு. தேர்தல் முடிவை ஆட்சேபித்து ரிட் மனு

நடந்துமுடிந்த மாகாண சபைத் தேர்தலையடுத்துத் தெரிவிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட முடிவுகள்ள ரத்துச் செய்யுமாறு கோரி ஈழவர் ஜனநாயக முன்னணியின் குழு ஒன்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தல் “ரிட்“ மனு தாக்கல் செய்திருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகியவற்றின் உந்துதலாலேயே முடிவுகள் தவறாக அல்லது மாற்றியமைக்கப்பட்டு வெளியிடப்பட்டன என்று மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பிரதிவாதிகளாக தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, ஐ.தே.க. ஆகியவற்றின் பொதுக் காரியதரிசிகள் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

# இது நல்லாசான்களுக்கு

**ஒக்டோபர் 6.** சர்வதேச ஆசிரியர்கள் தினம். சிறர்களின் சிறந்த எதிர்காலத்துக்காகத் தம்மை அர்ப்பணிக்கும் ஆசிரியர்களை கௌரவப்படுத்தும் நோக்கோடு பிரகடனப்படுத்தப்பட்ட உன்னதமான தினம். அத்தினத்தில் கல்விச்சாலைகள் அனைத்திலும் ஆசிரியப் பெருந்தகைகள் கௌரவிக்கப்படுவர். அனைத்து ஊடகங்களும் அவர்தம் பெருமை பேசும். இது வழமையாக வருடாவருடம் நடைபெறும் நிகழ்வுகள் தான்.

ஆனால் இக்கட்டுரை வழமைக்கு மாறானது. இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறும் கற்பித்தல் போக்குக் குறித்துச் சில கேள்விகளை இப் பத்தி எழுப்ப எத்தணிக்கிறது. இன்று கொண்டாடப்படும் ஆசிரியர் தின நிகழ்வுகளிலே கௌரவிக்கப்பட எத்தனை ஆசிரியர்களுக்குத் தகுதி இருக்கிறது? அதற்குத் தகுந்ததாக கற்பித்தல் முறைமை இங்கு பேணப் படுகிறதா? பலருக்கு இக் கேள்விகள் கசப்பானவையாக இருக்கும் என்பதை நிச்சயம் சொல்லலாம். சமூகத்தில் உள்ள சிறு தொகையினருக்கு கசப்பாகவே இருக்கும் என்பதற்காக ஒரு இனத்தின் எதிர்காலத்தையே கேள்விக்குட்படுத்தலாமா?

ஒரு சமூகத்தின் செல்நெறியை அதிலே நிகழும் கல்விசார் நடவடிக்கைகள் தான் தீர்மானிக்கும் சக்திகளாகத் திகழும். எமது இனத்தின் பண்டைய வாழ்வுசார் பண்பாட்டினை நோக்குவோமாக இருந்தால் அங்கு கல்வியே சகல விழுமியங்களையும் பேணுகின்ற, உருவாக்குகின்ற நதிமூலமாகத் திகழ்ந்ததை நாம் காணலாம். குரு,சீடர் உறவு முறையில் குருகுலவாசக் கற்பித்தல் நடவடிக்கைகள் பேணப்பட்டிருந்ததை நாம் அறியலாம்.

இந்தக் குருகுலவாசக் கல்வியானது வெறுமனே மனனம் செய்யும், சூத்திரங்களைக் கற்கும் நடவடிக்கைகளாகச் சுருங்கியோ முடங்கியோ இருந்திருக்கவில்லை. மாறாக தனிமனித,குடும்ப,சமூக,நாடு சார் வாழ்க்கைக்குச் சீடர்களைப் பக்குவப் படுத்தும் ஓர் உண்மையான பல்கலைக்கழக முறைமையாகவே இருந்ததை அறிய முடிகிறது. (இன்றைய நமது பல்கலைக்கழகங்கள் பெயரளவிலானவையாக மட்டுமே காணப்படுகின்றன என்பது வேறு விடயம். அதுபற்றி வேறொரு சந்தர்ப்பத்தில் ஆராய்வோம்.)

அரசகுமாரனாக இருந்தாலும்,சாதாரண குடிமகனின் புதல்வனாக இருந்தாலும் எந்த ஏற்றத் தாழ்வுமின்றி குருகுலத்தில் தங்கிநின்று கலைகளையும் வித்தைகளையும் குருபக்தியுடன் கசடறக் கற்று வெளியேறுவதே அந்தக் கல்வி முறையாகும். வெறும் காலவரைகளுக்குள் கற்றலை மட்டுப் படுத்தாமல் மாணவன் சகல துறைகளிலும் பூரண அறிவைப் பெறும் வரை கற்பிக்கும் நடவடிக்கைகள் தொடரும்.

இங்கு போதிக்கும் குரு எனப்படும் ஆசான்களின் பங்களிப்பு மிகப் பிரதானமானது. எந்தக் காய்தல் உவத்தலுமின்றி, பாரபட்சங்களுமின்றி தாமறிந்த வித்தைகளைச் சீடச் செல்வங்களுக்குக் குறைபாடின்றிப் போதித்து அவர்களை வீட்டிற்கும் நாட்டிற்கும் உகந்த சிறந்த மனிதர்களாக உருவாக்கி வெளியே அனுப்புவதையே தமது தலையாயக் கடமைகளாகக் கொண்டியங்கியவர்கள். தமக்கான குருதட்சணைகளைக் கூட எந்தப் பேரங்களுமின்றி மனமுவந்து கொடுப்பனவற்றை மலர்வுடன் ஏற்று வாழ்த்தி அனுப்பும் சீரிய பண்பாட்டைக் கொண்டிருந்தவர்கள்.

அங்கிருந்து வெளியேறும் சீடர்கள் ஆளுமை மிகுந்தவர்களாக அதே நேரம் பணிவு கொண்ட சிறந்த மனிதர்களாகப் புடம் போடப்பட்டிருப்பார்கள். எனவே சிறந்தப் பண்பாட்டையும் உன்னதக் கலாசாரத்தையும் உலகுக்கு வழங்கி எமதினத்தைப் பெருமைப்படுத்தினார்கள். அந்தப் பெருமை தான் இன்றுவரை உலக அரங்கில் எமதினத்துக்கென ஒரு தலை நிமிர்வை தக்கவைத்துள்ளது.

இன்று போல் அல்லாமல் அன்று ஆசிரியர் வேதனம் மிகக் குறைவானதாகவே இருந்தது. இன்றும் "ஏழை வாத்தி" என்ற சொற் பிரயோகம் நம்மிடையே வழக்கத்தில் இருப்பதைக் குறிப்பிடலாம். வருமானம் குறைவானதாக இருந்து வாழ்க்கைநடாத்துவதற்காகச் சிரமப்பட்ட போதிலும் அந்தக்கால ஆசிரியர்கள் தமது கடமைகளில் தவறியவர்கள் அல்லர். தமக்கு விதிக்கப்பட்ட கடமை நேரத்துக்கும் அப்பால் மேலதிகமாக மாணாக்கரின் கல்வி மேம்பாட்டுக்காக உழைத்திருந்தார்கள் என்பதை இன்று கல்விச்சேவையில் இருப்போர் உள்ளிட்ட வளர்ந்தோர் எவரும் மறந்திருக்க மாட்டார்கள் என நம்பலாம். போர் நடவடிக்கைகள் தீவிரமாக இருந்தக் காலப் பகுதியில் கூட இத் தகையப் போற்றத்தக்க கற்பித்தல் நடவடிக்கைகள் இருந்துள்ளமை யாவரும் அறிந்ததே.

பாடசாலைக் கற்பித்தல் நேரத்துக்கு மேலதிகமாக தமது நேரத்தை ஒதுக்கி மாணவரின் கல்விமேம்பாட்டுக்காக உழைத்த பாரம்பரியம் இங்குண்டு. கற்றலில் மந்தமாக இருக்கும் மாணவரின் மீது தனி அக்கறை எடுத்து அறிவியல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் அவர்களைப் பக்குவப்படுத்தி வல்லவர்களாக உருவாக்கியிருந்ததை இலகுவில் மறக்க முடியாது.

கற்றல் நடவடிக்கைகளில் மட்டுமல்ல் விளையாட்டு, கலை, மற்றும் முறைசாராத் துறைகளிலும் கூடுதல் அக்கறை எடுத்துச் சிறார்களுக்கு வழிகாட்டிகளாகத் திகழ்ந்தவர்கள் அந்த ஆசிரியர்கள்.

கடமை நேரங்கள் போக தமது சொந்த வாழ்க்கைக்கான நேரத்தையும் இந்தச் சிறார்களுக்கான கற்பித்தலில் செலவழித்தப் பல ஆசிரியர்களை இன்றும் அவர்களின் வயோதிபத்தில் நாம் காணலாம். தமது கைக் காசைச் செலவழித்து ஏழை மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களை வாங்கிக்கொடுத்து அவர்களின் கல்வியிடையறாது தொடர வழிவகை செய்தவர்களும் உண்டு. வறுமையில் தாம் வாடிய போதும் தமது மாணவரின் கல்வி முன்னேற்றத்தில் இன்பம் கண்டவர்கள் அந்த மகாத்மாக்கள்.

இப்படிக் கல்வி கற்ற பலர் இன்று அரச மற்றும் தனியார் துறைகளின் உயர் பதவிகளில் இருப்பதைக் காணலாம். இன்றும் எண்ணிக்கையில் குறைந்தளவான ஆசிரியர்கள் இவ்வாறான அர்ப்பணிப்புடன் செயற்படுவதைக் காணக்கூடியதாக இருக்கின்ற போதும் முன்னைய காலங்களைப் போல் ஆசிரியர்களின் பொது மனநிலையில் இந்த உணர்வுகள் காணப்படாமை எமது இனத்துக்கு ஒரு சாபக் கேடாகவே உள்ளது.

கல்வி என்பது இன்றைய அரசியலைப் போலச் சேவை என்ற நிலை கடந்து வர்த்தகம் என்கின்ற நிலைமைக்குத் தரம் தாழ்ந்து போய் இருக்கிறது. பெரும்பான்மையான ஆசிரியர்களும் கல்விசார் நிர்வாக அதிகாரிகளும் "குரு" என்கின்ற உன்னதமான இடத்திலிருந்து இறங்கி எமது அரசியல்வாதிகள் போல் கறுப்புச்சந்தை வியாபாரிகளாகி விட்டார்கள். மக்களின் வரிப் பணத்திலிருந்து தாம் பெற்றக் கல்வியை அந்த மக்களுக்கே "அறாவிலை"யில் விற்பனை செய்கின்றார்கள். சிரமப்பட்டு அறாவிலை செலுத்தியேனும் பெற்ற கல்வியால் மாணவர்கள் சித்தியடையும் போது அந்தச் சித்தியையும் தமது அடுத்தக் கட்ட வியாபாரத்துக்கான முதலீடுகளாக்கிக்கொள்ளும் மலைவிழுங்கிக் கொள்ளையராக இவர்கள் இருக்கும் போது எமது இனத்தின் எதிர்காலம் இருண்ட யுகத்தை நோக்கி வீழ்வதை விட வேறேதாவது அதிசயம் நடக்குமா? தம்மிடம் கற்றுச் சித்தியடைந்த மாணாக்கரின் தொகைகளை விளம்பரத் தூண்டில்களாக்கும் இவர்கள் சித்தியடையாதிருக்கும் தொகையினர் பற்றி வாய் திறவாமல் இருக்கும் இரகசியத்தை ஊகிப்பது ஒன்றும் கடினமான காரியமல்ல.

ஆசிரியர் மாணவர் என்போரிடையே இருக்க வேண்டிய மதிப்பார்ந்த உன்னத உறவு முறை இன்று எந்தளவில் உள்ளது என்ற கேள்வியை ஒவ்வொருவரும் தம்மைத் தாமே கேட்டுக் கொள்ள வேண்டிய இறுதித் தருணம் இது. ஒவ்வொரு தனி மனிதனையும் சான்றோனாகக் கட்டியெழுப்பி அவனூடாக அவன் சார்ந்த சமூகத்தையும் இனத்தையும் நாட்டையும் கட்டியெழுப்ப வேண்டிய ஆசான்கள் பணத்தாசைப் பிடித்த வியாபாரிகளாகும் போது அவர்களிடமிருந்து பண்டங்களை விலை கொடுத்து வாங்கும் வாடிக்கையாளர்களாக மட்டுமே மாணவர்கள் மாறும் போது அந்த அழகான உறவு முறையினையும் பயபக்தியினையும் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

இந்த இடத்தில் தவிர்க்கமுடியாமல் சில விடயங்கள் மனப்பரப்பில் வந்து விழுகின்றன. தமக்குக் கற்பித்த ஆசிரியர்களைக் கண்டதும் ஒதுங்கி நின்று மரியாதை செலுத்தும் எத்தனையோப் பெரியவர்களை இன்றும் எமது வாழ்வியல் சூழலில் காணக்கிடைக்கின்றது. இன்னும் பலர் தாம் இன்னாரின் மாணவன் என்று சொல்வதில் பெருமிதமடையும் சந்தர்ப்பங்களையும் நாம் சந்திக்கின்றோம். வாழ்வில் உயர்ந்த இடத்திற்கு வளர்ந்து விட்ட போதும் தமது ஆசிரியர்களை மதிப்புடன் நினைவு கூரும் இந்தப் பண்பாட்டை இனிவரும் காலத்தில் காணக்கிடைக்குமா என அங்கலாய்க்க வேண்டிய துர்ப்பாக்கியச் சூழல் இன்றுள்ளது.

"மாதா, பிதா, குரு, தெய்வம்" என தெய்வத்துக்கே ஒருபடி மேலாக ஆசிரியர்களை வைத்துத் தொழும் பண்பாட்டுக்கு உரியவர்கள் நாம். இன்று எத்தனை பேர் அந்த உயரிய வணக்கத்துக்குத் தகமை உடையவர்களாய் நடக்கின்றார்கள்? எமது



பாரம்பரியத்த ஆசிரியர்களைக் கடவுளுக்கும் மேலாக வைத்துப் போற்றும்

# அல்ல

வழமை




இருந்திருந்ததென்றால் அந்த ஆசிரியர்கள் எப்படி நடந்து கொண்டிருப்பார்கள் என்பதை விலாவாரியாகச் சொல்லத் தேவையில்லை. அந்தப் பண்பாடு எம்மினத்தில் உடைகிறது என்றால் அதற்குக் காரணமானவர்களைத் துரோகிகள் என்று அடையாளப் படுத்துவது எவ்வாறு தவறாகும்?

இன்று கல்வி வியாபாரம் அமோகமாகச் சூடு பிடித்துள்ளது. எந்த வியாபாரத்திற்கும் சூடு பிடிக்கும் “சீசன்” அவ்வப்போது வந்து போவதே வழமை. பண்டிகைக்காலம், திருவிழாக்காலம், மழைக்காலம், வெயிற்காலம் என “சீசன்”கள் வந்து போவதுண்டு. ஒவ்வொரு வகை சீசனிலும் ஒவ்வொரு வகை வியாபாரங்கள் சூடு பிடிப்பதுணடு. ஆனால் கற்பித்தல் வியாபாரத்துக்கு மட்டும் தனிப்பட்ட சீசன் என்று ஏதுமில்லை. வருடம் முழுவதும் வணிகம் அமோகமாக நடக்கும்.

ஐந்தாமாண்டுப் புலமைப்பரிசில் பரீட்சை,க.பொ.த சாதாரண/உயர் தரப்பரீட்சைகள் என ஓரே சூடு தான். இடையிடையே முன்னோடிப் பரீட்சைகள் வேறு. ஒலிவாங்கி வைத்து வியாபாரம் செய்யுமளவுக்கு கூட வாடிக்கையாளர் கூட்டம்.

இதிலும் மிகக் கொடுமை என்னவென்றால **தாம் கற்பிக்கும் பாடசாலைகளில் இத்தகைய ஈடுபாட்டை அவர்கள் காட்டுவதில்லை. அங்கு தம்மிடம் கற்கும் மாணவர்களைக் கூட நேர்த்தியான கற்பித்தல் தேவையானால் தாம் கற்பிக்கும் தனியார் வகுப்புகளுக்கு வரும்படி நிர்ப்பந்திக்கும் போக்கு. பாடசாலைக் கற்பித்தலில் தொய்வைக் காட்டி தமது தனிபட்ட வகுப்புகளில் மட்டும் அக்கறை காட்டும் இந்தப் பிரதிநிதிகள் தமது மனச்சாட்சியை எங்கு அடகு வைத்திருப்பார்கள்?** மாதாந்தம் பெருந்தொகையைப் பாடசாலைக் கற்பித்தலுக்கெனப் பெறும் போது இவர்களின் மனம் கூசுவதில்லையா?

தான் வாழுகின்ற சுற்றாடல் பற்றியும் சமூகம் மற்றும் தேசம் பற்றியும் அக்கறையின்றி இருப்பவன் ஒருபோதுமே ஆசிரியர் என்றுத் தன்னை அழைத்துக் கொள்ளத் தகுதியற்றவன். தனது சுய இலாபத்துக்காக அதிகாரத்துக்கும் அரசியல் சார்புகளுக்கும் கல்வியையும் மாணாக்கரையும் பணயம் வைப்பவர் எவரும் சோரம் போகின்றவர்களாகவே கருதப்பட வேண்யடிவர்கள். அது ஆசிரியர்களாகவோ கல்வித்துறை அதிகாரிகளாகவோ இருக்கலாம். எவராக இருந்தாலும் இந்தப் போக்கு கண்டிக்கப் படவேண்டியதுடன் கடுமையாகத் தண்டிக்கப்படவும் வேண்டியவர்களே.

ஒருபக்கம் பணத்தாசையால் மாணவரின் உரிமையை மீறுகிறார்கள். மறுபக்கம் சில எலும்புத் துண்டு சலுகைகளுக்காகச் சாக்கடை அரசியல்வாதிகளை ஆராதித்து கல்விச்சமூகத்தையே நாறப் பண்ணுகின்றார்கள். அதுமட்டுமல்லாமல் நேர்மையாகக் கல்விச் சேவையைக் கொண்டு நடாத்த முனையும் ஆசிரியர்களையும் நிர்வாக அதிகாரிகளையும பிழைக்கத்தெரியாதவர் எனவும் பத்தாம் பசலிகளெனவும் எள்ளி நகையாடுவதுடன் அவர்களை அச்சுறுத்தவும் செய்யும் காடைத்தனங்களும் அரங்கேறுவதாக அறியமுடிகிறது. சிலர் பழிவாங்கல் நடவடிக்கையாக இடமாற்றம் போன்ற தண்டணை நடவடிக்கைகளுக்கும் உள்ளாக்கப் பட்டிருக்கின்றனர்.

இக்கட்டுரையை எழுதிக்கொண்டிருக்கும் போது கூட ஒரு தகவல் வந்து சேர்ந்திருக்கிறது. யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்திலேயேத் தனக்கென உயர்ந்த இடத்தைத் தக்க வைத்திருக்கும் வரலாற்றுப் பெருமை கொண்ட ஒரு கல்லூரியில் மாணவன் ஒருவர் ஆசிரியர் ஒருவரால் மோசமாகத் தாக்கப்பட்டுள்ளார். இரத்தக் காயங்களேற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் அளவிற்குக் கட்டையால் அவர் தாக்கப் பட்டுள்ளார். இதை எதிர்த்துக் கேள்வியெழுப்பிய மாணவர்கள் அதிபரால் வெளியே நிறுத்தப் பட்டுள்ளனர். அநியாயத்தைத் தட்டிக் கேட்டதனால் ஒரு ஆசிரியர் அதிபரால் பணி நீக்க அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளார். பாதாள உலகக் குழக்களின் நடவடிக்கைகளாகத் தாக்கிய ஆசிரியரும் அதிபரும் நடந்து கொண்டுள்ளனர். தொடர்ந்தும் அரசியல் செல்வாக்குகள் நியாயம் கேட்ட ஆசிரியரையும் மாணவர்களையும் அச்சுறுத்துவதாக அறிய வருகிறது. இப்படியான நிலையில் ஒரு ஆரோக்கியமான எதிர்காலத்தை எப்படி எதிர்பார்க்க முடியும்.

போருக்குப் பின்னான சூழல் இப்படியான நெறிமீறல்களுக்கு வாய்ப்பளித்து நிற்கின்றது. போர் நடைபெற்ற காலப்பகுதியிலே பிறழ்வுகளுக்குத் தண்டணை வழங்கப்படும் என்கிற யதார்த்தம் இருந்ததால் அதற்கு அஞ்சி ஆட்டுத் தோல் போர்த்தியிருந்தச் சில ஓநாய்கள் இன்று குளிர்விட்டுப் போய் தோலைக் களைந்தெறிந்து விட்டுத் தமது சுயரூபங்களைக்காட்டி வேட்டையில் ஈடுபடுகின்றன. அரசியலும் அதிகாரமும் வரம்பு மீறிக் கல்வித்துறையில் ஊடுருவி அதைச் சீரழிக்கும்போது தாமும் சேர்ந்து சீரழிக்கின்றனர் அல்லது அநியாயங்களைத் தமது அதிகாரங்களுக்கு உட்பட்ட முறையில் தட்டிக்கேட்காது காணாதது போல் கண்மூடித் தூங்குகின்றனர். சுட்டிக்காட்டும் போது வசதியாகக் குருடராகவோ செவிடராகவோ நாடகம் போடுகின்றனர். இவர்களோடு ஒப்பிடும்போது உண்மையாகவே பார்வையற்ற, செவிப்புலனற்ற குறைபாடுடையவர்கள் பெருமைப்படலாம். ஏனெனில் அவர்களின் குறைபாடுகள் வேறெவருக்கும் பாதகங்களை ஏற்படுத்துவன அல்ல.

மனப்பூர்வமாகவோ நிர்ப்பந்தம் காரணமாகவோ செய்ய வேண்டியவற்றைச் செய்யாதிருப்பது கடமை தவறும் செயற்பாடே. கடமைகளைச் சரியாக ஆற்றாதவர்கள் அவ்வவ்ப் பதவிகளில் இருப்பதற்குத் தகுதியற்றவர்கள். தத்தமது மீறல்களுக்கு உயர் அதிகாரிகளையும் அரசியல் அழுத்தங்களையும் காரணம் காட்டுவது பொருத்தமற்றது. இலங்கை நாட்டின் நிர்வாகச் சட்டத்தில் கடமையைச் செய்யாதிருப்பதுவும செய்ய விடாமற் தடுப்பதுவும் தண்டணைக்குரிய குற்றம். சேவையைக் கடமையாயக் கொண்டவர்கள் அதைச் செய்யாது விட்டால் அந்தந்தக் கதிரைகளில் அமர்வதற்கான எந்தத் தார்மீக உரிமையும் அவர்கட்கில்லை.

உயர் மட்ட அதிகாரத்தாலோ அரசியல் அழுத்தங்களாலோ இடையூறுகளைச் சந்திக்கும் பட்சத்தில் அவற்றிலிருந்து நிவாரணமடைய ஏராளமான வழிமுறைகள் இங்கு உண்டு. எல்லாவற்றிலும் மேலாக மனித உரிமை ஆணைக்குழு, நீதிமன்றம் போன்ற உயர் அமைப்புகளும் உண்டு. இவற்றையும் தாண்டி பயமுறுத்தல்கள், உயிரச்சுறுத்தல்களைக் காரணம் காட்டுவொருக்து இன்னொரு வழியும் உண்டு.

அது தமதுப் பதவிகளில் இருந்து விலகுவதேயாகும்.

ஓய்வூதியத்தைக் கருதி நாற்காலியைக் கட்டிப்பிடித்திருப்பதை விட இது உத்தமமாகும். இதன் மூலம் தான் சார் சமூகத்துக்கும் தனது நேரடிச் சந்ததியினருக்கும் நன்மை செய்தவர்களாவார்கள். இதுவரை தாம் அறிந்தோ அறியாமலோ செய்தப் பாவங்களுக்கு கழுவாய் தேடிக்கொண்ட திருப்தியும் கிடைக்கும்.

இன்று எமது இனம் ஒரு கேள்விக்குறியான காலகட்டத்தைச் சந்தித்து நிற்கிறது. தமது அடையாளங்களைப் பேணவும் தமிழர்களாக வாழவும் திணறி நிற்கும் அவலம் இங்கு அரங்கேறிக் கொண்டிருக்கிறது. அரசியலில் அனாதைகளாகவும் வாழ்வியலில் எதிர்காலம் அற்றவர்களாகவும் தடுமாறும் எம் சந்ததியினருக்கு வழிகாட்டிகளாக நிற்கவேண்டியவர்கள் யார்? அரசியலும் அதிகாரமும் சாத்தான்களின் கால்களைக் கழுவுவதையே தலையாயப் பணியாகக் கொண்டு நிற்கும் போது இந்த மக்களைக் காப்பவர் யார்?

உலகெங்கும் விரட்டி விரட்டித் துரத்தப்பட்ட, கொல்லப்பட்ட யூத இனத்தவர் தமக்கென இஸ்ரவேல் என்ற நாட்டைக் கட்டியெழுப்பி இன்று வல்லாதிக்கச் சக்தியாக தம்மை நிலை நிறுத்துவதற்குப் பெரும் பங்களிப்பை வழங்கியவர்கள் அந்த இன அறிவுசீவிகள் என்பதை வரலாறு சொல்லும். இப்படியானப் பங்களிப்பு எமது இனத்துக்கும் தேவைப்படும் காலமிது.

தாம் பெற்றுத்தேறிய கல்வியும் தாம் பெறுகின்ற வேதனங்களும் தமது தனிப்பட்ட உடமைகள் எனப் பலர் கருதுவது தெரிகிறது. ஆனால் யதார்த்தம் அதுவல்ல. மக்களின் வரிப் பணமே இவர்களுக்குக் கல்வியை வழங்கியது. அதே வரிப்பணமே இன்று வேதனமாகச் சென்றடைகின்றது.

எனவே கல்வியையும் வேதனத்தையும் வழங்கும் மக்களுக்கே இவர்கள் சேவையாற்ற வேண்டுமே தவிர மக்கள் நலனுக்கு விரோதமாகச் சேயற்புடும் அதிகாரிகளுக்கோ அரசியல்வாதிகளுக்கோ அல்ல. அந்த அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் இதே வரிப் பணமே ஊதியங்களாகக் கிடைக்கின்றன என்பதை எவரும் மறந்து விடக்கூடாது.

இன்று எமது இனம் சந்தித்துக் கொண்டிருக்கும் இடரார்ந்த நிலைமையில் அதை சீராக்கவும், மக்களை மீட்டெடுக்கவும் வேண்டிய கடப்பாடு எல்லோருக்குமுண்டு. அதிலும் கல்விச் சமூகத்துக்கு நிறையவே உண்டு. அதை அவர்கள் உணர வேண்டும். சேர்ந்து செயற்பட வழிகாட்டப் பலர் இங்கு உண்டு.

எதைச் செய்யா விட்டாலும் கல்வித்துறையை நாசமாக்கும் நடவடிக்கைகளையாவது இவர்கள் தடுத்து நிறுத்த முன்வரவேண்டும். மௌனங்கள் கூட அநீதியையும் அங்கீகரிக்கும் ஒரு நடவடிக்கையே.

போர் முடிவடைந்ததாகக் கூறி எமது மக்கள் முகாம்களில் அடைபட்டிருந்த போது கூட அங்கிருந்த ஆசிரியர்கள் தமது வேதனைகளுக்கு மத்தியில் எஞ்சிய சிறார்களுக்குப் போதிப்பதில் அர்ப்பணிப்போடு இருந்ததால் தான் உடனடியாக வந்த தேர்வுகளில் சிறந்த பெறு பேற்றை அவர்களால் பெற முடிந்தது. இரத்தங்களையும் சாவுகளையும் சந்தித்த போதிலும் ஆசிரியர்களது அர்ப்பணிப்பால் இந்த உன்னதங்களை நிகழ்த்த அவர்களால் முடிந்திருக்கிறது.

போர்க் காயத்தினால் தனது வலது கையை இழந்த ஒரு இளம் பிஞ்சு தனது மற்றைய கரத்தால் எழுதிப் பழகித் தொடர்ந்து வந்த ஐந்தரம் தரப் புலமைப்பரிசில் தேர்வின்போது மாவட்ட மட்டத்தில் சிறந்தப் பெறு பேறுகளைப் பெறமுடிந்திருக்கிறது எனில் கற்பித்த ஆசிரியப் பெருந்தகைகளின் அர்ப்பணிப்பு எவ்வளவு உயர்வானதாக இருந்திருக்க வேண்டும்?

இன்றும் யாழ்ப்பாணத்திலிருந்து கூட பல உன்னத ஆசிரியர்கள் போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்குச் சென்று அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதைக் காணக் கூடியதாக உள்ளது.

அத்தகைய ஆசிரியர்களுக்கு இக்கட்டுரை தலை வணங்குகின்ற அதேவேளை மற்றையோரும் அதைப் பின்பற்றி வீழ்ச்சி நிலையில் இருக்கும் எமதினத்தை எழுந்து நிற்கச் செய்ய வேண்டும் என்பதே இக்கட்டுரையின் இலக்கு.

எனினும் இங்கு நடைபெறுவது என்னவென்றால், ஏற்கனவே கடந்த கால அனர்த் தங்களால் பாதிக்கப்பட்ட எமதினத்தின் சகல வாழ்வியல் அம்சங்களையும் விலை பேசிக் காசாக்கும் சண்டித்தனம் கலந்த “திருட்டு மணல்” வியாபாரமாகும். அதுமட்டு மல்லாது இந்த மக்கள் அழிவுகளின் மத்தியிலும் உயிரைக் கொடுத்துப் பேணிவந்த வாழ்வியல் விழுமியங்கள் கூடப் பட்டப் பகலில் அகழ்ந்தெடுக்கப்பட்டு இராட்சத வாகனங்களில் ஏற்றிச் செல்லப் பட்டு கறுப்புச் சந்தையில் விற்கப்படு கின்றன. இன்னும் விட்டால் இதற்கென ஒரு நிதியத்தையும் அமைப்பார்கள் போலுள்ளது.

அண்மைக்காலமாகக் கல்வித்துறையில் நடைபெறும் அசம்பாவிதங்கள் நல்ல அறிகுறியைக் காட்டவில்லை. அரசியல் ஆதாயம், கதிரைக்கானப் பேராசை, வால்பிடி நரித்தனங்கள் என்பன இன்று பேயாட்டம் போடுகின்றன. அரச நியமன ஒழுக்கக் கோவைகளைக் கூடப் புறக்கணித்து கொடுக்கிழுத்துக் கட்டிக் கோதாவில் மோதும் தெருச்சண்டை நடைபெறுகிறது. எமது அதிகாரிகளும் ஆசிரியர்களும் இவற்றைத் தட்டிக் கேட்கவோ தடுத்து நிறுத்தவோ முனையாது ஆளுக்காள் சுற்றி நின்று கைதட்டி விசிலடிக்கின்றனர். இங்கே வீணடிக்கப்படுவது எமதினத்தின் எதிர்காலமே. அதைப் பந்தயப் பொருளாக்கிச் சூதாடுவதை அனுமதிக்க முடியாது.

இவற்றைத் தட்டிக் கேட்கவேண்டிய முதற்றரப்பினர் ஆசிரியர்களும் துறைசார் அதிகாரிகளுமேயாகும்.

- **சரணிகா**

## இன்று ஆசிரியர் தினம்

# எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்

இன்றைய நாள் உலகம் பூராவும் ஆசிரியர் தினமாக கொண்டாடப்படுகிறது. "எழுத்தை அறிவித்தவன் இறைவன் ஆவான்" என்ற மகுட வாக்கியத்திற்கு அமைவாக ஆசான்கள் மதிக்கப்படுகின்றார்கள். உண்மையிலேயே எங்களுக்கு கல்வி என்னும் ஒளியைக் கொடுத்தவர்கள் ஆசிரியர்கள். அவர்கள் தோணியாக இருந்து, தங்களை ஆகுதி ஆக்கி, பல்துறை சார்ந்தவர்களை உருவாக்கிறார்கள். எங்களை பெற்றெடுத்த தாய் தந்தைக்கு அடுத்த படியாக குரு விளங்குகிறார்.

ஆசிரியர்களின் பெருமையை விளக்க உலகத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்வை உங்களுக்கு கூற விரும்புகின்றேன். இந்தியாவின் இரண்டாவது ஜனாதிபதியாக இருந்தவர் டாக்டர். இராதாகிருஸ்ணன் அவர்கள். அவர் ஒருமுறை அமெரிக்கா நாட்டிற்கு விஜயம் செய்திருந்தார் அந்த நேரத்தில் அவரை அமெரிக்காவின் அதிபர் செல்லக் கூடிய ஹெலிகெப்ரரில் அமெரிக்கா முழுவதையும் சுற்றி காட்டினார்கள். அப்பொழுது அங்கு இருந்த உயர் அதிகாரிகள் கேள்வி எழுப்பினார்கள்,

"ஏன் அவரை ஜனாதிபதி செல்லக் கூடிய உலங்கு வானூர்தியில் கொண்டு செல்கின்றீர்கள்? என்று அச்சமயத்தில் அவர்களுக்கு கிடைத்த பதில் அவர் இந்தியாவின் ஜனாதிபதி மட்டும் அல்ல ஒரு ஆசிரியர் என்று டாக்டர்.இராதாகிருஸ்ணன் நினைவாகதான் இந்தியாவில் அவரது பிறந்தநாள் என்று செப்ரெம்பர் 05 இல் அங்கு ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகிறது. நாளை இலங்கையிலும் இன்று பூகோளம் பூராவும் கொண்டாடப்படுகிறது. சிறப்பான சமூகத்தை உருவாக்குவதில் ஆசிரியர்களின் பங்கு முக்கியமானது என்பதை யாரும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது. ஒரு விஞ்ஞானியாகவோ அல்லது ஜனாதிபதியாகவோ யு.டீ.து.அப்துல்கலாம் அவர்கள் இருந்திருந்தால் அவருக்கு உலகம் பூராகவும் இவ்வளவு பெரிய மதிப்பு கிடைத்திருக்காது. தனது பணிகளுக்கு புறம்பாக டாக்டர்.அப்துல்கலாம் அவர்கள் மற்றவர்களை ஊக்குவிக்கும் ஆசானாக(ைளிசையவழைெ வநயஉாநச) இருப்பதால் அவர் இலட்சக்கணக்கான குழந்தைகளின் உள்ளத்தில் இடம் பிடித்து இருக்கின்றார்.

மனிதனை மனிதனாக, உருவாக்கும் சிற்பிகள் என்று ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியைகளைச் சொல்வதுண்டு. மனிதனை முதன்மை படுத்த உரமாக இருப்பவர்கள் ஆசிரியர்கள் என்றால் அது மிகையாகாது.

"எங்கே நடப்படுகிறாயோ அங்கே மலராகு" என்ற பொன்மொழிக்கு எடுத்துக்காட்டாய் இருப்பவர்கள் ஆசிரியர்கள் தான். தன்னிடம் ஒப்படைக்கப்படும் மாணவர்களை வாழ்க்கை என்றால் என்ன? இதில் மாணவ சமூகத்தின் பங்கு எப்படி இருக்க வேண்டும் என்று ஒரு தெளிவை ஆசிரியர்கள் தான் கற்றுக் கொடுக்கின்றனர். குறிக்கோள் இல்லாத வாழ்க்கை முகவரியில்லாத கடிதத்திற்குச் சமம். இது போல் தான் மாணவ சமூகமும் குறிக்கோள், லட்சியம் இல்லாமல் இருந்தால் எதிர்காலம் ஓர் இருண்ட பாதை என்பதை ஆரம்ப காலத்தில் இருந்தே மாணவ மனதில் நன்கு பதிய வைத்து, அதன் மூலம் கிடைக்கும் வெற்றியை பார்க்கும் பொழுது ஆசிரியர்களின் முகத்தில் ஓர் மகிழ்ச்சி தோன்றும். இதனை சொல்வதை விட உணர்வுப் பூர்வமாக உணர முடியும். தன்னிடம் ஒப்படைக்கப்படும் மாணவனை நல்ல மாணவனாக ஆக்குவதோடு, நல்ல மனிதனாக மாற்றும் பொறுப்பும் ஆசிரியர்களுக்கு இருக்கிறது. அதே போல் ஆசிரியர்கள் என்பவர்கள் மாணவ சமூகத்தை உருவாக்குபவர்கள் அல்ல, மாறாக உயிரூட்டுபவர்கள். ஒரு சிறந்த ஆசிரியர்களின் பண்புகள், குணங்களை பார்க்கும் மாணவ, மாணவிகளின் மனதில் அப்படியே பதியும். அதனால் ஆசிரியர்கள் தங்களை மாணவர்களின் காலக் கண்ணாடி என்ற எண்ணத்தில் தான் பணியாற்றி வருகின்றனர்.அப்படி பணியாற்றுவதன் மூலம் கடினமாக உழைத்து வாழ்வில் ஒளிரும் மாணவ சமூகத்திற்கு ஆசிரியர்கள் உரிமையாளர்களாக மாறுகின்றனர்.

. தெளிவான, சிறப்பான மாணவ சமூகத்தை உருவாக்குவதில் ஆசிரியர்களின் பங்கு முதன்மையானது அதிலும் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் உழைப்பினை தான் நாம் அதிகம் பாராட்ட வேண்டும். சிறு குழந்தைகளுக்குச் பாடங்களை அடித்தோ, அல்லது மிரட்டியோ கற்றுக் கொடுக்க முடியாது. அப்படிச் சொல்லிக் கொடுத்தாலும் அவர்களுக்கு ஏறாது. குழந்தைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கும் பொழுது அசிரியர்கள் குழந்தைகளாகவே மாறிவிட வேண்டும். அப்பொழுது தான் அவர்கள் தங்களின் முழுக்கவனத்தையும் ஆசிரியர்கள் மீது விழும். அப்படி குழந்தைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கும் பொழுது அவர்களின் மழலை பேச்சும், மழலைச் சரிப்பையும் காணும் பொழுது புதிய உலகிற்குச் சென்ற ஓர் உன்னத உணர்வு மனதில் ஏற்படும். அதே போல் கிராமத்தில் இருக்கும் பள்ளிகளில் பணியாற்றுவதில் கிடைக்கும் மகிழ்ச்சி சற்று வித்தியாசமானது. அங்கு ஆரம்பப் கல்வி படிக்கும் மாணவன் பின் வாழ்வின் எத்தகைய உயர்ந்த நிலைக்குச் சென்றாலும் அப்பள்ளியையும் ஆசிரியர்களையும் மறப்பது இல்லை. ஆசிரியர் பணியில் சேர்ந்த பொழுது ஆரம்ப கல்வியை மாணவ, மாணவிகள் முடித்துச் செல்லும் பொழுது உண்மையிலேயே பெரிய இழப்பாக இருந்தது. அது தற்பொழுது பழகிவிட்டது. ஒவ்வொருவரும் ஒரு குணம், மாறுபட்ட குணாதிசயங்கள், மாறுபட்ட சிந்தனைகள் என்று ஓர் இனிய கலவைகளை ஒரே இடத்தில் பார்க்க நினைத்தால் பள்ளிகளுக்குச் செல்லலாம்.

பிற பணிகளில் இல்லாதது ஆசிரியர் பணியில் இருக்கிறது. மாதா பிதா குரு தெய்வம் என்று தான் சொல்கிறோம். மாதா பிதா டாக்டர், இன்ஜினியர் என்று நாம் சொல்வது இல்லை. தமிழ்சிறப்பாயிரம் பாடலில் சொன்னது போல் அன்னையும் தந்தையும் ஒரு குழந்தையை உலகிற்கு தருகின்றனர். ஆனால் ஒரு ஆசிரியன் உலகத்தையே குழந்தைகளுக்கு தருகிறான். இந்த உண்மைகள் நிலைத்து நிற்க வேண்டும். ஆசிரியர் சமூகம் மேன்மேலும் வளர வேண்டும் என்று அனைவருமே நினைக்கின்றனர். ஆனால் ஆசிரியர்களிடமும் காலப்போக்கில் பலவித குற்றங்கள் இருக்கத்தான் செய்கிறது. தனியார் பள்ளிகளில் ஆசிரியர்கள் பணியாற்றுவது போன்று ஏழைக் குழந்தைகள் பயிலும் அரசாங்கப்பள்ளிகளில் ஆசிரியர்கள் பணியாற்றுவதில்லை. அதனை விடக் கொடுமை தந்தையாக இருக்க வேண்டிய சில ஆசிரியர்களே மாணவிகளிடம் தவறாக நடந்து பாலியல் குற்றச்சாட்டில் கைது ஆகின்ற கொடுமையும் சமீப காலமாக அதிகரித்துள்ளது. இவை தவிர பிற நாடுகளில் ஆசிரியர்கள் மாணவர்களின் தனிப்பட்ட நலனில் அக்கறை காட்ட மாட்டார்களாம். . தற்பொழுது ஆசிரியர்கள் லேசாக அடித்தாலே அதனை பெரிதாக்கும் நிலையும் இருந்து வருகிறது. மொத்தத்தில் இறந்த பிறகும் மண்ணில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் வரிசையில் ஆசிரியர்களுக்கு முதல் இடம் உண்டு என்பது ஓர் யாதார்த்த உண்மை.

***மாவை ஸ்ரீரஜீவன்***
***ரஜரட்ட பல்கலைக்கழகம்***
***தலைவர் அப்துல் கலாம் கழகம்***

# முசலி பலநோக்கு கூட்டுறவுச்சங்க விவகாரம்

## - அமைச்சர் ரிஷாத்துக்கு மகஜர்

முசலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாக சீர்கேடுகள் குறித்து முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குற்பட்ட சிலாபத்துறை கிராம மக்களும் நலன் விரும்பிகளும் இணைந்து கையொப்பமிட்டு மகஜர் ஒன்றை கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் ரிஷாட் பதியுதீனுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

ஒக்டோபர் முதலாம் திகதியிடப்பட்ட இடம் மகஜரில் குறிப்பிடப் பட்டுள்ளவையாவன...

மேற்படி முசலி பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் நிர்வாக சீர்கேடுகள் குறித்து மன்னார் கூட்டுறவு உதவி ஆணையாளர், முசலி பிரதேசச் செயலாளர் ஆகியோரிடம் பல தடவை பல முறைப்பாடுகள் செய்துள்ளோம். இருந்தும் இதுவரை எவ்வித மாற்றமும் இடம்பெறவில்லை.

இதனால் மீண்டும் மீண்டும் பொதுமக்களாகிய நாங்கள் பாதிக்கப்பட்டு வருவதோடு நியாயம் கேட்கும் பணியாளர்கள் பதவிக் குறைப்பு, எச்சரிக்கை போன்ற தண்டனைக்கும் உள்ளாக்கப்படு கின்றனர்.

இதனால் நாம் பிரதேச செயலாளரை இவ்விடையம் தொடர்பில் சந்தித்தபோது தன்னால் இயன்றவற்றை மேலிடங்கள் எல்லாவற்றிற்கும் தெரிவித்து விட்டதாகவும், இவ்விடையம் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டிய கூட்டுறவு திணைக்கள உதவி ஆணையாளர்,

சங்கத்தலைவரின் கைப்பொம்மையாக செயற்படுவதினால் தன்னால் இதற்கு மேலாக ஒன்றும் செய்ய முடியாது என்று கூறி, தான் அனுப்பிய கடிதங்களையும் எமக்கு காண்பித்தார்.

இது மட்டுமின்றி திணைக்களத்திற் கான அமைச்சின் செயலாளராக தற்போது ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், மாவட்டத்தை நன்கு அறிந்தவர் எனவும் தெரியத்தந்ததால் இறுதி முயற்சியாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரினுடாக தங்களிடம் மன்றாட்டாக பின்வரும் விடையங்களை சமர்ப்பித்து தீர்வை எதிர்பார்த்து நிற்கின்றோம்.

சர்வதிகாரப் போக்குடைய தலைமைத்துவத்தை நீக்கி ஜனநாயக ரீதியான தலைமைத்துவத்தை நியமித்தல், தலைவருக்கும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கும் இடையில் உள்ள ரகசிய தொடர்பு என்ன? பிரதேச செயலாளர் - அரசாங்க அதிபர் ஆகியோரின் கடிதங்களுக்கு நேரடி உத்தியோகஸ்தரான கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் நடவடிக்கை எடுக்க முடியாமைக்கான காரணம் என்ன?

தலைவரினால் தனிநோக்குடன் செய்யப்படும் கொள்வனவு, சொந்த ஊரில் தனியாரிடம் பல லட்சம் ரூபாய் பெறுமதிக்கு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதும், கிளைகளில் விற்க முடியாது தேங்கி கிடக்கும் பொருட்களும், அரசாங்க அதிபரின் முற்பணத்தில் கொள்வனவு செய்யப்பட்ட நெல் எப்படி விற்கப்பட்டது, நெல் விற்ற பணம் எங்கே?

தலைவரின் கையில் நீண்ட நாட்களாக காசோலை இருப்பதற்கான காரணம் என்ன?, குற்றம் நிரூபிக்கப்பட்ட கிளை முகாமையாளர்கள் 2011ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை தண்டிக்கப் படாததற்கான காரணம் என்ன?

நியாயம் கோரும் பணியாளர்கள் தலைவரினாலும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரினாலும் எச்சரிக்கப்படுவது ஏன்?, ஜனநாயக ரீதியான கிளைக்குழுவினை தெரிவு செய்வதற்கு தலைவரும், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரும் கூட்டுச் சேர்ந்து காலம் இழுத்தடிப்பதற்கான காரணம் என்ன? என்றும் கோரியுள்ளனர்.



சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயத்தில் அண்மையில் உலக சிறுவர் தினமும் பசுமை வளர்ப்புத் தினமும் கொண்டாடப்பட்ட போது நடாத்தப்பட்ட மாணவர்களின் கலைநிகழ்வுகளை காணலாம்.
படம்: மருதனார்மடம் நிருபர்.

# நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் விளக்கச் செயலமர்வுகள்

"கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையும் மக்களின் முன்னுரிமைகளும்" எனும் தொனிப்பொருளில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை தொடர்பாக பொதுமக்களுக்கு விளங்கப்படுத்தும் கலந்துரையாடல் நேற்று முன்தினம் புதன்கிழமை மட்டக் களப்பில் கிறீன் காடர்ன் ஹோட்டலில் நடைபெற்றது.

தேசிய சமாதானப் பேரவையும், மக்கள் சமூக சேவை அமைப்பும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்த கலந்துரையாடலில் தேசிய சமாதானப் பேரவையின் பணிப்பாளர் ஜஹான் பெரேரா, மக்கள் சமூக சேவை அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எஸ்.தயாபரன் உட்பட சமூக சேவையாளர்கள், சிவில் சமூக பிரதி நிதிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

## அபிராமி அந்தாதி பாடல்கள்

**எப்போதும் மகிழ்ச்சியாய் இருக்க**

கொள்ளேன் மனத்தில் நின் கோலமல்லா தன்பர் கூட்டந்தன்னை
விள்ளேன் பரசமயம் விரும்பேன் வியன் மூவுலகுக்கு
உள்ளே அனைத்தினுக்கும் புறம்பே உள்ளத்தே விளைந்த
கள்ளே களிக்கும் களியே அளிய என் கண்மணியே!

**நோய்கள் விலக**

மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த
அணியே அணியும் அணிக்கழகே அணுகாதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பதம பாதம் பணிந்தபின்னே!

**நினைத்தகாரியம் நிறைவேற**

பின்னே திரிந்துன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்றுகொண்டேன் முதல் மூவருக்கும்
அன்னே உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே
என்னே இனியுன்னை யான்மறவாமல் நின்று ஏத்துவனே!

## பன்னிரு திருமுறைகள்

சிவனையும் சிவனடியார்களையும் போற்றித் துதிப்பனவாகிய பாடல்கள் தோத்திரங்களாகும். இறைவனின் அருட்செயல்களையும், சிவனடியார் வரலாறுகளையும் கதைவடிவில் எடுத்துக்கூறும் புராணம் முதலான நூல்கள் காப்பியங்களாகும். இவ்வகையில் திருமுறைகள் தோத்திரங்களாகும். இவற்றுள் பன்னிரண்டாம் திருமுறையாகிய பெரிய புராணம் காப்பியமாகவும் விளங்குகிறது.

திருமுறை என்ற தொடரில் 'திரு' என்பது தெய்வத் தன்மையைக் குறிப்பது. 'முறை' என்ற சொல்லுக்கு நூல், ஒழுங்கு, வரிசை, உறவு, முறையீடு போன்ற பல கருத்துக்கள் உண்டு. எனவே திருமுறை என்பது தெய்வத்தன்மை பொருந்திய நூல், உயிர்களைச் செம்மையான ஒழுங்கு முறையில் இறைவனிடம் சேர்ப்பிக்கும் நூல், தொகுத்து வரிசைப்படுத்தப்பட்ட தெய்வீகப் பாடல்களைக் கொண்ட நூல், இறைவனுக்கும் ஆன்மாக்களுக்குமுள்ள உறவை விளக்கும் நூல், மெய்யடியார்கள் உள்ளம் உருகி இறைவனிடம் செய்துகொண்ட முறையீடுகளைக் கொண்ட நூல் என பலவகையிற் பொருள் கொள்ளக் கூடியதாயுள்ளது.

விநாயகப் பெருமானின் திருவருள் துணைகொண்டு சகல சாத்திர ஞானமும், மெய்ஞ்ஞானமும் கைவரப் பெற்றவராக விளங்கியவர் நம்பியாண்டார் நம்பிகள் என்னும் சிவவேதியர். அக்காலத்தில் சோழ நாட்டை ஆண்ட அபயகுலசேகர சோழ மகாராசா என்பவர் தேவாரம், திருவாசகம் முதலிய அருட்பாக்கள் சிலவற்றை சிவனடியார்கள் ஓதக்கேட்டு, அவற்றையெல்லாம் முற்றாகத் தேடித் தொகுத்துச் சைவ மக்கள் பாராயணஞ் செய்வதற்கு தரவேண்டும் என நம்பியாண்டார் நம்பிகளை கேட்டுக்கொண்டார்.

சோழ அரசரும், நம்பியாண்டார் நம்பிகளும் தில்லையை அடைந்து, அங்குள்ள மண்டபத்திலே வைக்கப்பட்டிருந்த திருமுறை ஏடுகளிலே பழுதானவை தவிர்ந்த, ஏனையவற்றை எடுத்தார்கள். நம்பியாண்டார் நம்பிகள் அரசரது வேண்டுகோளுக்கு இணங்க திருஞானசம்பந்தர் அருளிய தேவாரப் பதிகங்களை முதலாம், இரண்டாம், மூன்றாம் திருமுறைகளாகவும், திருநாவுக்கரசர் அருளிய தேவாரப் பதிகங்களை நான்காம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகளாகவும், சுந்தரர் அருளிய தேவாரப் பதிகங்களை ஏழாம் திருமுறையாகவும் வகுத்தார். மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம், திருக்கோவையார் ஆகிய இரண்டையும் எட்டாம் திருமுறையாகவும், திருமாளிகைத் தேவர் முதலாக சேதிராயர் வரையுள்ள ஒன்பது மெய்யடியார்கள் அருளிச் செய்த திருவிசைப்பா, சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டு பாடல்களை ஒன்பதாம் திருமுறையாகவும், திருமூலர் அருளிய திருமந்திரப் பாடல்கள் பத்தாம் திருமுறையாகவும், திருவாலவாயுடையார் திருப்பாசுரம் முதலாக பட்டினத்தடிகள் பாடல்கள் உட்பட நம்பியாண்டார் நம்பிகளால் அருளப்பட்ட விநாயகப் பெருமான், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், திருத்தொண்டத் தொகையிலுள்ள அடியார்கள் என்போரைப் போற்றி செய்த பாடல்களை பதினொராம் திருமுறையாகவும் வகுத்தார்.

சோழ அரசர் திருமுறைப் பாடல்களையெல்லாம் செப்பேடுகளில் எழுதுவித்துப் பாதுகாப்பாக அழியாதிருக்கும்படி செய்தார். சில ஆண்டுகளின் பின்னர் அநபாயச் சோழ அரசரின் வேண்டுகோளின் படி, அவரது முதன் மந்திரியாகிய சேக்கிழார் நாயனார், நடராசப் பெருமானே "உலகெலாம்..." என அடியெடுத்துக் கொடுக்கப் பாடியருளிய திருத்தொண்டர் புராணம் எனப்படும் பெரிய புராணம் சைவப் பேறறிஞர்கள் சபையில் அரசர் முன்பு (தில்லையிலே) அரங்கேற்றப்பட்டது. இதுவே பன்னிரண்டாம் திருமுறை நூலாக அமைந்தது.

*(நன்றி: இந்து மக்களுக்கு ஒரு கையேடு)*

## சமய தீபம்

## சிந்தனை விருந்து

**ஆன்மீக பலத்தை விருத்தி செய்வோம்**

நீண்டகால மனித வரலாற்றிலே, எத்தனையோ நெருக்கடிகள், நெருக்குதைகள், இடையூறுகள், வேதனைகள், நோய்கள், இயற்கை அனர்த்தங்கள், வறுமை, பகைமைகள் போன்றவைகள் மனித இனத்தைத் தாக்கி வந்துள்ளன. விஞ்ஞான வளர்ச்சியோ, மருத்துவ வசதிகளோ இல்லாத அல்லது குறைவாக இருந்த அக்கால கட்டங்களில், எவ்வாறு மனித இனம் அத்தகைய அவலங்களிலிருந்து அழிந்து போகாமல் காப்பாற்றப்பட்டது? எதனால் காப்பாற்றப்பட்டது?

இவ்வினாக்களுக்கு விடை-காண நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். பண்டு தொட்டு மக்கள் உறுதியுடன் கொண்டிருந்த இறை நம்பிக்கை, தெய்வ பக்தி, அனுட்டித்து வந்த விரதங்கள், வழிபாடுகள், பின்பற்றி வந்த சைவ சமய ஆசாரங்கள், அவற்றினால் அம்மக்கள் பெற்றுக்கொண்ட ஆன்மீக பலம், ஆன்மீக ஆரோக்கியம், தூய உள்ளம், உள்ளத்து உறுதி என்பனவே மக்களை அவர்கள் எதிர்நோக்கிய ஆபத்துக்களிலிருந்து காலம் காலமாகக் காப்பாற்றி வருகின்றன.

தெய்வ நம்பிக்கையைக் கைவிட்டு, சமய நெறிகள், சமய ஆசாரங்கள் என்பவற்றைப் புறக்கணித்து, விரதங்கள் அநுட்டிப்பதைப் பரிகசித்து, எல்லாம் மனிதனால் முடியும் என்று அகந்தை கொண்டு, மனிதர்களிலும் விஞ்ஞானத்திலும் மாத்திரம் நம்பிக்கை கொள்ளத் தொடங்கிய காலத்திலிருந்துதான் மனிதர்களை, இன்னல்களும் துயரங்களும், தொல்லைகளும் துன்பங்களும் துரத்தித் துரத்தித் தாக்கிக் கொண்டிருக்கின்றன. அமைதியும் சாந்தியும் ஒறுப்பான பண்டங்களாகிவிட்டன. எனவே மனிதர்கள் துன்பங்களிலிருந்து மீட்சி பெற, வாழ்வில் சாந்தியும் நிம்மதியும் பெற, இறை நம்பிக்கை, தெய்வ பக்தி, சமயாசாரம், விரதம் அநுட்டித்தல் என்பவற்றை மேற்கொண்டு ஆன்மீக பலத்தை விருத்தி செய்வதுதான் ஒரே வழி என்பதை உணர்ந்து கொள்வோம்.

*(சைவ நற்சிந்தனைக் களஞ்சியம்)*

## இவ்வார சமய நிகழ்வுகள்

**இந்துக்களுக்குரிய விசேட தினங்கள்**

05.10.2012 வெள்ளி: திருநாளைப் போவார் நாயனார் குருபூசை
06.10.2012 சனி: புரட்டாதி சனி (மூன்றாவது)/ கபில சஷ்டி விரதம்
08.10.2012 திங்கள்: மத்தியாஷ்டமி
11.10.2012 வியாழன்: ஏகாதசி விரதம்

### கிறிஸ்தவ நற்சிந்தனை

- முறை கேடாய் நடக்கும் செல்வரை விட, மாசற்றவராய் இருக்கும் ஏழை மேல்
- எண்ணங்களை மனிதர் எண்ணலாம். ஆனால் எதற்கும் முடிவு கூறுபவர் ஆண்டவர்
- மதிகேடர் காதில் விழும்படி எதையும் பேசாதே. உன் அறிவுரைகளை அவர் மதிக்க மாட்டார்.

*(புனித விவிலியத்தின் நீதிமொழிகள் நூலிலிருந்து)*
*தொகுப்பு: ரிஷானி அலோசியஸ்*

### இஸ்லாமிய நற்சிந்தனை

- எவர்கள் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நோவினை செய் கிறார்களோ, அவர்களை நிச்சயமாக இம்மையிலும் மறுமையிலும் அல்லாஹ் சபிக்கிறான். இன்னும் அவர்களுக்கு இழிவு தரும் வேதனையை தயார்செய்து வைத்திருக்கிறான். **(அல்குர்ஆன்)**
- சமூகத்தவர்கள் தங்கள் இறைவனின் கட்டளைக்கும், அவனுடைய தூதர்களுக்கும் எத்தனையோ மாறு செய்தனர். ஆதலால் அவர்களை நாம் வெகு கடுமையாகவே விசாரணை செய்து அவர்களுக்கு மிகக் கடுமையான வேதனையும் செய்தோம். ஆகவே அவர்களின் தீய செயலுக்குரிய பலனை அனுபவித்தனர். அவர்களின் தீய செயலுக்கான முடிவு இம்மையிலும் நஷ்டமானதாகவே ஆயிற்று **(அல்குர்ஆன்)**

## வெள்ளிக்கிழமை விரத மகிமை

நாம் வாழுகின்ற இக்கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக விளங்குபவன் முருகன். முருகப் பெருமானின் அருளைப் பெறுவதற்கு வெள்ளிக்கிழமை விரதம், கார்த்திகை விரதம், சஷ்டி விரதம் ஆகியவற்றை அனுஷ்டிக்க வேண்டும் என்று பெரியோர் கூறியுள்ளனர்.

முன்னொரு காலத்தில் பகீரதன் என்னும் அரசன் பாரத நாட்டை ஆண்டு வந்தான். கோரன் என்னும் அசுரன் பகீரதனுடன் போர் தொடுத்து வென்றான். அதனால் பகீரதன் தன் நாடு நகரங்களை இழந்து, தன் மனைவி மக்களுடன் காட்டில் வாழும்படி நேர்ந்தது. அஞ்ஞான்று தன் குலகுருவின் கட்டளைப்படி பகீரதன் வெள்ளிக்கிழமை விரதம் மேற்கொண்டு தன் பகைவனாகிய கோரனை வென்றான், நாடு நகரங்களை மீளவும் பெற்றான். வெள்ளிக்கிழமை விரதம் அத்துணை மகத்துவம் வாய்ந்தது. இதனைப் பின்வரும் பாடல் அறிவிக்கிறது.

***'பார்க்கவன் என்னும் ஆசான் பகீரதன் உரைத்தல் கேளா***
***வேற்கரன் மகிழும் ஆற்றால் வெள்ளிநாள் விரதம் தன்னை***
***நோற்குதி மூன்றியாண்டு நுங்களுக் கல்லல் செய்த***
***மூர்க்கனும் முடிவன் நீயே முழுதுலகு ஆள்வை என்றான்'***

வெள்ளிக்கிழமை முருகனுக்குரிய நாள். வெள்ளிக்கிழமை தோறும் கந்தக் கடவுளை மனம், மொழி, மெய்யினால் பூசித்து, விரதம் இருந்தால் நற்பலன்கள் கிட்டும் என்பதை பிரம்ம ரிஷியாகிய வசிட்டர், முசுகுந்தன் என்னும் அரசனுக்கு எடுத்துக் கூறியமை பற்றிப் புராணம் கூறுகின்றது. ஒரு பாடலைப் பார்ப்போம்.

***'எள்ளரும் சிறப்பின் மிக்க எழுவகை வாரம் தன்னுள்***
***வெள்ளிநாள் விரதம் தானே விண்ணவர் உலகம் காத்த***
***வள்ளல்தன் விரதம் ஆகும் மற்றது புரிந்த மேலோர்***
***உள்ள மேல் நினைந்த எல்லாம் ஒல்லையில் முடியும் அன்றே'***

விண்ணவர்களாகிய தேவர்களைக் காத்தவன் முருகன். அதனால் தேவசேனாதிபதி என்று அவனுக்குப் பெயர் உண்டு. அந்த வள்ளலுக்குரிய விரதம் வெள்ளிக்கிழமை விரதம் என்றும், அதனை நோற்பவர் மேலோர் என்றும், மேல்நிலையை அடைவர் என்றும் கூறப்பட்டுள்ளது. விரதம் அனுட்டிக்க அனுட்டிக்க நாம் தூயவர் ஆகின்றோம், திண்ணியர் ஆகின்றோம். தூயவராகவும் திண்ணியராகவும் வந்து விட்டால், நினைத்தவற்றை முடித்துக் கொள்ளலாம்.

வெள்ளிக்கிழமை விரதத்தை எம்முறையில் மேற்கொள்ள வேண்டும் என்பதைப் பின்வரும் பாடல் உணர்த்துகின்றது.

'.......... ***வெள்ளி முற்றும் உணவினைத் துறந்து முன்பின் சென்றிடும் இரண்டு நாளும் திவாவினில் அடிசில் மாந்தி இன்துயில் அதனை நீத்து ......'*** என்று பாடல் செல்கிறது.

முதல்நாள் வியாழக்கிழமையன்று பகல் மட்டும் ஒருதரம் உணவை உண்டு, வெள்ளிக்கிழமை முழுநாளும் உணவு உண்ணாது உப வாசம் இருந்து, சனிக்கிழமை பாரணம் செய்தல் வேண்டும். சனிக்கி ழமையன்றும் ஒரு முறைதான் உணவு உட்கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு விரதம் மேற்கொள்ளுதலே உத்தமம். உணவிலும் காரம், புளி என்பதை தவிர்த்துக் கொள்வர். வெள்ளிக்கிழமையில் ஒரு நேர உணவை உண்டு விரதம் அனுடடிப்பவர்களும் உளர்.

*குமாரசாமி சோமசுந்தரம்.*
*(சைவ நற்சிந்தனைக் களஞ்சியம்)*

## நல்வாக்கு

செல்வம் படைத்தவன், செல்வம் இல்லாதவன் மேல் செலுத்தும் ஆதிக்கத்தைத் தவிர்க்க வேண்டும். அறிவுடையவன், அறிவு குறைந்தவன் மேல் செலுத்தும் ஆதிக்கத்தை விட வேண்டும்.

முப்பத்து மூன்று கோடிப் புராண தெய்வங்களிடத்தும் மேலும் அவ்வப்போது நம்மிடையே அந்நிய நாட்டவர் புகுத்தியிருக்கும் இதர தெய்வங்களிடத்தும் நம்பிக்கை இருந்தாலும் கூட ஒருவனிடத்தில் தன்னம்பிக்கை இல்லாவிட்டால் அவனுக்குக் கதி மோட்சமில்லை.

பாவம் என்ற ஒன்று உண்டென்றால் அது நான் பலவீனமானவன், மற்றவர்கள் பலவீனமானவர்கள் என்று சொல்வது ஒன்றுதான்.

சுதந்திரமானவனாக இரு. எவரிடமிருந்தும் எதையும் எதிர்பார்க்காதே. உனது கடந்த கால வாழ்க்கையை நீ பின்னோக்கித் திரும்பிப் பார்ப்பாயானால், நீ வீணாக எப்போதும் மற்றவர்களிடமிருந்து பெற முயற்சி செய்ததையும் அப்படி எதுவும் வராமற் போனதையும்தான் காண்பாய். வந்த உதவிகள் எல்லாம் உனக்குள் இருந்தவையாகத்தான் இருக்கும்.

நம்பிக்கை! நம்பிக்கை! நம்மிடத்தில் நம்பிக்கை! கடவுளிடத்தில் நம்பிக்கை! இதுவே மகிமை பெறுவதன் ரகசியமாகும்.

நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய்.

*- சுவாமி விவேகானந்தர்*

இதெல்லாம் முன்னேற்பாட்டின்படி செய்துகொண்ட நடவடிக்கை என்பதை உங்களுக்குப் படிக்கத் தெரிந்தால் நீங்களே ஜோன்ஸின் கையெழுத்திலும் ஸ்நோபாலின் கையெழுத்திலும் உள்ள கடிதங்களைப் படித்து அறிந்து கொள்ளலாம். சரியான சமயத்தில் மிருகங்களுக்குப் போக்குக் காட்டி ஏமாற்றிவிடுவது என்பது ஸ்நோபாலின் திட்டம். வீட்டையும் பண்ணையையும் மனிதர்கள் கைப்பற்றிவிடுவார்கள் என்று செய்த யுக்தி அது. அநேகமாக ஸ்நோபாலின் யுக்தி பலித்தே விட்டது என்றுதான் சொல்ல வேண்டும், இல்லையா? அன்று நம்மைக் காப்பாற்றியவர் யார், தெரியுமா?

சொல்லுகிறேன் கேளுங்கள் தோழர்களே! நமது வீரத் தலைவர், தோழர் நெப்போலியன் செய்த தீரச் செயல்களால் நாம் அன்று தப்பினோம். உங்களுக்கு ஞாபகமில்லையா? ஜோன்ஸும் அவன் ஆட்களும் முற்றத்துக்குள் வந்தபோது, எப்படி ஸ்நோபாலும் மற்ற மிருகங்களும் பயந்து பின்வாங்கின என்று உங்களுக்கு





ஞாபகமில்லையா? அப்படிப் பின்வாங்கக் காரணமாக இருந்தது ஸ்நோபால்தான்.

அந்தச் சமயத்திலே, பீதியின் உச்சியை எட்டியிருக்கும் சமயத்திலே, எல்லா மிருகங்களும் திரும்பி ஓடித் தப்பிக்க எண்ணும் சமயத்திலே, எல்லாம் போய் விட்டது என்று எண்ணுகிற சமயத்திலே, தோழர் நெப்போலியன் குதித்துப் பாய்ந்து, "மனித குலம் நசியட்டும்" என்று கர்ஜித்தது. பாய்ந்து ஓடி ஜோன்ஸின் ஆடுசதையைப் பற்றிக் கடித்தது. இதெல்லாம் நிச்சயமாக உங்களுக் கெல்லாம் ஞாபகம் இருக்க வேண்டுமே, தோழர்களே!? என்றது ஸ்க்வீலர், சுறுசுறுப்பாக அங்கு மிங்கும் குதித்துக்கொண்டே.

இப்படி விறுவிறுப்பான வார்த்தைகளால் அந்த யுத்த களத்தை ஸ்க்வீலர் வர்ணிக்கும்போது, மற்ற விலங்குகளுக்கும் இதில் ஏதோ நடந்தது என்கிற ஞாபகம் வரத்தான் செய்தது. எது எப்படியாயானாலும், ஸ்நோபால் திரும்பி, புறமுதுகிட்டு ஓடியது என்றும், மற்ற மிருகங்கள் அதைப் பின்பற்றின என்றும் ஞாபகம் வரத்தான் வந்தது. இருந்தும் பாக்ஸருக்குத் திருப்தியோ, அமைதியோ பிறக்கவில்லை. கடைசியில் அது சொல்லிற்று, "ஸ்நோபால் முதலிலேயே துரோகியாக இருந்ததாகத் தோன்றவில்லை, பின்னர் செய்தது வேறு காரியம். ஆனால் மாட்டுக் கொட்டில் யுத்தத்தில் அது நம்முடன், நம்மில் ஒன்றாகத்தான் இருந்தது. நல்ல தோழனாகத்தான் இருந்தது."


ஸ்க்வீலர் நிமிர்ந்து சொல்லியது, நமது தலைவர் தோழர் நெப்போலியன் அழுத்தமாகச் சொல்லுவது இதுதான், சந்தேகத்திற்கிடமின்றி நெப்போலியன் சொல்லிவிட்டது. புரட்சி என்பது பற்றிய சிந்தனை ஏற்படுவதற்கு முந்திய நாட்களிலிருந்தே ஸ்நோபால் துரோகியாகத்தான் இருந்து வந்திருக்கிறது.

**(திங்கள்)**




# சிறுவர் அமுதம்

## மயிலின் குறைபாடு



பிரம்மாவிடம் போய் ஒருநாள் மயில் தனக்கு நல்ல குரல் கொடுக்காததைப் பற்றி குறை கூறியது தன் குரலைக் கேட்டு எல்லோரும் சிரிக்கிறார்கள் என்றது. ஓர் அற்பப் பறவையான குயிலுக்கு யாரும் பரவசமடையக் கூடிய குரலைக் கொடுத்திருக்கிறீர்களே என்று கேட்டது.

பிரம்மாவுக்கு உண்மையிலேயே கோபம் வந்தது. அதைப் பார்த்து பின்வருமாறு சொன்னார்:

"ஓ பொறாமை பிடித்த பறவையே, நீ குறைபட்டுக் கொள்வதற்கு இடமே கிடையாது. வானவில்லின் வர்ணங்களெல்லாம் உன் கழுத்தில் ஜொலிக்கின்றன. உன் தோகையை விரித்தாலோ முத்துக்களைப் பரப்பியதைப் போல இருக்கிறது. வேறு எதற்கும் இவ்வளவு அழகு கிடையாது.

மேலும் எல்லா சிறந்த குணங்களையும் ஒரு ஜீவராசியிடம் ஒருங்கே காண முடியாது. பருந்துக்கு வேகத்தைக் கொடுத்திருக்கிறேன். கழுகுக்குப் பலத்தையும், கிளிக்குப் பேச்சையும், ஆந்தைக்கு அறிவையும், குயிலுக்குக் குரலையும் கொடுத்திருக்கிறேன். உனக்கோ உருவம், அழகு, இரண்டும் இருக்கின்றன. எனவே, குறைபடுவதை விடு. இல்லாவிடில் உள்ளதையும் பறித்து விடுவேன்." என்றார் பிரம்மா.

## உழைப்பாளி தேனீ



தேனீக்களில் மிக முக்கியமானவை உழைப்பாளி தேனீக்கள். இவை என்னவெல்லாம் செய்கின்றன..? அவற்றில் சிலவற்றை இங்கே தருகிறோம். தன்னிடம் மட்டுமே சுரக்கும் மெழுகுப் பொருளால் தேன்கூட்டை ஆயிரக்கணக்கான அறுகோண அறைகள் கொண்டதாய் கட்டுகின்றன.

தேன்கூட்டின் வெப்பம் குறைகிறது எனில், கூட்டுக்கு மேலே ஒன்று கூடி அடுக்கடுக்காய் மொய்த்து அமர்ந்து கூட்டின் வெப்பத்தை தன் உடல் வெப்பம் மூலம் அதிகரிக்கின்றன. வெப்பம் கூடுமாயின், கூட்டை விட்டு சற்று காற்றோட்டமாய் விலகிக்கொள்கின்றன. இன்னும் கூடினால், விநாடிக்கு சுமார் 230 முறை தன் சிறகை அடித்து விசிறி விடுவதன் மூலம் வெப்பத்தை கட்டுப்படுத்துகின்றன. பாலைவன பிரதேசங்களில் அனல்காற்று வீசும் வேளையில், எங்காவது நீர் கிடைத்தால் அதை உறிஞ்சிக் கொண்டு வந்து தேனடையில் தெளித்து பின்னர் விசிறுகிறது. அப்போது தேன்கூட்டில் உள்ள நீரளவு ஆவியாக, சாத்தியமாகிறது..!

முட்டையிலிருந்து வெளிவரும் புழுக்களுக்கு உணவளிக்கின்றன. கூட்டுப்புழு காலத்தில் அறுகோண அறையை உணவுகள் நிரப்பி சீலிட்டு அவற்றை பராமரிக்கின்றன. இப்படி, முட்டையிட்டதிலிருந்து 21 நாட்கள் கழித்து தேனீயாகக் கூட்டை உடைத்து வெளியேறியதும் மீண்டும் அவற்றுக்கு தேவையான உணவை அளிக்கின்றன.

## விடுகதைகள்




1. காலையிலும் மாலையிலும் நெட்டை மதியம் குட்டை நான் யார்?

2. ராஜா, ராணி உண்டு நாடு அல்ல. இலைகள் பல உண்டு, தாவரம் இல்லை! அது என்ன?

3. கடலில் கலக்காத நீர், யாரும் குடிக்காத நீர் - அது என்ன?

4. அடிமேல் அடி வாங்கி அனை வரையும் சொக்க வைப்பான் - அவன் யார்?

5. ஓர் அரண்மனையில் முப்பத்திரெண்டு காவலர்கள் - அது என்ன?

விடைகள்
1. நிழல் 2. சீட்டு
3. கண்ணீர் 4. மேளம்
5. பல்

## ஒரு திகில்



"சார் இந்த அட்ரஸ் எங்க இருக்குன்னு சொல்றீங்களா?"

"இப்படி ஒரு இடமே இப்போ இல்லையே சார்? இந்த இடத்துல இப்போ பிளாட் கட்டிட்டாங்க. உங்களுக்கு தெரியாதா? "

"தெரியாது சார், கொஞ்ச வருசம் வெளியூர்ல இருந்தேன். இங்க இருந்த புளியமரத்தைக்கூட வெட்டிட்டாங்களா சார்?"

"அட என்ன சார் நீங்க? இங்க இருந்த புளிய மரம் வேப்ப மரம், பக்கத்துல இருந்த சுடுகாடு எல்லாத்தையும் எடுத்துமாத்திட்டுதான் இப்போ இவ்வளவு பெரிய குடியிருப்பு வந்துருக்கு..."

மனுசங்க மட்டும்தான் இந்த உலகத்துல வாழ முடியுமா? என்று புலம்பிக்கொண்டே வேறு புளியமரம் தேடி பயணித்துக்கொண்டிருந்தான்.

**சுடோக்கு எண் 66 விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 2 | 1 | 8 | 3 | 7 | 5 | 9 | 4 |
| 9 | 4 | 5 | 2 | 6 | 1 | 7 | 3 | 8 |
| 7 | 3 | 8 | 5 | 4 | 9 | 6 | 1 | 2 |
| 3 | 5 | 4 | 7 | 9 | 2 | 1 | 8 | 6 |
| 1 | 7 | 2 | 6 | 5 | 8 | 9 | 4 | 3 |
| 8 | 6 | 9 | 3 | 1 | 4 | 2 | 7 | 5 |
| 5 | 9 | 3 | 4 | 7 | 6 | 8 | 2 | 1 |
| 4 | 8 | 7 | 1 | 2 | 5 | 3 | 6 | 9 |
| 2 | 1 | 6 | 9 | 8 | 3 | 4 | 5 | 7 |

**சுடோக்கு எண் 67**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | 2 | | | | 3 | | |
| | | | 2 | 9 | | | | 5 |
| 6 | 7 | | | | | | | |
| | | 8 | 1 | | | | | 4 |
| 9 | | | 6 | | 2 | | | 8 |
| 2 | | | | | 3 | 6 | | |
| | | | | | | | 7 | 6 |
| 8 | | | | 3 | 7 | | | |
| | | 4 | | | | 9 | 2 | |

# இலங்கை விவகாரத்தில் என்னைப்போல் வேறெவரும் செயற்பட முடியாது – கருணாநிதி!

சென்னையில், "டெசோ" உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம், கருணாநிதி தலைமையில் நேற்று நடந்தது. கூட்ட முடிவில், கருணாநிதி அளித்த பேட்டி:

"தமிழர்களைக் கொன்று குவித்த, இலங்கை அதிபர் ராஜபக்ஷேவை பிரதமர் வரவேற்று, விருந்து அளித்துள்ளார். ஒரு நாட்டின் அதிபர் என்ற முறையில், மரபுப்படி வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், இலங்கையிலிருந்து, இந்திய அமைதிப் படை நாடு திரும்பிய போது, அதை வரவேற்க வேண்டும் என, முதல்வராக இருந்த என்னை, கவர்னர் கேட்டுக் கொண்டார். ஆனால், "தமிழர்களைக் கொன்று குவித்த அமைதிப் படையை வரவேற்க முடியாது" எனக் கூறிவிட்டேன். இது போல, எல்லாரிடமும் எதிர்பார்க்க முடியாது. இலங்கையில் நடக்கும் தமிழர்கள் மறுவாழ்வுப் பணிகள் திருப்தி அளிப்பதாக இல்லை. போர் முடிந்தும், எதிர்பார்த்த அமைதி ஏற்படவில்லை. முள்வேலி முகாம் கொடுமைகள் நின்றபாடில்லை. முள்வேலிக்கு வெளியேயும் கொடுமைகள் தொடர்கின்றன.

தமிழர்களை நிம்மதியாக வாழவிடுவர் என்ற நம்பிக்கை இல்லை. இந்தத் தகவல்களை யெல்லாம் தொகுத்து, டெசோ மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானங்களையும் இணைத்து, ஐ.நா., சபையிலும், ஐ.நா., சபையின் மனித உரிமை ஆணையத்திடமும், ஸ்டாலின், டி.ஆர்.பாலு ஆகியோர் நேரில் கொடுக்க உள்ளனர்.

ஐ.நா. சபைக்கு, தி.மு.க., பிரதிநிதிகள் செல்வதற்கான, அரசியல் ரீதியான அனுமதியை, மத்திய அரசு அளித்துவிட்டது. எந்த தேதியில், ஐ.நா.சபை பொதுசெயலரைச் சந்திப்பது என்பதற்கு, ஐ.நா. சபையின் அனுமதியை எதிர்பார்த்துள்ளோம்.

டெசோ கூட்டத்தில், தமிழர்கள் பாதுகாப்பு, வாழ்வுரிமை குறித்து, ஐ.நா., தீர்மானத்தை மத்திய அரசு முன்மொழிவதன் மூலம், இலங்கைத் தமிழர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும்.

இதற்கான முயற்சிகளை மத்திய அரசு எடுக்க வேண்டும். அ.தி. மு.க., அரசைக் கண்டித்து, தி.மு.க., அறிவித்துள்ள மனிதச் சங்கிலி போராட்டத்துக்கு, பொலிஸ் அனுமதியைக் கேட்டுளளோம் அனுமதி தருவர் என, நம்புகிறோம். இவ்வாறு, கருணாநிதி கூறினார்.

# 2013ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் சிரேஷ்ட அமைச்சர்களின் அலுவலகங்களுக்கு 40 கோடி

எதிர்வரும் 9ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள 2013ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் பிரகாரம் சிரேஷ்ட அமைச்சர்களின் செயலகங்களுக்காக சுமார் 40 கோடி ரூபா (ரூ.39,54,25,000) நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதில் 34,44,25,000 ரூபா மீண்டுவரும் செலவீனம் அல்லது அமையச் செலவாகவும் 5,10,00,000 ரூபா மூலதனச் செலவாகவும் ஒதுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இலங்கையின் அமைச்சரவையில் பத்து சிரேஷ்ட அமைச்சர்களும் அவர்களுக்கான செயலகங்களும் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஒஸ்லோவில் நான்காவது நாளாகவும் தொடரும் உண்ணாவிரத போராட்டம்

நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இலங்கையர்களால் ஆரம்பிக்கப்பட்ட சாகும் வரையிலான உண்ணாவிரத போராட்டம் நான்காவது தினமாக நேற்றும் தொடர்ந்தது. ஒஸ்லோவில் அமைந்துள்ள டொம் என்றழைக்கப்படுகின்ற மிகப் பழமைவாய்ந்த கிறிஸ்தவ தேவாலயத்தில் உண்ணாவிரதம் இருந்துவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரு தாய்மாரே நோர்வேயிலுள்ள இலங்கைத் தூதுவர் சுனில் ராஜபக்ஷ நேரில் சென்று பார்வையிட்டதுடன் விபரங்களை அறிந்ததாகவும் இது தொடர்பில் சாதகமான பதிலைத் பெற்றுத் தருவதாக உறுதியளித்துள்ளார்.

நோர்வே அரசாங்கத்தின் கீழ் இயங்கி வருகின்ற சிறுவர் காப்பகத்தினால் தமது குழந்தைகள் பலவந்தமாக எடுத்துச் செல்லப்பட்டதைக் கண்டித்தும் தமது பிள்ளைகளைத் தம்மிடத்தில் திருப்பித் தருமாறு வலியுறுத்தியும் இந்த உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெற்று வருகிறது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆனந்தராசா - ரஜித்தா தம்பதிகளின் நான்கு பிள்ளைகளும், ஜோ எரிக் ஜோசப் - டிலாந்தினி தம்பதியினரின் மூன்று பிள்ளைகளும் மற்றும் செல்லத்துரை - சித்திராதேவி தம்பதியினரின் மூன்று பிள்ளைகளும் இவ்வாறு சிறுவர் காப்பகத்தினால் எடுத்துச் செல்லப் பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே தமது பிள்ளைகளை மீடடுக் கொள்வதற்கு ரஜித்தா ஆனந்தராசா மற்றும் டிலாந்தினி எரிக் ஜோசப் ஆகிய இரண்டு தாய்மாரும் டொம் தேவாலயத்தில் சாகும்வரையிலான உண்ணாவிரத போராட்டத்தில் குதித்துள்ளனர்.

# அமைச்சர் மேர்வினின் மகன் கல்விக்காக அமெரிக்கா செல்லவில்லை

இராணுவ மேஜர் ஒருவரைத் தாக்கினார் என்று குற்றம்சாட்டப்பட்ட மாலக சில்வா தான் கல்வி கற்பதற்காக அமெரிக்கா செல்லவில்லை என்றும், ஓர் சுற்றுலா விஜயமாகவே அங்கு செல்லவுள்ளதாகவும் நேற்று முன்தினம் நீதிமன்றில் தெரிவித்தார்.

சர்ச்சைக்குரிய அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகனே மாலக சில்வா என்பது குறிப்பிடத்தக்கது. கல்வியைத் தொடர்வதற்காகவே அமெரிக்கா செல்லவுள்ளதாக முன்னர் மாலக சில்வா நீதிமன்றில் தெரிவித்திருந்தார்.

கொழும்பு கோட்டை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் மாலக சில்வா சார்பில் ஆஜரான சட்டத்தரணி மேற்கண்ட தகவல்களை தெரிவித்தார்.

முன்னர் தனது கட்சிக்காரர் கல்வி நடவடிக்கைகளுக்காகவே அமெரிக்கா செல் கிறார் என்று தான் கூறியது தவறு என்றும், அவர் சுற்றுலாப் பயணமாகவே செல்கிறார் என்றும் சட்டத்தரணி கூறினார்.

தனது கட்சிக்காரர் ஒக்டோபர் 10ஆம் திகதி முதல் நவம்பர் 20ஆம் திகதி வரை நாட்டைவிட்டு வெளியே செல்ல அனுமதி வழங்குமாறும் சட்டத்தரணி நீதிமன்றிடம் கோரிக்கை விடுத்தார்.

## போதனாசிரியர்களின் போராட்டத்துக்கு உபவேந்தர்கள் ஆதரவு

பல்கலைக்கழக போதனா சிரியர்கள் சங்கம் நடத்திவரும் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

வர்த்தக முகாமைத்துவ தேசிய நிலையக் கேட்போர் கூடத்தில் பல்கலைக்கழகப் போதனாசிரிய சங்கத் தலைவரும் அங்கத்தவர்களும், முன்னாள் உப வேந்தர்களுடன் கலந்துரையாடல் கூட்டம் ஒன்றினை நடத்தியுள்ளனர்.

அப் போதே தனது போராட்டத்துக்கு ஆதரவு தருவதாக முன்னாள் உப வேந்தர்கள் தமக்கு உறுதியளித்தனர் என்று பல்கலைக்கழக போதனாசிரியர் சங்கத் தலைவர் கலாநிதி நிர்மல் ரஞ்சித் தேவசிறி குறிப்பிட்டார்.

## சென்னை விமானநிலையத்தில் ரூபா 13 லட்சம் தங்க பிஸ்கட் பறிமுதல்

சிங்கப்பூரில் இருந்து இலங்கை விமான நிலையத்தின் ஊடாக கடத்தி வந்த ரூ.13 லட்சம் மதிப்பிலான தங்க பிஸ்கட்களை சென்னை விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

இது தொடர்பாக சைதாப்பேட்டை வாலிபர் கைது செய்யப்பட்டார். சென்னை சைதாப்பேட்டையை சேர்ந்தவர் தஸ்தகீர் (26). சுற்றுலா பயணியாக, சிங்கப்பூருக்கு சென்றுவிட்டு கொழும்பு வழியாக நேற்று அதிகாலை 1.30 மணிக்கு ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானத்தில் சென்னை வந்தார்.

# நல்லிணக்கத்துக்கான குரல் பிரிட்டனிலிருந்து இலங்கைக்கு

இலங்கையில் நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்காக புலம்பெயர் வாழ் இலங்கையர்கள் ஆறு பேர் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். பிரிட்டனில் பல்வேறு இடங்களில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் இனங்களைச் சேர்ந்த ஆறு இளைஞர்களே நாட்டுக்கு வருகைதந்துள்ளனர்.

இவர்கள், "இலங்கை ஐக்கியப்படுகிறது" என்ற இந்த அமைப்பினர் யாழ்ப்பாணத்தில் நடத்திய வருடாந்த மாநாட்டில் பங்குபற்றினர்.

இந்த ஆறு இளைஞர்களில் நால்வர் பிரிட்டனிலுள்ள 'நல்லிணக்கத்திற்கான குரல்' எனும் அமைப்பை சேர்ந்தவர்களாவர். இந்த விஜயத்திற்கான சகல ஏற்பாடுகளையும் 'இன்ர நஷனல் அலேட்' என்ற அமைப்புச் செய்திருந்தது. கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகலாயம் தேவையான உதவிகளை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# இரண்டு மொழிகளிலும் தேர்ச்சிப் பெற்றவர்கள் கிடைக்கவில்லை

## -அமைச்சின் செயலாளர் மல்காந்தி

தேசிய மொழிகளை அமுல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு மொழிபெயர்ப்பாளர்களை நியமிக்கும் திட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இந்நிலையில், மொழி அத்தியட் சகர்களை சேர்த்துக்கொள்வதற்கான தேர்வுகள் நடைபெற்றபோதிலும் அதற்குத் தகுதியானவர்களை சேர்த்துக்கொள்ள முடியாதுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறைந்தபட்சம் இரண்டு மொழிகளிலாவது தேர்ச்சிப் பெற்ற ஒருவரையேனும் தெரிவுசெய்ய முடியாமற்போயுள்ளதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சின் செயலாளர் மல்காந்தி விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார். ஏற்கனவே மொழிபெயர்ப்பு பணிகளில் ஈடுபட்டுள்ள அரசாங்க உத்தியோகத்தர்கள் இந்த தேர்விற்காக அழைக்கப்பட்டிருந்தனர்.

மொழி அத்தியட்சகர்கள் அரச மொழிகள் திணைக்களத்திற்கு சேர்த்துக்கொள்ளும்போது தற்போது அரச சேவையில் அவர்கள் வகிக்கின்ற பதவியை உயர்த்தி சேர்த்துக்கொள்ளப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். மொழி பெயர்ப்பாளர்களின் கடமைகளை மேற்பார்வை செய்து உறுதிப்படுத்த வேண்டியது மொழி அத்தியட்சகர்களின் பொறுப்பாகும் எனவும் அவர் குறிப்பிடுகிறார்.

# யாழ் மத்திய கல்லூரியில் இன்று ஆசிரிய தின விழா

யாழ். மத்திய கல்லூரியின் ஆசிரியர் தின விழா இன்று ஐந்தாம் திகதி காலை 8.30 மணிக்கு பாடசாலையின் திறந்தவெளி அரங்கில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ் கல்விப் பிராந்திய அதிகாரி திரு.ரி.எஸ்.சண்முககுமார் வருகை தருகிறார். ஆரம்ப நிகழ்வாக பாடசாலை மாணவர்களால் ஆசிரியர்கள் அழைத்துவரப்பட்டு தொடர்ந்து பாடசாலை கீதம் மற்றும் மறைந்த ஆசிரியர் ஜெகதீஸ்வரன் அவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்துதல் ஆகியவை இடம்பெறும். அதன் பின்னால் வருகை உரை, ஆசி உரை, அதிபர் உரை, ஆசிரியர்கள் கௌரவிப்பு என்பன இடம்பெற்று பிரதம விருந்தினர் உரையைத் தொடர்ந்து நன்றியுரையுடன் இந்நிகழ்வு நிறைவுபெறவுள்ளது.

# பாம்பு பெண்ணின அடிப்படை உரிமை மீறல் மனு அடுத்த வருடம் விசாரணைக்கு

கொள்ளுப்பிட்டியிலுள்ள ஆடம்பர ஹோட்டலொன்றில் பாம்பொன்றுடன் அறையில் தங்கியிருந்த இளம்பெண் தன்னைப் பொலிஸார் கைது செய்ததை ஆட்சேபித்துத் தாக்கல் செய்த அடிப்படை மனித உரிமை மீறல் மனு அடுத்த வருடம் மார்ச் மாதம் 28ஆம் திகதி விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட உள்ளது.

தான் பொலிஸாரால் கைது செய்யப் பட்டமையையும், தன்னிடமிருந்த பாம்பு பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டமையும் தமது அடிப்படை உரிமையை மீறும் செயலெனக் குற்றம்சாட்டி இந்தப் பெண் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றினைத் தாக்கல் செய்துள்ளார்.

இதனை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிமன்றம் அடுத்த வருடத்துக்கு வழக்கை ஒத்திவைத்தது.

# மேற்கிந்திய கிரிக்கெட் வீரர்களைத் தேடி வந்த 3 பிரிட்டிஷ் பெண்கள் கைது

மேற்கிந்திய கிரிக்கெட் அணி கொழும்பில் தங்கியிருந்த சினமன் கிராண்ட் ஹோட்டலின் ஏழாவது மாடிக்கு நேற்று முன்தினம் காலை சென்ற மூன்று பிரிட்டிஷ் பெண்கள் கைது செய்யப்பட்டனர்.

அமைச்சரவைப் பாதுகாப்பு பிரிவு உத்தியோகஸ்தர்கள் இவர்களை கைது செய்துள்ளனர். இவர்கள் கொள்ளுப்பிட்டிப் பொலிஸாரிடம் மேலதிக விசாரணைக்காக கையளிக்கப்பட்டனர். இந்தப் பெண்கள் மூவரும் மேற்கிந்திய தீவுகள் அணி வீரர்களின் தோழிகள் ஆவார்.

# ஒரே மேடையில் தோன்றிய பராக் ஒபாமா – மிட்ரோம்னி



அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் பராக் ஒபாமாவும், மிட் ரோம்னியும் ஒரே மேடையில் பிரசாரம் செய்தனர்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் அடுத்த மாதம் 6ஆம் திகதி நடைபெறுகிறது.

இதில் ஜனநாயக கட்சி சார்பில் ஜனாதிபதி பராக் ஒபாமாவும், குடியரசு கட்சி சார்பில் மிட் ரோம்னியும் போட்டியிடுகின்றனர்.

இருவரும் பல்வேறு மாகாணங்களில் பிரசாரம் செய்து வருகின்றனர். ஜனாதிபதி ஒபாமாவுக்கே வெற்றி வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக கருத்து கணிப்புகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் நேற்று டென்வர் நகரில் இருவரும் ஒரே மேடையில் தோன்றி பிரசாரம் செய்தனர்.

இருவரும் பொருளாதாரம் மற்றும் உள்நாட்டு கொள்கைகள் குறித்து தங்களது நிலையை ஆராய்ந்தனர்.

ஜனாதிபதி வேட்பாளர்கள் ஒரே மேடையில் தோன்றி விவாதிப்பது கடந்த 1960ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

# உலக பார்வை

## பெண்களை அடக்கி ஆளும் மத பொலிசாரின் அதிகாரங்கள் குறைப்பு

சவுதி அரேபியாவில் மத பொலிசார் அத்து மீறி நடப்பதால் அவர்களது அதிகாரம் குறைக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சவுதி அரேபியாவில் இஸ்லாமிய நடைமுறைகள் கடுமையாக பின்பற்றப்படுகின்றன.

பெண்கள் பர்தா அணிந்து தான் வெளியே வரவேண்டும், கார் ஓட்டக்கூடாது, ஆண் துணையில்லாமல் இளம் பெண்கள் கடைக்கு செல்லக்கூடாது என்பது போன்ற சட்டத்திட்டங்கள் அமுலில் உள்ளன.

இந்த நடைமுறைகளை கண்காணிப்பதற்கு பொலிஸ் துறையில் தனி பிரிவு செயல்படுகிறது. வணிக வளாகங்கள் போன்ற இடங்களில் பணியில் ஈடுபடும் இந்த பொலிசார் தனியாக வரும் பெண்களை கடைக்குள் அனுமதிப்பதில்லை.

சமீபத்தில் ஒரு பெண் நகத்தில் சாயம் பூசி இருந்ததற்காக வணிக வளாகத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். இது தொடர்பாக அவர் பொலிஸ்காரருடன் நடத்திய வாக்குவாதத்தை மொபைல் போனில் பதிவு செய்து இணையத்தளத்தில் வெளியிட்டார்.

இந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியதுடன், அடக்குமுறைக்கு சவுதி பெண்கள் ஆளாவதாக வரும் தொடர் புகார் காரணமாக மத பொலிசாரின் அதிகாரங்களை குறைக்க அந்நாட்டு அரசு திட்டமிட்டுள்ளது.

# சிரியாவின் பிரச்சினைக்கு போர் நிரந்தர தீர்வை தராது: ஈரான்

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் அசாத்திற்கு எதிரான போராட்டம் மிக தீவிரமடைந்து வருகிறது.

போராட்டக்காரர்களை ஒடுக்க இராணுவம் கடும் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர். இதில் அப்பாவி பொதுமக்கள் பலியாகின்றனர்.

இப் போராட்டம் குறித்து ஈரான் ஜனாதிபதி முகமது அகமது நிஜாத் கூறுகையில், சிரியாவில் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு போர் நிரந்தரத் தீர்வை ஏற்படுத்தாது.

பிரச்சினையை முற்றிலுமாக தீர்க்க அந்நாட்டில் தேர்தல் நடத்துவது தான் சிறந்தது என்று தெரிவித்துள்ளார்.



ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் நடைபெற்ற கூட்டுக்குழு கூட்டத்தில் கலந்துகொண்டு திரும்பிவந்த ஹெய்ட்டி அதிபர் மிசெல் மார்டெல்லிக்கு, தலைநகர் போர்ட் ஆப் பிரின்சில் உற்சாக வரவேற்பு அளித்த ஆதரவாளர்கள்.

# ஒபாமாவின் ஆட்சியில் நடுத்தர மக்கள் புதையுண்டு போனார்கள்

## துணை ஜனாதிபதி கடும் தாக்கு



அமெரிக்காவில் ஜனாதிபதி தேர்தல் வருகிற நவம்பர் மாதம் 6ஆம் திகதி நடைபெறுகிறது.

இத்தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி பராக் ஒபாமாவும், மிட் ரோமினியும் போட்டியிடுகின்றனர். இருவரும் தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தேர்தல் பிரசாரத்தின் போது அமெரிக்க துணை ஜனாதிபதி ஜோ பிடென் கூறுகையில், ஒபாமாவின் தவறான பொருளாதார கொள்கையால் அமெரிக்காவில் வசிக்கும் நடுத்தர மக்கள் புதையுண்டு போனார்கள்.

ஒபாமாவின் வலுவிழந்த அரசாங்கத்தினால் பொருளாதாரத்தில் தேக்க நிலை ஏற்பட்டுள்ளது.

நடுத்தர மக்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் நாட்டில் இளைஞர்களுக்கு வேலையில்லா திண்டாட்டமும் அதிகரித்து உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

# 38முறை கத்திக்குத்துக்குள்ளான நபர் உயிர் பிழைத்த அதிசயம்



இங்கிலாந்தில் 38 கத்திக்குத்து வாங்கியும் நபர் ஒருவர் உயிர் பிழைத்துள்ள சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இங்கிலாந்தில் எக்ஸிடர் நகரில் வசிப்பவர் டேனி ரோஸ் (வயது 44). இவர் கடந்தாண்டு ஆகஸ்ட் மாதம் ஒரு நாள், வீட்டில் தொலைக்காட்சி பார்த்து கொண்டிருந்தார்.

அப்போது பக்கத்து வீட்டில் வசிக்கும் டேவிட் ஜான்சன் என்பவர் இவரது வீட்டுக்கு வந்தார்.


வீட்டுக்குள் நுழைந்த ஜான்சன் தனது பெல்டால், ரோஸின் கழுத்தை இறுக்கினார். பின்னர் அவரை கத்தியால் சரமாரியாக குத்தினார்.

மொத்தம் 38 கத்திக்குத்து விழுந்தது. உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்ட ரோசுக்கு 70 தையல் போடப்பட்டது.

விசாரணையில், தனது வீட்டில் திருடியது ரோஸ் என்று நினைத்து கோபத்தில் அவ்வாறு நடந்து கொண்டதாக ஜான்சன் தெரிவித்தார்.

உயிர் பிழைத்த ரோஸ் கூறுகையில், பெல்டால் கழுத்தை நெறித்த உடனேயே நான் மயங்கி விட்டேன். பொலிஸ் எடுத்த புகைப் படங்களை பார்த்தால் நான் பிழைத்ததை என்னாலேயே நம்ப முடியவில்லை. நான் குண்டாக இருந்ததால் தான் பிழைக்க முடிந்தது. ஒல்லியாக இருந்திருந்தால் இறந்திருப்பேன் என்று தெரிவித்துள்ளார்.

# சர்வதேச விண்வெளி நிலையத்தை வேறு பாதைக்கு நகர்த்த முடிவு



சர்வதேச விண்வெளி நிலையத்தை வேறு பாதைக்கு நகர்த்த ரஷ்ய விஞ்ஞானிகள் முடிவு செய்துள்ளனர்.

விண்வெளியில் சுற்றிக் கொண்டிருக்கும் தேவையற்ற பொருட்கள் மோதி, சர்வதேச விண்வெளி நிலையம் சேதமடையாமல் தடுப்பதற்காகவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ரஷ்ய விண்வெளி திட்ட கட்டுப்பாட்டு மையம் செய்தி தொடர்பாளர் நெத்யேஸ்டா ஜவ்யலோவா கூறுகையில், சர்வதேச விண்வெளி நிலையத்தை சிறிய உந்து ரொக்கெட்டுகளை கொண்டு நகர்த்த திட்டமிட்டுள்ளோம். மாஸ்கோ நேரப்படி இன்று காலை 7.22 மணிக்கு இந்த பணி மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளார்.

விண்வெளியில் பூமி சுற்றுப் பாதையில் 10 சென்ரி மீற்றருக்கும் அதிகமான தடிமன் கொண்ட 21 ஆயிரம் தேவையற்ற பொருட்கள் சுற்றி வருகின்றன.

இவை விண்வெளி ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக உள்ளன என்று நாசா தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# துருக்கி- சிரியா இடையே போர் மூளும் வாய்ப்பு

சிரியாவில் அந்நாட்டு ஜனாதிபதி அசாத்திற்கு எதிராக கடந்த ஒன்றரை வருடங்களாக எதிர்ப்பு போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

சிரிய கிளர்ச்சிப்படைகளுக்கும் அந்நாட்டு இராணுவத்திற்கு இடையே தினசரி பயங்கர மோதல்கள் நடக்கின்றன.

இந்த மோதல்களின் போது பக்கத்து நாடான துருக்கியும் பாதிக்கப்படுகிறது. இந்த நிலையில் நேற்று சிரிய படைகள் வீசிய குண்டு ஒன்று எல்லையை தாண்டி துருக்கியின் எல்லை நகரமான ஆககேலேயில் விழுந்ததில் 7 பேர் கொல்லப்பட்டனர். இதனால் ஆத்திரமடைந்த துருக்கி, சிரியா மீது நேற்று இரவிலிருந்து பீரங்கி தாக்குதல் நடத்தி வருகிறது.

# மிகப் பிரமாண்டமான முறையில் கட்டப்பட்டு வருகிறது டைட்டானிக் 2

மிக பிரமாண்டமான முறையில் கட்டப்பட்ட டைட்டானிக் கப்பல் தன்னுடைய முதல் பயணத்திலேயே பனிப்பாறையின் மீது மோதி விபத்துக்குள்ளானது.

கடந்த 1912ஆம் ஆண்டு ஏப்ரல் 12ஆம் திகதி ஏற்பட்ட இந்த விபத்தில், கப்பலில் பயணம் செய்தவர்களில் 1500 பேர் வரை கடலில் மூழ்கி இறந்தனர்.

இந்த கதையை கொண்டு இயக்குனர் ஜேம்ஸ் கேமரூன் தயாரித்த திரைப்படம், உலகம் முழுவதும் மாபெரும் வெற்றி பெற்றது.

இந்நிலையில் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த கோடீஸ்வரர் கிளைவ் பால்மர் டைட்டானிக் கப்பலை போன்றே பிரம்மாண்டமான 2ஆவது கப்பலை கட்டி வருகிறார்.

சீனாவில் கட்டப்பட்டு வரும் இந்த கப்பலின் நீளம் 270 மீற்றராகும். 40,000 தொன் எடையை கொண்டது. மேலும் இதில் 840 அறைகளும், 9 தளங்களும் முதல் 2ஆவது மற்றும் 3ஆவது வகுப்புகளையும் கொண்டிருக்கும்.

இதுகுறித்து பால்மர் கூறுகையில், டைட்டானிக்2 கப்பல் சீனாவில் கட்டப்பட்டு வருகிறது.

இக்கப்பல் 2016ஆம் ஆண்டில் இங்கிலாந்தின் சவுத்தாம்டன் நகரை வந்தடையும்.

# தமிழக அமைச்சரவை 8வது முறையாக மாற்றம்: சி.வி. சண்முகம் நீக்கம்

தமிழக அமைச்சரவையில் வணிகவரித்துறை, சட்டம், நீதித் துறை பொறுப்புகளை வகித்து வந்த அமைச்சர் சி.வி. சண்முகம் நீக்கப்பட்டுள்ளார்.

அதிமுக 2011-ல் ஆட்சிப் பொறுப் பேற்றதில் இருந்து இதுவரை 12 அமைச்சர்கள் நீக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் சி.வி.சண்முகம் வகித்து வந்த வந்த வணிகவரித் துறை, பதிவுத்துறை ஆகியவை அமைச்சர் பி.வி. ரமணா வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சமூக நலத்துறை அமைச்சராகப் பதவி வகிக்கும் பா.வளர்மதிக்கு சத்துணவுத் திட்டத்துறை கூடுதலக ஒதுக்கப்பட்டுள்ளது.

இதுவரை, ஊரகத் தொழில் துறை அமைச்சராகப் பதவி வகித்த எம்.சி.சம்பத்திற்கு சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை ஒதுக்கப்பட்டுள்ளது.



பள்ளிக் கல்வித்துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சராகப் பதவி வகித்து வரும் என்.ஆர்.சிவபதிக்கு கூடுதலாக சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், பணியாளர் நலன் மற்றும் நிர்வாகச் சீர்திருத் தத்துறை, லஞ்ச ஒழிப்பு ஆகிய துறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஊரக தொழில்துறை புதிய அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள பி.மோகன் எதிர்வரும் ஒக்ரோபர் 6ம் திகதி ஆளுநர் மாளிகையில் நடைபெறும் நிகழ்ச்சியில் பதவி யேற்றுக் கொள்கிறார். அதிமுக ஆட்சிக்கு வந்த பின் நடக்கும் எட்டாவது அமைச்சரவை மாற்றம் இதுவாகும்.

சமீபத்தில் தமிழக சட்டப் பேரவை சபாநாயகராக இருந்த டி.ஜெயகுமார் கடந்த வாரம் ராஜினாமா செய்தார் என்பதும் அவருக்குப் பதிலாக தற்போதைய துணை சபாநாயகர் தனபால் அப் பொறுப்புக்கு வரவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# இந்திய செய்திகள்

## அசாமில் 300 குடிசைகள் எரிந்து நாசமாகியது: 2 குழந்தைகள் பலி

அசாம் மாநிலம் கவுகாத்தியில் இரயில் தண்டவாளம் அருகில் ஏராளமான குடிசைகள் உள்ளன.

300 குடிசைகள் கொண்ட இப் பகுதியில் நேற்று இரவு ஒரு குடிசையில் திடீரென தீப்பிடித்தது.

பின்னர் தீ மளமளவென பரவி சிறிது நேரத்தில் அனைத்து குடிசைகளுக்கும் பரவியது.

இது பற்றி தகவல் அறிந்த தீயணைப்பு படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து 2 மணி நேரம் கடுமையாக போராடி தீயை அணைத்தனர்.

இவ்விபத்தில் 2 குழந்தைகள் தீயில் கருகி இறந்தது அம்மாநி-லத் தில் சோகத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்த வருடத்தில் அதிகமான சோகங்களை சந்தித்து வரும் மாநிலமாக அசாம் கருதப்படுகிறது.

ஏற்கனவே மழை, வெள்ளம், கலவரத்தால் பாதிக்கப்பட்ட அசாமில் இந்த தீ விபத்து அம்மாநில மக்கள் மனதில் நீங்காத துயரமாக அமைந்துள்ளது.

# சோனியாவின் மருத்துவ செலவுக்கு அரசு பணம் கொடுக்கவில்லை

காங்கிரஸ் தலைவர் சோனியாவின் மருத்துவச் செலவுகளுக்காக, அரசு தரப்பிலிருந்து பணம் கொடுக்கப்படவில்லை என, மத்திய தகவல் ஆணையம் தெரிவித்துள்ளது. குஜராத் முதல்வரும், பா.ஜ., மூத்த தலைவருமான, நரேந்திர மோடி, சமீபத்தில் நடந்த பிரசார கூட்டத்தில் பேசுகையில், காங்., தலைவர் சோனியா, மருத்துவ சிகிச்சைக்காக கடந் தாண்டு அமெரிக்கா சென்றார். அவரின் சிகிச்சைக்காகவும், பயணச் செலவுக்காகவும், மத்திய அரசு சார்பில், 1,880 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது என்றார். நரேந்திர மோடியின் இந்தப் பேச்சுக்கு, காங்கிரஸ் தலைவர்கள் தரப்பில், கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில், சோனியாவின் மருத்துவ சிகிச்சைக்கான செலவு விவரங்களை வெளியிடக் கோரி, மொராதாபாத்தை சேர்ந்த நவீன் குமார் என்பவர், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், மனு தாக்கல் செய்துஇருந்தார்.

இந்த மனுவை விசாரித்த, தலைமை தகவல் ஆணையர் சத்யனந்தா மிஸ்ரா, கடந்த, மே மாதம் 3ல், இது தொடர்பான தகவல்களை வெளியிட்டிருந்தார். அந்த விவரங்கள், தற்போது மீடியாக்களுக்கு வெளியிடப்பட்டுள்ளன் அதில், சத்யனந்தா மிஸ்ரா கூறியுள்ளதாவது: சோனியாவின் மருத்துவ சிகிச்சைக்கான செலவு குறித்த விவரங்களை அறிவதற்காக, பிரதமர் அலுவலகம், தேசிய ஆலோசனை கவுன்சில், லோக் சபா செயலர் ஆகியோரிடமும், வெளியுறவு, பார்லிமென்ட் விவகாரம் மற்றும் புள்ளியியல் உள்ளிட்ட அமைச்சகங்களிடம், தகவல் கேட்கப்பட்டது. இதன்படி, சோனியாவின் மருத்துவ சிகிச்சைக்காக செலவிடப்பட்ட தொகை, எந்த ஒரு அரசு அமைப்பிலிருந்தும், அலுவலகத்திலிருந்தும் கொடுக்கப்படவில்லை என்பது தெரியவந்துள்ளது. தன்னுடைய மருத்துவச் செலவுக்காக, அரசாங்கத்திடம் சோனியா, பணம் கேட்கவில்லை என்பதும், தெரியவந்துள்ளது.



அதேநேரத்தில், ஒருவரின் மருத்துவச் செலவுக் கான தொகையை, தனிப்பட்ட ஒரு நபர் கொடுத்திருந் தால், அது, தனிப்பட்ட ஒருவரைச் சார்ந்த விஷயமாகவே கருதப்படும். இதுபற்றிய தகவல்களை, தக வல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், கோர முடியாது. இவ்வாறு தலைமை தகவல் ஆணையர் தெரிவித்துள்ளார்.

## செல்போன், ஜீன்ஸ் வாங்க பெற்ற குழந்தையை விற்பனை செய்த தாய்

செல்போன், ஜீன்ஸ் பேண்ட் வாங்குவதற்காக 'ரூ.5000 க்கு தன் ஒன்றரை வயது மகனை தாய் ஒருவர் விற்பனை செய்துள்ளார்.

ஒடிசா மாநிலத்தில் ஜாஜ்பூர் மாவட்டம் முந்த மாலா கிராமத்தை சேர்ந்த ராக்கி பத்ரா என்ற பெண் இந்த செயலை செய்துள்ளார்.

'ரூ.5000 'ரூபாய்க்கு தனது ஒன்றரை வயது மகனை விற்ற பின்னர், அந்த பணத்தை வைத்து ஒரு செல்போன், ஜீன்ஸ் பேண்ட், மெமரி கார்டு வாங்கியுள்ளார். இந்த தகவல் பொலிஸாருக்கு தெரிய வர, குழந்தையை மீட்டதுடன் தாயை கைது செய்தனர்.

நீதிமன்ற விசாரணையின் போது ராக்கி பத்ரா, சிறையில் உள்ள தன் கணவரின் சட்ட செலவினங்களுக்காக குழந்தையை விற்றதாக தெரிவித்தார். ஆனால் நீதிபதி ஏற்க மறுத்ததுடன் குழந்தை தாயுடன் இணைந்திருக்க வேண்டுமென உத்தரவிட்டார்.

ஆனால் குழந்தையை ராக்கி ஏற்க மறுக்கவே குழந்தை காப்பகத்தில் ஒப்படைக்கப்பட்டது.

ஏற்கனவே பீகாரில் வறுமையின் காரணமாக 'ரூ.66 க்கு விற்கப்பட்ட குழந்தையை பொலிஸார் மீட்ட சம்பவம் குறிப்பிடத்தக்கது.



தமது முன்னோர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக, பீகார் மாநிலம் ஃபால்கு ஆற்றின் கரையில், தர்ப்பணம் செய்யும் நிகழ்ச்சியில் ஈடுபட்ட மக்கள்.

# மகாத்மா காந்தி சிலைக்கு காலி போத்தல்களால் மாலை அணிவித்து அவமதிப்பு

தேச தந்தை மகாத்மா காந்தியின் உருவச்சிலைக்கு காலி போத் தல்களை மாலையாக அணி வித்த சம்பவம் சிம்லாவில் நடந் துள்ளது.

மகாத்மா காந்தியின் பிறந்த தினம் நேற்று உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டது.

இந்திய மாநிலங்களில் உள்ள அவரது உருவச்சிலைக்கும், உருவப் படத்திற்கும் தலைவர்கள் மரியாதை செலுத்தினர்.

இந்நிலையில் இமாச்சல பிரதேசம் சிம்லாவில் மகாத்மா காந்தி சிலைக்கு மர்மநபர்கள் சிலர் காலி போத்தல்களை மாலையாக அணிவித்து காந்தியை அவமதித்துள்ளனர்.

இது குறித்து துணை கொமிஷனர் அருண் குமார் கூறுகையில், சிலையை அவமதித்த கயவர்களை தேடி வருகிறோம். காந்தி சிலையை அவமதித் தாக 295 ஏ- பிரிவின் வின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றார்.

## முதலாவது அணுஉலையில் எரிபொருள் நிரப்பும் பணி நிறைவு

கூடங்குளம் அணுமின் நிலையத்தின் முதலாவது அணு உலையில் எரிபொருள் நிரப்பும் பணி நிறைவு பெற்றுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளன.

கூடங்குளம் அணுஉலைகளில் எரிபொருள் நிரப்புவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி மக்கள் போராட்டம் நடத்தி வந்தனர்.

இது தொடர்பாக மத்திய, மாநில அரசுகள் உச்ச நீதிமன்றத்தை அணுகியபோது எரிபொருள் நிரப்புவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

இந்நிலையில் முதலாவது அணுஉலையில் செறிவூட்டப்பட்ட யுரேனியம் நிரப்பும் பணி கடந்த மாதம் 19ம் திகதி தொடங்கியது.

இந்தப் பணி கடந்த1ம் திகதி நிறைவடைந்தாக கூறப்படுகிறது. அதனைத் தொடர்ந்து கிரிட்டிகாலிட்டி எனப்படும் மின்உற்பத்திக்கு முந்தைய பணி தொடர்பான ஆய்வில் இந்திய அணுசக்தி ஒழுங்கு முறை ஆணைய விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

இதுதொடர்பான பணிகள் ஒரு மாத காலத்திற்கு மேல் நீடிக்கும் எனத் தெரிகிறது. இதனிடையே கூடங்குளம் அணுமின் நிலைய பாதுகாப்பு தொடர்பாக, பூவுலகின் நண்பர் குழு தாக்கல் செய்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் இன்று மீண்டும் விசாரணைக்கு வருகிறது

மேலும் அணுமின் நிலையத்தின் பாதுகாப்பு குறித்து மத்திய அரசின் சார்பில் இன்று மனு தாக்கல் செய்யப்படுகிறது.

# குஜராத் வளர்ச்சியில் காங்கிரஸின் பங்கை மோடி மறைக்கிறார்: சோனியா குற்றச்சாட்டு

குஜராத் மாநிலத்தின் வளர்ச்சியில் காங்கிரஸிற்கு பெரும் பங்கு உள்ளது என்று அன்னை சோனியா காந்தி குறிப்பிட்டுள்ளார்.

குஜராத்தில் சட்ட மன்ற தேர்தல் நெருங்கி வரும் நிலையில் தேர்தல் பிரசாரத்தை தொடங்கி வைப்பதற்காக காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி இன்று அம் மாநிலத்திற்கு வந்துள்ளார்.

அங்கு காங்கிரஸார் ஏற்பாடு செய்திருந்த பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு சோனியா பேசியதாவது, குஜராத் மாநிலத்தில் விவசாயிகளின் நலனுக்காக மத்திய அரசு தேவையான உதவி-களை செய்து வருகிறது.

இம்மாநிலத்திற்கு மத்திய அரசு 50 சதவீத நிதியினை வழங்கி வருவதை முதல்வர் மோடி மறைக்கிறார்.

இங்கு மத்திய அரசு கொண்டு வந்துள்ள அன்னிய நேரடி முதலீட்டினை அனுமதித்தால் விவசாயிகள் பலன் அடைவர் என்றும் குஜராத் வளர்ச்சியின் மீது காங்கிரஸிற்கு எப்போதும் அக்கறை உள்ளது எனவும் தெரிவித்தார்.

கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு, சோனியாவின் வெளிநாட்டு செலவு பற்றி மோடி விமர்சித்து இருந்தமை குறிப்பிடத்தக் கது.

பொதுசன நூலகம்
ஆவணத்துறைப் பகுப்பு
மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# நன்னியன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணம் நவஜீவன், பன்னாலை கணேசன் சம்பியன்

தெல்லிப்பழை

நன்னியன் ஞாபகார்த்தமாக புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் நடாத்திய மாவட்ட மட்டத்திலான கரப்பந்தாட்டப்போட்டி மின்னொளியில் புதன்கிழமை நடைபெற்றது.

கழகத்தலைவர் தலைமையில் நடைபெற்ற இவ்விறுதிப்போட்டிக்கும் பரிசளிப்பு விழாவிற்கும் பிரதமவிருந்தினராக கோப்பாய் பிரதேசசெயலர் பிரதீபன் அவர்களும் சிறப்புவிருந்தினராக அச்சுவேலி இலங்கைவங்கி முகாமையாளர் புவனேந்திரன் அவர்களும் கௌரவவிருந்தினராக யாழ். மாவட்டகரப்பந்தாட்ட சம்மேளனத் தலைவர் மனோகரன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.





முதலில் நடைபெற்ற B பிரிவிற்கான இறுதிப்போட்டியில் பன்னாலை கணேசன் அணியும் புத்தூர் வளர்மதி அணியும் பலப்பரீட்சை நடாத்தின.

முதலாவது சுற்றில் பன்னாலை கணேசன் 25 - 20 என்ற கணக்கில் கைப்பற்றியது, இரண்டாவது சுற்றை புத்தூர் வளர்மதி 25 - 18 என்ற கணக்கில் கைப்பற்றியது, மூன்றாவது சுற்றை பன்னாலை கணேசன் 28 - 26 என்ற கணக்கில் கைப்பற்றியது, நான்காம் சுற்றை பன்னாலை கணேசன் 25- 22 என்ற கணக்கில் வெற்றிபெற்று B பிரிவில் பன்னாலை கணேசன் அணி சம்பியனானது.

தொடர்ந்து நடைபெற்ற A பிரிவிற்கான போட்டியில் அச்சுவேலி விக்கினேஸ்வரா அணியும் உடுப்பிட்டி நவஜீவன் அணியும் மோதின.

உடுப்பிட்டி நவஜீவன் அணி முதலாவது சுற்ற 25 -17 என்ற ரீதியிலும் இரண்டாவது சுற்றை 28 - 26 என்ற ரீதியிலும் மூன்றாவது சுற்றை 25- 22 என்ற கணக் கில் வெற்றிபெற்று A பிரிவில் சம்பியன் பட்டத்தை உடுப்பிட்டி நவஜீவன் அணி கைப்பற்றியது.

B பிரிவின் சிறந்த விளையாட்டு வீரனாக பன்னாலை கணேசன் அணியின் பிறெக்ஸனும் A பிரிவில் சிறந்த விளை யாட்டுவீரனாக உடுப்பிட்டி நவஜீவன் அணியி[illegible] நிருசாந்த் தெரிவானார்கள்.

## சென்லூட்ஸை வீழ்த்தி பாரதி சம்பியன்



தெல்லிப்பழை


தேசிய அணிக்கு வீரர்களை தெரிவுசெய்வதற்கு முதற்கட்டமாக பிரதேசசெயலக பிரிவுகளுக்கு இடையே உதைபந்தாட்டப்போட்டிகள் நடைபெற்றுவருகின்றது. அந்த வகையில் கடந்த வாரம் நடைபெற்ற தெல்லிப்பழைப்பிரதேச செயலகத்தில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான 21 வயதுப்பிரிவிற்குட்பட்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் காலை 8.30 மணிக்கு மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடை- பெற்றது. இப்போட்டிகளின் இறுதிப் போட்டியில் அளவெட்டிபாரதி அணியும் இளவாலை சென்லூட்ஸ் அணியும் மோதின. இப்போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி அள வெட்டி பாரதி அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது.

## நியூசிலாந்துக்குள் நுழைய டைசனுக்கு தடை

முன்னாள் ஹெவி வெயிட் சம்பியனும், அமெரிக்காவின் பிரபல குத்துச்சண்டை வீரருமான மைக் டைசன் நியூசிலாந்துக்குள் நுழைய தடைவிதிக்கப்பட்டுள்ளது. பாலியல் புகாரில் அவர் 6 ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்றவர் என்பதால் இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்தில் உள்ள லைப் எஜுகேசன் அறக்கட்டளை சார்பில் வரும் நவம்பரில் நடைபெறவிருந்த நிகழ்ச்சியில் அவர் பங்கேற்பதாக இருந்தது. இதற்காக பிரதமர் ஜான் கீயின் எதிர்ப்பையும் மீறி அவருக்கு விசா வழங்கப்பட்டது. இந்நிலையில் அந்த விசாவும் இப்போது ரத்து செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அந்நாட்டு குடியேற்றத் துறை இணையமைச்சர் காடே வில்கின்சன் கூறுகையில், டைசனின் ஆதரவு தங்களுக்கு தேவையில்லை என்று அறக்கட்டளையே கூறிவிட்டதால் விசா ரத்து செய்யப்பட்டு விட்டது.



அவருக்கு எந்த அடிப்படையில் விசா வழங்கினார்கள் என்று தெரியவில்லை.

பெண்களுக்கு எதிரான குற்றத்தில் ஈடுபட்டவர்களுக்கு விசா வழங்க ஒருபோதும் நான் அனுமதியளிக்கவில்லை என்றார். கடந்த 1992 ஆம் ஆண்டு 18 வயது பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்ததாக மைக்டைசனுக்கு 6 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக கது.

5 ஆண்டுகளுக்கு மேல் சிறைத் தண்டனை பெற்ற ஒருவருக்கு விசா வழங்குவதை நியூசிலாந்து சட்டம் அனுமதிக்காது.

## கிண்ணம் வெல்ல ஆசை-மலிங்க



சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலகத் தொடரொன்றின் கிண்ணத்தை வெற்றிகொள்ள ஆவலாக உள்ளதாக இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க தெரிவித்துள்ளார். இம்முறை இடம்பெற்றுவரும் உலகக்கிண்ண ருவெண்ரி-20 தொடரின் அரையிறுதிக்கு இலங்கை அணி தகுதிபெற்றுள்ளதை அடுத்தே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உலகில் காணப்படும் மிகச் சிறந்த மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களுக்கான பந்துவீச்சாளர்களில் ஒருவராகக் கருதப்படும் லசித் மலிங்க, ஏராளமான சாதனைகளை தன்னகத்தே கொண்டு காணப்படுகிறார். எனினும் அவர் இதுவரை உலகத் தொடரொன்றில் சம்பியனான இலங்கை அணியில் இடம் பெற்றிருக்கவில்லை.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள லசித் மலிங்க, இத் தொடர் ஆரம்பிக்க முன்னரே மிகச் சிறப்பான கிரிக்கெட் ஆற்றலை வெளிப்படுத்த எதிர்பார்த்திருந்ததாகவும், இலங்கை அணியின் ரசிகர்கள் இலங்கையின் வெற்றிக்காகக் காத்திருப்பதாகவும், அவர்களுக்காக வெற்றிபெற வேண்டிய தேவையுள்ளதாகவும் தெரிவித்தார்.

தனது கிரிக்கெட் பருவகாலத்தில் தான் இதுவரை சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலகத் தொடர்களின் 3 இறுதிப் போட்டிகளில் பங்குபற்றியுள்ளதாகத் தெரிவித்த லசித் மலிங்க, ஆனால் எவற்றிலும் வெற்றிகிடைத்திருக்கவில்லை எனத் தெரிவித்தார்.

அனைவரும் இலங்கை அணியின் வெற்றிக்காகக் காத்திருப்பதாகத் தெரிவித்த லசித் மலிங்க, இம்முறை அந்த வெற்றியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

## ஜாலிக்காக ஊக்கமருந்து பாவனை அப்துர் ரெஹ்மானுக்கு 3 மாத தடை

ஊக்கமருந்தை பயன்படுத்திய குற்றத்திற்காக பாகிஸ்தான் சுழற பந்து வீச்சாளர் அப்துர் ரெஹ்மானுக்கு 3 மாதங்கள் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளது. 32 வயதாகும் அப்துர் ரெஹ்மான் இங்கிலாந்தின் கவுண்ரி போட்டிகளில் சோமர்செட் அணிக்காக கடந்த மாதம் விளையாடினார்.

அப்போது அவரிடம் நடத்தப்பட்ட சோதனையில் கனாபிஸ் என்ற ஊக்கமருந்து உட்கொண்டது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து அவருக்கு 3 மாதங்கள் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அவர் ஆட்டத திறனை வளர்க்க போதை மருந்தை உட்கொள்ளவில்லை, ஜாலிக்காக அதனை சாப்பிட்டிருக்கிறார் என்பது தெரியவந்ததால் குறைந்த தண்டனையுடன் தப்பி உள்ளார்.



அப்துர் ரெஹ்மான் இதுவரை 17 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 81 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். 21 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 25 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 05.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது